படைப்பு

ஊற்று-5 | நதி-3 | ஜூலை-2022 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## மொழிக்குள் கவிதையை அடக்கிவிடாமல் கவிதைக்குள் மொழியைக் கொண்டுவரும் வேலையை இன்றைய கவிதைகள் சிறப்பாகச் செய்துவருகின்றன..

எழுத்தாளர் மானா பாஸ்கரனுடனான நேர்காணல்



• வாக்கப்பட ஆச...

- கவிஞர் ஏகாதசி



• அதீத கலைஞனின் தவிப்புகள்

- கவிஜி




• அம்பலமாகும் கோர முகங்கள்

- யோகேஷ். பு

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-5 | நதி-3 | ஜூலை 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **மொழிக்குள் கவிதையை அடக்கிவிடாமல் கவிதைக்குள் மொழியைக் கொண்டுவரும் வேலையை இன்றைய கவிதைகள் சிறப்பாகச் செய்துவருகின்றன..**
  - எழுத்தாளர் மானா பாஸ்கரனுடனான நேர்காணல் -பக். 05
- **வானவில் வண்ண மின்னல்**
  - ஆதிரன் -பக். 19
- **அதீத கலைஞனின் தவிப்புகள்**
  - கவிஜி -பக். 25
- **அம்பலமாகும் கோர முகங்கள்**
  - யோகேஷ். பு -பக். 33
- **“ வாக்கப்பட ஆச...”**
  - கவிஞர் ஏகாதசி -பக். 35
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 40
- **காட்டுத்தீயைக் கட்டுப்படுத்துவோம்**
  - கோ.லீலா -பக். 53
- **மானுடம் பேணும் மனிதநேயக் கவிதைகள்**
  - அரும்பாவூர் இ. தாஹிர் பாட்சா -பக். 56
- **எளிய உரையாக்கத்தின் நோக்கம்கூட மக்களுக்கு இலக்கியங்கள் சென்றுசேர வேண்டும் என்பதே..**
  - கவிஞர் கலைச்செல்வி புலியூர்க்கேசிகன் அவர்களுடனான சந்திப்பு -பக். 58
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 61

## சிறுகதைகள்


- காலத்தச்சன்
  - அன்பு மணிவேல் -பக். 11

- காக்காபொன்
  - ந.சிவநேசன் -பக். 28

- பாளை
  - அருள் வடிவேல் -பக். 46


## கவிதைகள்


- சௌவி -பக். 23
- மா.காளிதாஸ் -பக். 23
- பிரபுசாங்கர் க -பக். 24
- ரிஸ்கா முக்தார் -பக். 24

- பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 22
  - ஜின்னா அஸ்மி -பக். 39




# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' ஐம்பத்தொன்றாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

கலை இலக்கிய மின்னிதழுக்கான கட்டமைப்பினைத் தொடர்ந்து பராமரித்துவருகிறது தகவு. சிறுகதை, கவிதை, கட்டுரை என அனைத்து இலக்கிய வடிவங்களிலும் சிறந்த படைப்புகளைக் கொண்டுவருவதில் முழுமுனைப்புடன் செயலாற்றிவருகிறது.

எழுத்து முன்னோடிகளால் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் தொடர்ந்து வெளியிடப்பட்டுவருகின்றன. இக்காலகட்டத்திற்குத் தேவையான கதைக்களன்களாக அவை அடையாளம் காட்டப்படுகின்றன. புதிய எழுத்தாளர்கள் எழுதும் சிறுகதை அமைப்புகள் முன்னிறுத்தப்படுகின்றன.

படைப்புக் குழுமப் பக்கத்தில் பதியப்படும் சிறந்த கவிதைகள் இனங்காணப்பட்டுத் தகவு இதழில் பிரசுரிக்கப்படுகின்றன. சமூகத்தை விரிவாய் உற்றுநோக்கும் பார்வைகளும் ஆழ்மனத் தேடலுக்கு உள்ளாகும் அதீத நிலைகளும் கவிதைகளாகியுள்ளன. இக்கவிதைப் பிரசுரங்கள்வழி சமகாலக் கவிதைப் படைப்பு எதனை மையமிட்டு நிகழ்கிறது என்பதற்கான தேடலுக்குத் தகவு சிறு புள்ளியைத் தர முயற்சிக்கிறது.

கட்டுரைகள் பல களங்களையும் வெவ்வேறு நடைகளில் சுட்டிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. திரைப்படங்கள் பற்றிய கட்டுரைகளில்கூட, மேலோட்டமாகக் கதை சொல்லும் உத்தியில் அல்லாமல் உள்பொதிந்திருக்கும் பார்வைகளைத் தனக்கான அணுகுமுறைகளுடன் எழுதும் கட்டுரைகள்தான் இடம்பெறுகின்றன. சமகாலச் சூழலியல் படைப்புகளுக்கான முக்கியத்துவத்தை உணர்ந்த நிலையில் தொடர்க் கட்டுரையை வெளியிட்டுவருகிறது. தமிழின் ஆகச்சிறந்த கவிஞர்களை அறிமுகம் செய்யும் மு.முருகேஷ் தனது சொந்த அனுபவங்களுடன் அதனை நிகழ்த்துவது கலைப்படைப்பாக மிளிரச்செய்கிறது. அவ்வப்போது எழும் சிறுசிறு எண்ணங்களைச் சிந்தாமல் சிதறாமல் தரும் தேநீர் சாலை நல்லதொரு விருந்தாய்ச் சமூகம் குறித்த சிறு சித்திரத்தை மாதந்தோறும் வழங்கிவிடுகிறது. இவற்றுடன் தமிழிலக்கியப் பங்களிப்பாளர்களின் சந்திப்புகள், நூல் விமர்சனம், மாணவர் பக்கம் என இலக்கியப் பக்கங்கள் தொடர்ந்து வெளியாகின்றன.

ஒரு இலக்கிய இதழுக்குரிய பணிகளை உணர்ந்து அக்கடமையை இயன்றவரையில் செய்துவருகிறது தகவு.

தகவின் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.


ஆசிரியர். ■

வீரசோழன் க.சோ.திருமாவளவன்



# மொழிக்குள் கவிதையை அடக்கிவிடாமல் கவிதைக்குள் மொழியைக் கொண்டுவரும் வேலையை இன்றைய கவிதைகள் சிறப்பாகச் செய்துவருகின்றன..

## எழுத்தாளர் மானா பாஸ்கரனுடனான நேர்காணல்



எழுத்தாளர் மானா பாஸ்கரன் திருவாரூரில் இருந்து புறப்பட்டு வந்தவர். தமிழ் மீது அளப்பரிய நேசமும் காதலும் கொண்டதால் தமிழ் இலக்கியத்தின் மீது இவர் விரல் படாத இடமே இல்லை. சிறுகதையாய், கவிதையாய், கட்டுரையாய், கதை சொல்லியாய், இன்று ஒரு தகவலாய், திரும்பும் திசையெங்கும் இந்தத் திருவாரூர்த் தமிழ் மணக்கிறது. ஒரு பத்திரிக்கையாளராய், எளிய மனிதர்களின் குரலாய் இந்து தமிழ் திசையின் தலைமைத் துணை ஆசிரியராக இருக்கும் தமிழ்த்திரு மானா பாஸ்கரன் அவர்களுடனான ஒரு நேர்காணல்..

**உங்கள் பூர்வீகம் பற்றிப் பகிருங்கள்..**

எனது சொந்த ஊரைப் பற்றிப் பொதுவெளியில் பகிர்ந்துகொள்ள எனக்குப் பேராசை உண்டு. என் ஊர்தான் மனிதர்களைப் படிக்கவும், அவர்களின் சுண்டுவிரலைப் பற்றிக்கொண்டு படரும் நேசத்தை அறியவும் கற்றுக்கொடுத்தது. முன்பு ஒருங்கிணைந்த தஞ்சாவூர் ஜில்லாவாக இருந்தபோது, நன்னிலம் தாலுகாவில் முடிகொண்டான் என்பதுதான் எனது சொந்த ஊர். இவ்வளவு தெளிவாகச் சொல்ல வேண்டுமா என்று நினைக்கலாம். என் ஊரைப் பதிவு செய்வது என் எழுத்தின் சித்திர வேலைப்பாடுகளில் ஒன்றாகவே கருதுகிறேன். அப்பாவுக்கு நகைத் தொழில். எப்போதாவது கல்யாணத்துக்குத் தாலி செய்ய யாரோ ஒருவர் வருவார். எப்போதாவது அறுந்துபோன சங்கிலியைப் பத்தவைக்க யாரோ ஒருவர் வருவார். மிச்ச நாட்களில் விவசாயம். ஆஸ்துமாவோடும் அமிர்தாஞ்சனோடும் அப்பா தொடர்ந்து மல்லுக் கட்டுவார். மெலிதான வறுமை காய்த்த குடும்பம். ஆறு குழந்தைகளோடு அம்மா சந்தோஷம் பறிக்க முயற்சிப்பாள். என் பரம்பரையில் நான்தான் முதல் பட்டதாரி. இதுதான் எனது சின்னவயதுச் சித்திரம்.

**உங்கள் எழுத்துப் பயணம் எப்போது ஆரம்பித்தது? நீங்கள் எழுத்துத் துறைக்கு வருவதற்கு உத்வேகமாக இருந்தது எது?**

சிறுவயது முதல் நான் ஒரு வால்ட்டர் மிட்டி கேரக்டர். பகல் கனவுக்காரன். எல்லாவற்றிலும் பேரார்வம் எனக்குத் தித்திக்கும். சல்லடையாகிச் சதா எதையாவது சலித்துக்கொண்டே இருக்கும். மாவு சல்லடையாகும். உளுந்து சல்லடையாகும். மணல் சல்லடையாகும். இந்தக் குணம் எதில் எதிலேயோ போய் முட்டி, மோதி, திரும்பி வந்து கடைசியில் கவிதையின் பக்கம் போய் ஸ்டேண்ட் போட்டு நிறுத்தியது எனது சைக்கிளை. கிராமத்தை விட்டுத் திருவாரூருக்கு நகர்ந்தபோது, அங்கிருந்த தமிழ்ச் சூழல் எனது கடைமடை வரை தண்ணீர் பாய்ச்சியது. இந்தத் தருணத்தில்தான் நான் மு.மேத்தாவைக் கண்டடைந்தேன். அவரது கண்ணீர்ப்பூக்கள் புத்தகத்தை நான் வாசிக்காமல் இருந்திருந்தால் எழுதத் தெரிந்த ஓராளாக ஆகியிருக்கவே முடியாது. குமாஸ்தாவாகியிருப்பேன்.

திருவாரூரில் எனது இலக்கிய ஆசான் த.ச.தமிழனார், எழுத்தாளர்கள் ராஜகுரு, சோலை சுந்தர பெருமாள், கவிஞர்கள் ஆரூர் தமிழ்நாடன், வெற்றிப்பேரொளி, மருதவாணன், நீதிதாசன். பாநலவேந்தன், ராஜகுமாரன், திருவாரூர் குணா, கனகராஜன் ஆகிய நண்பர்களின் தொடர்பும் ஆக்கமும் என்னைக் கண்டடையப் பேருதவிப் புரிந்தன. தஞ்சையில் இருந்து வெளிவந்த 'சுகன்' இதழும், கவிஞர் சுகனும், மிகப்பெரும் எழுத்தாளர் தஞ்சை பிரகாஷ் போன்றோரின் நட்பும் எழுதக் கூடுதல் தெம்பு தந்தன. எனது வகுப்புத் தோழராக இருந்த ஆரூர் தமிழ்நாடனும் அவரது குடும்பமும் எனது மேட்டூர் அணை.

**கவிதையில் தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கும்போதே, சிறுகதையின் பக்கம் வந்தீர்கள். நீங்கள் எழுதிய சிறுகதைகள் அப்போதே முத்தான பரிசுகளை வென்றன. ஆனால் அதன் பின்பு நீங்கள் சிறுகதைகள் எழுதவில்லையே. ஏதாவது காரணம் உண்டா?**

கவிதைகளின் பக்கம் தீவிரமாக இயங்கிக்கொண்டிருந்தபோது, திருவாரூரில் சிறுகதை எழுதிக்கொண்டிருந்த வினோதானந்த், ராஜகுரு, சோலை சுந்தர பெருமாள், அடியார்க்கு நல்லான் போன்றவர்களைப் போல நாமும் எழுதிப் பார்க்க வேண்டும் என்கிற பேரவா அரிக்க, சிறுகதை எழுதத் தொடங்கினேன். பத்திரிக்கைகளில் பெயர் வேண்டும் என்கிற உந்துதல்தான் முதன்மையாக இருந்தது. அதற்காகவே ஜடை போட்டு, பொட்டு வைத்து ஜோடித்து, சிங்காரித்த கதைகள்தான் அன்றைய எனது கதைகள். அமுதசுரபியில் 'அப்பா', தினமணிக்கதிரில் 'மனசு', சாவியில் 'வானத்தைக் குழைத்து' ஆகிய கதைகள் முதற்பரிசுகளைப் பெற்றன.

அதன் பிறகு வாழ்வாதாரத்துக்காகப் பத்திரிக்கைப் பணி என்றாகி, யோசிக்கப் பொழுதின்றி ஓடும் வேகத்தில் சிறுகதை கைவிட்டுப் போனது. மீண்டும் இப்போது நவீன வடிவக் கதை எழுதுதல் தொடங்கிவிட்டது. இப்போது வாசிப்பில் அசோகமித்திரன், ஷோபா சக்தி, ராம்தங்கம், நரன், கணேசகுமாரன்





கதைகள் உவப்பூட்டுகின்றன. வாழ்வின் அன்றாடங்களில் முதல் நீராகாரத்தைப் பருகத் துடிக்கும் உண்மைகளை எழுத வேண்டும் என்கிற நினைப்பில் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**‘ஒண்ணு சொல்லட்டுமா’ நிகழ்வு அற்புதமான தரவுகளோடு, புதிய செய்திகளோடு இணையத்தைக் கலக்கியது. அப்படி தினம் ஒரு செய்தியைக் கூற வேண்டும் என்ற எண்ணம் எங்கிருந்து உருவானது?**

ஒரு விழாவில் எனது பேச்சைக் கேட்ட ‘இந்து தமிழ்’ நாளிதழின் இணையதள ஆசிரியர் பாரதி தமிழன் ‘ஒண்ணு சொல்லட்டுமா?’ எனும் தலைப்பில் 100 நாட்கள் என்னைப் பேச வைத்தார். ஆயிரக்கணக்கானவர்கள் பார்த்து ரசித்த அந்த நிகழ்வு, விரைவில் மீண்டும் வரவிருக்கிறது. மண் மணக்கும் தஞ்சைத் தமிழில் கிராமிய விழுமியங்களோடு பேச வேண்டும் என்கிற அடிப்படையுடன் பேசிவருகிறேன். பேச்சுக் கலையில் என்னை மிளிரச் செய்யும் பயிற்சியாளர்களாக இன்றைக்கும் நண்பர்கள் எஸ்.ராஜகுமாரனும், அருள்செல்வனும் திகழ்கிறார்கள். எனது விரல்களில் கணையாழி அணிவிக்க வெற்றியின் கைகள் நீளும்போதெல்லாம் அந்த மகிழ்வை எனது நண்பர்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

**6.7.2019 தினத்தந்தி இதழில் தலைமைச்செயலர் இறையன்பு இ.ஆ.ப அவர்கள் நீங்கள் எழுதிய ‘அன்ரூல்டு நோட்டு’ புத்தகத்தில் இடம்பெற்ற கவிதையைப் பற்றிச் சிலாகித்துச் சொல்லி இருப்பார். அதை நாளிதழில் பார்த்ததும் உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?**

ஒவ்வொரு படைப்பாளிக்கும் பாராட்டும் வரவேற்பும் அமுதூட்டல் மாதிரி. அதிலும் முகநூல் வந்த பிறகு, அவரவர்களும் தனக்குத் தானே முழங்கிக்கொள்ளும் தண்டோராச் சத்தம் காதைக் கிழிக்கிறது. ஒவ்வொருவரும் தனக்குத் தானே பி.ஆர்.ஓ வேலை பார்க்கிறார்கள். பிறரைப் பாராட்டுவதே இல்லை. இப்படியான சூழலில் இறையன்பு அவர்கள் தான் ரசித்து மகிழ்ந்த கவிதைகளைத் தொடர்ந்து பொதுவெளியில் பதிவுசெய்து வருகிறார்கள். அவரது ரசனை வட்டத்துக்குள் என்னுடைய கவிதையும் இடம்பெற்றது மகிழ்வாக இருந்தது.



**நீங்கள் எழுதிய முதல் கவிதை அல்லது முதல் சிறுகதை அச்சில் வந்த அந்தத் தருணம் எவ்வாறு இருந்தது?**

தினமணிக்கதிரில் 1983ஆம் ஆண்டு 'மனசு' என்கிற சிறுகதை வெளியானது. மும்பையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிற ஒருவன், சில ஆண்டுகள் கழித்துச் சொந்த ஊருக்குத் திரும்புவான். அப்போது அவனது பக்கத்து ஊரில் இருந்து வந்து அவனோடு கல்லூரியில் படித்த ஒருவன் கடந்த ஆண்டில் இறந்துபோனதை அறிவான். இறந்துபோன நண்பனின் தந்தை – தாயைச் சந்தித்து ஆறுதல் வழங்க இவன் செல்வான். அதுவொரு கிராமம். போக்குவரத்து வசதியற்றது. ஒரு நிறுத்தத்தில் பேருந்தைவிட்டு இறங்கி... சிறு பாதை வழியாக நடந்து செல்வான். அப்போது எதிரில் வந்த ஒருவர் இவனைப் பார்த்து 'எங்கே செல்கிறீர்கள்' என்று விசாரிப்பார். இவன் இறந்துபோன நண்பனின் தந்தை -தாயைப் பார்த்து ஆறுதல் கூறச் செல்வதாகச் சொல்வான்.

'ஏந்தம்பி... இப்பதான் அவுங்க புள்ளய பறிகொடுத்த சோகத்த மறந்து... வெள்ளாமப் பார்க்க ஆரம்பிச்சிருக்காங்க. நீங்க திடீர்னு போயி அவங்க சோகத்தைத் தூண்டிவிடப் போறீங்களா' என்று கேட்டுவிட்டுப் போய்க்கொண்டே இருப்பார் அந்த வழிப்போக்கர்.

'ஆமாம்ல... இவுரு சொல்றதும் வாஸ்தவம்தான்' என்று நினைத்தபடி அந்த வழிப்போக்கரைத் திரும்பிப் பார்ப்பான். அவர் காணாமல் போயிருப்பார் என்று கதை முடியும். எனது இளம்பருவத்தில் இந்தக் கதை அச்சில் வந்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

**'இந்து தமிழ்' நாளிதழில் தினமும் வெளியான 'காந்திமகான்' படக்கதை பெரும்**

**வரவேற்பைப் பெற்ற ஒரு தொடர். இளைய சமூகம் படித்துப் பயன்பெற பெரும் வாய்ப்பாக அமைந்தது. இப்படி எழுத வேண்டுமென்ற ஆவல் எப்படி பிறந்தது?**

'தினத்தந்தி'யில் வெளியாகும் 'கன்னித்தீவு' போன்று, நமது 'இந்து தமிழ்' நாளிதழிலும் ஒரு படக்கதை வெளியானால் நன்றாக இருக்கும் என்று 2013ஆம் ஆண்டு 'இந்து தமிழ்' தொடங்கியபோது எங்கள் ஆசிரியர் குழுவில் தீர்மானித்தனர். எங்கள் நாளிதழின் ஆசிரியர் அசோகன் அவர்கள், 'காந்திமகான்' படக்கதையை எழுதும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். 640 நாட்கள் வெளியான அந்தப் படக்கதை பெரிய புத்தகமாக விரைவில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரவுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நீங்கள் நேர்காணல் கண்டதில் மறக்க முடியாத மனிதர்..**

அய்யா நல்லகண்ணு அவர்களை நேர்காணல் செய்ததைத்தான் பெரும் வரமாகக் கருதுகிறேன். அவரிடம் நான் 'வாழ்க்கையின் முக்கிய நோக்கமாக எது இருக்க வேண்டும்?' என்று ஒரு கேள்வியை முன்வைத்தபோது 'மனித நேயத்தை...' என்று சட்டென்று பதில் சொல்லி நெகிழவைத்தார்.

**தமிழ் இலக்கியப் பரப்பில் வாசகனாக உங்களை மிகவும் பாதித்த எழுத்தாளர் யார்? எதனால்?**

கவிஞரும், எழுத்தாளருமான அண்ணன் வண்ணதாசனைத்தான் சொல்வேன். எனது பைபிள், குர்ரான், கீதையாகவே அவரது நூல்களை நான் உணர்கிறேன். எனக்குள் கண்ணாடிப் பூக்களைப் பூக்கவைத்தவை அவரது எழுத்துக்கள். புளகாங்கிதத்துடன் சொல்வதாகவோ, மிகையுணர்ச்சிப்படுகிறேன் என்றோ இதை நீங்கள் சொன்னால் நான் கவலைப்பட மாட்டேன். ஒவ்வொரு முறையும் அவரது எழுத்துக்களை வாசிக்கிற பொழுதுகளில்... என்னால் வெளிச்சத்தைக் கைகளால் பிடிக்க முடிகிறது. தண்ணீரைக் கிள்ள முடிகிறது. ராத்திரியைத் திறக்க முடிகிறது. இதை இப்படித்தான் என்னால் சொல்ல முடியும்.

**எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்கள் கடைசியாக உங்கள் கேள்விக்குத்தான் பதில் அளித்து இருந்தார். மகத்தான எழுத்தாளருடன் மறக்க முடியாச் சம்பவங்கள் பற்றிப் பகிருங்கள்.**

எங்கள் இந்து தமிழில் எழுதிய தொடர்தான் பிரபஞ்சன் சாரின் கடைசித் தொடர். இறுதி எழுத்தும் அதுதான். நான் எழுதி ஒரு ஆள் மூலம் வாரா வாரம் உங்கள் கைகளில் கொடுத்துவிட ஏற்பாடு செய்துவிடுகிறேன் என்று அவர் தொடக்கத்தில் கூறினார். 'வேண்டாம் நானே உங்களை அணுகி வாங்கிக்கொள்கிறேன்' என்று சொல்லி, அவரைச் சந்திக்கும் மகிழ்ச்சிக்காகவே வாரா வாரம் அவரைத் தேடிப் போவேன். விடுதியில் தங்கியிருக்கும் அவர் காலாற என்னுடன் நடந்து வந்து தேநீர் அருந்திவிட்டு வழியனுப்பி வைப்பார். அவர் பேச நான் கேட்டுக்கொண்டே இருப்பேன். 'பல்லு தெரியாத உங்க சிரிப்பு எனக்குப் புடிச்சிருக்கு' என்பார்.

பிரபஞ்சன் சார் எனக்கு ஒரு சட்டை அன்பளித்தார். 'வேண்டாம் சார், உங்க அன்பு மட்டும் போதும் சார்' என்றேன். பக்கத்தில் இருந்த பி.என்.எஸ்.பாண்டியன் 'உங்களுக்காகவே சாரு வாங்கியாந்து வெச்சிருக்காரு' என்று வற்புறுத்த வாங்கிக்கொண்டேன். இப்போதும் நினைவில் வாழ்ந்துகொண்டிருக்கிறார் பிரபஞ்சன் சார்.



**நீங்கள் கவிதை உலகத்தின் எல்லாக் கட்டங்களையும் பார்த்தவர். தற்போதைய கவிதை உலகம் எப்படி உள்ளது? உங்களைக் கவர்ந்த இளம் கவிஞர்கள் பற்றிக் கூறுங்கள்.**

இன்றைய நவீன கவிதை உலகம் மிகச் சிறப்பாகவே உள்ளது. வாழ்வில் எல்லாத் தருணங்களையும், சிக்கல்களையும் மொழிக்குள் அடக்கிவிட முடிகிறது. 'சித்தார்த்தன் புத்தன் ஆனான்/யசோதரை என்னவானாள்?' எனப் புத்தனைத் தோண்ட முடிகிறது ஒரு கவிஞனால். 'எனக்கு வேண்டும் உலகம் ஒரு கடலாய் / உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்' என்று இன்குலாப்பால் எழுத முடிகிறது. 'ஒரு குவளைத் தண்ணீரைக் கையிலேந்தி/ என் ரோஜாப் பதியன்களுக்கு ஊற்றுகிறேன்/நான் ஊற்றும் நீரைவிட/ நான்தான் முக்கியமதற்கு' என்று ஆத்மாநாமால் எழுத முடிகிறது. மொழிக்குள் கவிதையை அடக்கிவிடாமல் கவிதைக்குள் மொழியைக் கொண்டுவரும் வேலையை இன்றைய கவிதைகள் சிறப்பாகச் செய்துவருகின்றன.



இன்று பூவிதழ் உமேஷ், வீரசோழன் திருமா, மௌனன் யாத்ரீகா, கனகா பாலன், பெருமாள் ஆச்சி, பெரு விஷ்ணுகுமார், ஆண்டன் பெனி, கோ.லீலா, சுசித்ரா மாறன், நிலா கண்ணன், தஞ்சை தவசி, ஷக்தி மித்ரா இன்னும் நிறைய பேர் மிகச் சிறப்பாகக் கவிதை எழுதிக்கொண்டிருக்கின்றனர்.

**உங்கள் ஞாபக அலமாரியில் பத்திரமாக இருக்கும் உங்கள் முதல் எழுத்துப் பயணத்துக்கான அங்கீகாரம் அல்லது விருது?**

வலம்புரிஜான் ஆசிரியராக இருந்த 'தாய்' வார இதழில் வெளிவந்த 'அம்மாவின் / எல்லா நகையும் / மூழ்கியது / நான் கரையேறினேன்' என்கிற எனது கவிதையையும் அக்கவிதையை - எனது இலக்கியத் தந்தை த.ச.தமிழனார் அவர்கள் உச்சி முகர்ந்து பாராட்டியதையும் அம்மாவின் முந்தானையைப் போல இன்றும் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

**தற்போது என்ன எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்?**

தொழில்மயம், நகர்மயம், இயந்திரமயம், நாகரிக மேட்டிமை ஆகியவை பழமையான நமது தொழில்களைச் சிதைத்துவிட்டன. அவற்றையே ஒற்றை வருவாயாகக் கொண்ட அந்தத் தொழிலாளர்களின் வாழ்வும் வளமும் சேதாரமடைந்துவிட்டன. எனது பூட்டனும் பாட்டனும் அப்பனும் செய்துவந்த நகைத் தொழிலை எனது சகோதரனோ, நானோ செய்ய முடியவில்லை. வேறு வழியின்றி அத்தொழிலை மேற்கொண்ட எனது தலைமுறையைச் சேர்ந்த பலர் நீலச் சட்டை அணிந்துகொண்டு பெரு நிறுவனக் காவலாளிகளாக உருவமழிந்துவிட்டார்கள். இந்த நீண்ட பெருவெளி வாழ்வை, தொழிலை, அதன் சிதைவைப் பதிவு செய்யும் வகையில் 'தொங்கட்டான்' என்கிற நாவல் உருவெடுத்துவருகிறது. எனது பெரும்படைப்பாக இதைக் கருதுகிறேன். 'இந்து தமிழ்' நாளிதழில் நான் தொடர்ந்து எழுதிவந்த 'புத்தருடன் ஒரு காலை நடை' என்கிற 400 பக்கங்களுக்கும் மேலான ஆய்வு நூலும் உருவாகிறது. இந்த இரண்டு நூல்களும் வரும் நவம்பர் மாதத்தில் வெளிவரவுள்ளன. ■

அம்மையார் ஹைறூன் பீவி
சிறுகதைப் போட்டி

**சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை**

**அன்பு மணிவேல்**

ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்

# காலத்தச்சன்



“அந்த வீடு மட்டும் ஏன் இப்படியிருக்கு. ஒரு பாட்டி மட்டுந்தான் இருக்காங்க போல.”

“அந்த வீடா.. அதையேன் கேக்குறிங்க. அதுவொரு நாய்ப் பைத்தியம். எப்போப் பாரு.. வீட்டைச் சுத்தி நாயி, மாடு, பூனைன்னு கூட்டி வச்சுக்கிட்டு சோத்த வைக்கிறேன் தண்ணிய வைக்கிறேன்னு தெருவ நாறடிச்சுக்கிட்டு. திமிரு புடிச்சது. யாருக்கிட்டயும் பேசாது. அந்தக் காலத்துலயே ஏதோ பெருசாப் படிச்சிருக்கும் போல. கடைக்குப் போகையில.. பொன்னையன் சொல்லுவாரு. பாதிக்குப் பாதி இங்கிலீசுதான் பேசுமாம். அண்ணெ அக்கான்னு அந்த வீட்டுல யாருக்குமே கல்யாணம் ஆகலியாம். எல்லாரும் போய்ச் சேந்து.. அது மட்டும் கெடந்து அலையுது இப்டி. அதுக்கும் எம்பதுக்கு மேலதான் இருக்கும்.”

நீட்டி முழக்கிய வீட்டுக்காரம்மாவின் இந்தப் புகழாரமே போதுமானதாக இருந்தது.. பாட்டியின் மீதான எனது ஈர்ப்புக்கு. அண்டை அயல்களிலிருந்து வேறுபட்டு நிற்கும் எவருக்கும் இங்கே பைத்தியப்பட்டம்தானே கிடைக்கிறது. சக உயிர்களின் மீதான அரவணைப்பிலிருந்து மனிதன் எப்போதுமே அன்னியப்பட்டுத்தான் நிற்கிறான். அப்படி அரவணைக்கும் கரங்களும்.. இப்படித்தான் தோற்றப் பிழையாகிக் காட்சிப் பொருளாகி விடுகின்றன.

நான் இங்கு குடிவந்து ஒரு வாரம்தானாயிற்று. வந்ததுமே என் கண்ணை உறுத்தியது.. எனக்கு எதிர்க்கேயிருந்த அந்த இரண்டாவது வீடும்.. பாட்டியும்தான்.

எண்ணெய்ச் சீசாவுக்குள் விழுந்துவைத்து மிதக்கும் தண்ணீர்த் துளியைப் போல.. பளபளவென்று மினுக்கும் வீடுகளுக்கிடையே.. பாழடைந்த நிலையில் ஒரு நூற்றாண்டுத் துயரத்தைத் தின்று செரித்த தொல்லியத்தின் சின்னமாகத்தான் அந்த வீடு எனக்குக் காட்சியானது. அத்தனை வீடுகளும் வெய்யிலின் மீதமர்ந்தபடி வெறுமையோட்டிக் கொண்டிருக்க.. கடலுண்ட பவளமாகப் பாட்டி வீடு மட்டும் எப்போதுமே மழைக்குக் குடை பிடித்தாற் போல நாலா பக்கமும் மரங்கள் சூழத் தன்னைப் புதைத்துக்கொண்டிருந்தது.



டிபன் ரெடியா.. தா.. தா.. நேரமாச்சுயென ஆலாய்ப் பறக்கும் காலை நேரத்து அலுவலகக் கணவனைப் போல.. கருக்கலிலேயே பருக்கைக்கெனப் பாட்டியைக் கா.. கா.. வெனத் துரத்தியபடி பறக்கத் துடிக்கின்ற காக்கைகளின் சுப்ரபாதத்தில்தான்.. தெருவே விழித்துவைக்கும். உச்சி நோக்கி நேரம் கணிக்கும் உழவனைப் போல.. நாயும் சோறுமாகப் பாட்டியைக் காணுகிற கண்கள்.. இப்போது இரவு ஒன்பதுயென்று குறித்துக்கொள்ளும்.

இடைப்பட்ட பொழுதிலெல்லாம் வந்துபோகும் மாடுகளுக்கென நீர் நிரப்பியவாறோ.. வந்துபோக வேண்டுமெனவே புள்ளினங்களுக்குத் தானியம் இறைத்தபடியோ.. அண்டியிருக்கும் பூனைக்குக் கதையோட்டியபடியோ... மண்டியிருக்கும் முதுமரங்களிடம் மனு கேட்டபடியோ.. நொண்டிக் குருவிக்குப் பண்டிதம் பார்த்தபடியோ... என் பால்கனி வேடிக்கையெல்லாம் ஒரு காலத்தின் பிழையாகத்தான் எனக்குள் இழைந்திருந்தார் பாட்டி.

ஒரு தனி மனிதக் கருத்தை வைத்து எந்தவொரு முன்முடிவுகளோடும் எதுவொன்றையும் அணுகிப் பழகியிராத என் கண்களுக்கு.. இது போதாதா பாட்டியோடு நான் மானசீகமாகக் கைகுலுக்கிக் கொள்வதற்கு. பிழையும் பிழையும் தானே இழையுமென்பதாக.. இரண்டொரு நாளிலேயே நேருக்கு நேராக நாங்கள் இருவரும் விழித்துக்கொள்ள நேர்ந்ததில்.. சினேகச் சிரிப்பொன்றினைப் பிள்ளையார் சுழியாக்கி வைத்தேன்.

“எதுக்குச் சிரிக்கிற என்னைப் பாத்து. நான் பைத்தியம்னு இங்க யாரும் சொன்னாங்களா..” என்றொரு அதட்டலில் வெலவெலத்துப் போனதெனக்கு.

“அய்யோ பாட்டி.. தப்பால்லாம் ஒன்னுமில்ல. எங்கம்மா வீட்ல இப்டித்தான் டெய்லி தெரு நாய்க்கெல்லாம் சோறு வைப்போம். தெருவே திட்டிக் கொட்டும். இங்க உங்கள அப்டிப் பாத்தவுடன எனக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சு. எங்கம்மாட்ட கூடச் சொன்னேன்.. உங்கமாரியே இங்க ஒரு பாட்டி இருக்காங்கம்மான்னு..”

என் பதற்றத்தில் அவர் கொஞ்சம் இலகுவானார்.

“ஓஹ்.. அப்ப நீயும் பைத்தியந்தான்னு சொல்லு” என்றவர் அப்போதுதான் உன்னித்தவராக.. “மாஸ்க்கில்லாம இப்டிச் சுத்துற. சேஃப்டி அவேர்னெசே இல்லாம. போப்போ” சட்டென்று நகர்ந்துகொண்டு.. என்னை ஒருகணம் வெட்கிக் குறுகவைத்தார்.

அல்லவைகள்தான் அதுவாக நம்மைத் தேடியடைந்து கொள்ளும். நல்லவைகளை நாம்தானே நாடியோட வேண்டும். பாட்டியை அணுகுகிற என் தேடலுக்குச் சிக்கியது.. அவர் வீட்டு மருதாணி. விடுவேனா நான்? மருதாணி பறிக்கிற சாக்குப் போக்கில் அவரையே பறித்துக்கொள்ளுகிற முனைப்போடு.. “மருதாணி பறிச்சுக்கட்டுமா பாட்டி?” என்றேன்.

“மரமெல்லாம் தூங்குற நேரம். மருதாணி

பறிக்க சாயங்காலந்தான் கிடைச்சுதா உனக்கு. காலையிலேர்ந்து என்ன செஞ்ச. அதுவும் நம்மப் போல ஒரு பொறப்புதான். இப்பத் தொந்தரவு பண்ணக்கூடாது அத. காலையில வந்து எம்புட்டு வேணாப் பறிச்சுக்க" படக்கென்று முகம் முறித்துக்கொண்டதில்.. என் மீது தெறித்து விழுந்த அவரது அகத்தின் அழகு முழுதாய் அடையாளப்பட்டது எனக்கு. மரமும் உறங்குமென்று சொல்லி என் முப்பது வயதில்.. எனக்குப் போதியாகி இருந்தார் பாட்டி.

நான் நினைத்தாலெல்லாம் பேசிவிட முடியாது அவரோடு. அவர் நினைக்க வேண்டும். பல நேரங்களில் பாராமுகம்தான். புரியாதபடிக்கு அடுத்து வரும் நாட்களில் அவரைப் பாராது நான் கடந்துவிட்டால்.. "என்ன.. பாக்காமப் போற. அவ்ளோ ஆயிருச்சா உனக்கு?" என்று கூவியழைத்து அதட்டுவார்.

அப்படி வாய்க்கும் பேச்சுக்களிலும்கூட.. வந்ததையெல்லாம் துப்பி வைக்கும் திண்ணையாக இல்லாது.. சுற்றுப் பயணத்திலிருக்கும் பிரதம மந்திரியின் தற்போதைய இருப்பைச் சொல்லுகிற செய்தியைப் போல... கொரானோவின் இப்போதைய இருப்பிடம் சொல்லி.. தொடர்ந்து நாட்டு நடப்புகளில் அதிரவைப்பார்.

பொன்னையன் கடைக்குச் சும்மா போவதில்லை அவர். வந்து நிற்போருக்கு வழிவிட்டு நிற்பதாய்.. தினசரிகளில் முடிந்தவரைக்கும் முடிந்து வந்திருப்பார். நேற்றைக்கு நிறுத்திவைத்துப் பேசிய உவப்பில் இன்றைக்குக் குசலம் கேட்டுவைத்தால்.. "கதை கிடைக்கிற இடத்துல காதைத் தொங்கப்போட்டு உக்காந்துருவீங்க போல. போ.. போ.. எனக்கு வேலையிருக்கு" கதவை அடைத்துக்கொள்வதாக.. மனதை அடைத்துக்கொள்வார்.

கொஞ்சம் நான் அவரை நெருங்குவதாகப் பட்டாலும் உள்ளொடுங்கிக் கொள்ளும் நத்தை அவர். ஏகப்பட்ட மனிதப் பற்களுக்கு இரையாகிப்போனதன் வடுவாகக் கூட இருக்கலாம் அதுயென்ற யோசனையின் மீது கசப்புத் தட்டியதெனக்கு. கசக்கினால் கசந்துபோகும். தானாகக் கனிவதே இனியதென்று அவர் போக்கில் நான் பக்குவம் காத்தேன். அது பாராமுகமில்லை.. தன்னைச் சூழ்ந்திருக்கும் நிகழ்வின் மீது அவர் நிற்பதேயில்லை என்பது அவரைக் கவனிக்கக் கவனிக்கத்தான் தெரிய வந்ததெனக்கு. நாமெல்லாம் நிகழ்வில் உலத்திக்கொண்டு.. நினைவோடு உழன்றுகொண்டிருப்போம். அவர் தன் நினைவுகளோடு உலத்திக்கொண்டு.. நிகழ்வில் உழன்றுகொண்டிருப்பதைக் கண்டெடுத்தேன் நான்.

ஒருநாள் எதிரேயிருந்த காலிமனையைக் காட்டி.. "அங்க பாரு.. அந்தக் காலி ப்ளாட்ல பால் குடுத்துட்ருக்காளே.. அவ பேரு ரோசி. அவ குட்டிங்க இல்ல அதெல்லாம். அவ குட்டிங்கெல்லாம் பொறந்தவுடனயே மைனா கொத்திக் கொத்திச் செத்துப் போச்சுக. இதுங்க தாய் சடைச்சி.. இப்பத்தான் அங்கிட்டுப் போனா. ஆனா.. இவளும் இதுகளுக்குப் பால் குடுப்பா. அந்தா நிக்கிறானே கருப்பு.. அவன் இதுகளுக்கு அப்பன் இல்ல. இப்பத்தான் வந்து சேந்தான் அவன். அவன் என்ன செய்வான் தெரியுமா. அந்த ரெண்டு தாயும் இந்தக் குட்டிங்களும் நைட்ல அந்தப் புதருக்குள்ள படுத்துருக்கையில.. இவன் வெளியில படுத்துக் காவக் காப்பான். இதெல்லாம் மனுசங்கிட்டப் பாக்க முடியுமா சொல்லு. இதெல்லாம் ஏன் என் கண்ணுக்கு மட்டும் தெரியுது. யாராச்சும் இதக் கவனிக்கிறாங்களா. நாந்தான் ஒக்காந்து இதக் கவனிச்சுட்ருக்கேன். அப்போ நான் பைத்தியந்தானே."

கிட்டே வந்து பாட்டியை முகர்ந்து நிற்கிறாள் ரோசி. அதன் மடிக்கேகியபடியே அழகு காட்டுகின்றன குட்டிகளும்.

"அண்ணெ வீட்டுல தின்னுட்டுத் திண்ணெ வீட்டுல படுத்த வெண்ணெயங் கதையா.. இங்க பால்ச்சோறு சாப்புட்டு அங்க அந்த பாயம்மா வீட்டுக் காருக்குக் கீழ

படுத்துருக்காம் பாரு செவல. அவனுக்கு மட்டுந்தான் கொஞ்சூண்டு மனுசப்புத்தி. அது அங்க விழுகுற பிரியாணியோட வேலை. மத்த ஆறேழும் ஏம்பால்ச்சோறு தாண்டி எங்கியும் நகராதுக."

தன்னைக் குறித்தான மனிதப் பார்வைகளின் மீதெல்லாம்.. யாதொரு மனமயக்கமும் இல்லை பாட்டிக்கு. இன்று தூவிய தானியத்துக்கு எத்தனை குருவி வந்துபோனது.. எந்த மாடு நீரருந்த வரவில்லை.. சடைச்சி ஈன்றதில் மீந்திருப்பது எத்தனையென்று.. எப்போதுமே அவருலகம் தனியுலகமாகத்தான் இருந்தது.

இப்படித்தான்.. சலசலத்த ஒரு சாரலிரவில் ரோட்டைக் கடந்து பாட்டிவீட்டுக் காம்பவுண்டுக்குள் தஞ்சமடைந்துகொண்ட ஒரு பாம்பைக் கண்டுவிட்டதில் தெருவே கம்பும் கையுமாக அவர் வீட்டுச் சுவரேறியிருந்தது. வந்தவர்களை விடவும் விசமில்லை அதுயென்ற தனக்கேயுண்டான விசாரத்தின் தெளிவில்.. "பின்பக்கச் சுவரேறி அது அப்போதே வெளியேறிவிட்டது" என்று கொஞ்சமும் பதறாமல் ஒற்றை வார்த்தையைத் தூக்கியெறிந்து பரபரத்துக்கொண்டிருந்த கலவரத்தை உடைத்தெறிந்துவிட்டு.. தன் போக்கில் நாய்களுக்குப் பந்தி வைக்கத் தொடங்கிவிட்டார் பாட்டி. செத்துச் சுண்ணாம்பாகட்டும் என்று முணங்கித் திரும்பியது தெரு. பாம்புக்கு வேடிக்கை காட்டவெனத் தெரு இறங்கியிருக்க.. தெருவுக்கு வேடிக்கை காட்டியிருந்தார் பாட்டி.

அசந்துபோய் நின்ற எனக்குச் சமாதானம் சொல்வதாக.. "அதொன்னுமில்ல. வீட்டுக்குள்ள ரெண்டு எலியிருக்கு. அதத் தேடி வந்துருக்கும் பாம்பு. சக்கரையக் காட்டி எறும்பக் கூப்புடுற ஆளு நானு. எலிக்கு மருந்தும் பாம்புக்குக் கம்பும் தேடுவேனா. அதது வரும் போகும். எத்தன வருசமா வருது போகுது" என்றார்.

"பயமால்லியா பாட்டி."

"அது கொத்திக் குடிக்கன்னு எங்கிட்ட என்னா இருக்கு. நான் செத்த பாம்புன்னு அதுக்குத் தெரியும்."

"இருந்தாலும்.. வராண்டால இருக்குற அந்த அடைசலையெல்லாம்..."

"அடசலா.. இந்த அடுக்கெல்லாம் பெரியக்காவோட கோல நோட்டு.. சின்னக்காவோட பாட்டுப் புத்தகம்.. எங்கம்மாவோட செலவுக் கணக்குக. அது சின்னண்ணெ சைக்கிளு. இது பெரியண்ணெ பேட்டும் பந்தும். மதராஸ்லேர்ந்து எங்கப்பா வாங்கியாந்த கடிகாரம் இது. இந்த ஈசிச்சேர்ல உக்காந்துதான் எங்கப்பா பேப்பர் படிப்பாரு. நானே ஒரு அரதப் பழசுதான். என்னைத் தூக்கிப் போடுறப்போ இதெல்லாம் யாராச்சும் தூக்கிப் போடுவாங்க."

அதுவெல்லாம் புழுதியல்ல அவரது காயங்களுக்கான விழுதுயென்பதை.. "எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக.. எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க" யென்ற வைரமுத்துவின் வரிகள் என் தலையைத் தட்டியபடி உணர்த்திவிட்டுப் போயின.

திடீரென்று நினைப்போட்டியவளாக.. "உங்க பேரென்ன பாட்டி" யென்றேன். "ஐ திங்க்.. எம்பேரு இங்க யாருக்குமே தெரியாது. இதெல்லாமே இப்ப முளைச்ச வீடுக. உம்பேரென்ன."

"விஜி."

"விஜி. நல்லாருக்கு. நான் சுசீலா. பி.சுசீலா சாங்க்சுனா எங்கப்பாக்கு உசிரு. அந்தப் பிரியத்துக்கு வச்சுட்டு.. மரியாதையில்லேன்னு பேர் சொல்லிக் கூப்பிட மாட்டாரு. அவங்கம்மாவக் கொண்டிருக்கேன்னு தாயம்மான்னுதான் கூப்புடுவாரு."

எதிரில் அப்பா இருப்பது போலவே.. கனிகிறது முகம்.

"அஞ்சாவது புள்ளெ நானு. ரெண்டு அக்கா ரெண்டு அண்ணன். ரெண்டு அண்ணனும்

இன்சினியரிங்க். பெரியக்கா இண்டர்மீடியட். சின்னக்கா பி. ஏ. நான் பி. எஸ். சி. மேத்ஸ். பெரியண்ணன் கிறிஸ்டின் பொண்ணைக் கட்டிக்கிட்டுத் தனியாப் போயிட்டான். அத்தோட சரி. எங்க யாருக்கும் கல்யாணம் ஆகல.''

''ஏம்.. பாட்டி..''

விழுங்கிவைத்ததை இழுத்துவைத்துக் குதப்பிப்பார்க்கும் எருதைப் போல... தின்று செரித்த கடந்தகாலக் கசப்புக்களைத் திரட்டியெடுத்து உருட்டுகிற பாவனை.

''எங்கதயெல்லாம் கேட்டின்னா உனக்குக் கஷ்டமாருக்கும். எங்க பெரியக்காவுக்கு ஒரு அத்தப் பையனைப் பேசி முடிச்சிருந்தோம். எங்க சித்தியொருத்தங்க அதத் தெச திருப்பிவிட்டுத் தாம் பொண்ணுக்கு முடிச்சுக்கிட்டாங்க. அதுக்கப்புறம் எதுவும் அவளுக்குத் தெகயவும் இல்ல. நோகவும் இல்ல''.

அனலாக ஒழுகியோடியது.. ஒரு பெருமூச்சு.

''எம்மேல.. என் தாய்மாமாவுக்குச் சின்னதுலேர்ந்து ரொம்ப இஷ்டம். அதுயென்னாச்சுன்னா... எங்க பெரியம்மா ஒன்னு விடோ. எம்மாமாவ வளத்துக்கிட்டு எம் பாட்டி வீட்டுலதான் இருந்தாங்க. அக்காப் பொண்ணைக் கட்டி அந்தப் பக்கமே சாஞ்சுட்டா தம்பி நம்மள விட்ருவானோன்னு பயம் அவங்களுக்கு. கட்டவே கூடாதுன்னுட்டாங்க. வளத்த அக்காவ மீறவும் முடியாம.. நினைச்ச அக்காப் பொண்ணக் கட்டவும் முடியாம.. போராடிப் பாத்துட்டு....''

கோணிக்கொண்டோடிய கன்னத்துச் சதைகளை இழுத்துப் பிடித்துக் கட்டப் பார்த்துத் தோற்றுப்போனவராக மெல்ல வாயுதிர்த்தார்..

''சூசைட் பண்ணிக்கிட்டாரு.''

அவர் உடைந்திருக்க.. நான் உறைந்திருந்தேன்.

''உணர்ந்தன மறக்கும்.. மறந்தன உணரும்.. புணர்ந்தன பிரியும்.. பிரிந்தன புணரும்'' என்ற பட்டினத்தாரைப் போய்த் தொட்டுவிட்டு வந்திருந்தேன் நான்.

''சின்னதுலேர்ந்து பெரியவங்கதான் எங்களப் பேசிக்கிட்டு இருந்தாங்க. பாக்கையிலெல்லாம் குனிஞ்சுக்குவோம் நாங்க. அப்டித்தான் புரிஞ்சுக்கிட்டோம்.'' கவிதையான வார்த்தைகள்.. கனமாகத் தாக்கின.

தன்னையே கதியென்று சரணடைந்ததனைக் குனிந்தெடுத்துக் கண்டுகொண்டதுதான்.. இப்போது நரையெழுதி.. கூனெழுதி.. கூடெங்கும் தோலில் வரியெழுதிய பின்னும்.. கிளர்த்திக்கொண்டிருக்கிறது இவரை.


நிமிர்ந்து பார்த்து எல்லாமும் புரிந்துகொண்ட நமக்குத்தான் தட்டியங்காட்டுப் போராகத் தட்டுக்கெட்டுப் போகின்றன.. தினங்கள். குனிந்தால்தான் நிமிர்ந்து விடுவோமே.

''இதுக்கெல்லாம் நாந்தான் காரணம்னு பெரியம்மா.. சித்தியெல்லாம் அத்தோட முறிச்சுக்கிட்டாங்க எங்க ஒறவ. அந்தக் கில்டியிலயே எனக்கும் வேறெதுக்கும் நோக்கப்படல.''

''அவரு...பேரு பாட்டி.''

''வைத்தி... வைத்திலிங்கம். பி. எஸ். சி., பி.இ.''

பூக்களை உதிர்ப்பதாகத் தன் உயிரை உச்சரித்திருந்தார். உரலுக்குள் தலையிட்டவனுக்கு மண்டையிடி நிச்சயம் போலத்தான் உறவுக்குள் தலையிட்டவனின் கதையுமென்பதாக.. தன் இரத்தங்களே தங்கள் துவேசங்களையும் துரோகங்களையும் முலைப்பாலெனப் பருகத் தந்து குடும்பத்தின் மொத்த உயிர்களையும் உருவியெடுத்துக்கொண்ட அந்த அடிப்பெருத்துச் சீழ்ப்பிடித்ததொரு ஆகக்



கொடும் வலியின் கீழ்தான்.. சனவாடையே சர்ப்பதோஷம் என்பதான ஒரு உள்ளப்பதிவு அவருக்குள் தீர்ப்பாகியிருக்க வேண்டும் என்ற எனது கூராய்வினைத் தட்டிக் கொடுத்துவிட்டுப் போனது.. பாம்பை வீட்டுக்குள் வைத்துக்கொண்டு மனிதர்களை விரட்டியடித்ததன் சாரம்.

“பெரியக்காவுக்கு ஆகலேன்னு சின்னக்கா பண்ணிக்கல. எங்களுக்கெல்லாம் ஆகலேன்னு சின்னண்ணனும் பண்ணிக்கல. பெரியண்ணனைப் போலத் தன்னையும் வர்ரவ தனியாக் கூட்டிட்டுப் போயிடுவாளோன்னு பயம் அவனுக்கு. இப்டியே போயிருச்சு”.

“கூடப் பொறந்ததெல்லாம் கூனியாவும் பெத்ததெல்லாம் மூளியாவும் நிக்குதேன்ற கவலையிலயே முதல்ல எங்கம்மா டிக்கெட்டு வாங்குனா. உசுரத் தேடிக்கிட்டுப் பின்னாடியே போச்சு.. எங்கப்பா உடம்பு. அப்புறம்.. ப்ராப்தம் முடிஞ்சவங்க ஒவ்வொருத்தரா போயிச் சேந்துட்டாங்க. என் கடன் இன்னும் தீரல போல.”

நினைவைப் பல்லக்கெனச் சுமக்கலாம். பாடையெனச் சுமக்க முடியுமா..

“ஆனா இவங்க யாரும் மனசால என்னை விட்டுப் போகல. இப்போ வரைக்கும் எப்போல்லாம் நான் தடுமாறி நிக்கிறேனோ அப்போல்லாம் இவங்கெல்லாந்தான் என்னைத் தாங்கிப் புடிச்சுக்கறாங்க. இல்லாட்டி எனக்கேது பலம்.”

பாட்டியின் சேலையைப் பிடித்திழுக்கிறாள் ரோசி.

“இவளுக்குப் பால்கோவா வேணும் இப்ப. தெரியாத்தனமா ஒருநாள் குடுத்துட்டேன். அதுலேர்ந்து புடிச்சுக்கிட்டா. மத்ததுக்கெல்லாம் வர்க்கி போதும். பொன்னையனுக்குப் பால்கோவா வர்க்கிக்கே மாசம் ஒரு மொய்யி.

இதெல்லாம் வெறும் ஸ்நாக்சுதான்.”

“இந்தச் செலவெல்லாம் பாட்டி.. எதுனா வொர்க் பண்ணிங்களா நீங்க..”

“செலவென்ன செலவு எனக்கு. நைட்டு ஒருவேளைப் பால்ச்சோறு மட்டுந்தான் எங்க எல்லாருக்குமே. அரிசியும் சீனியும் ரேசன்ல வந்துரும். சோத்துக்கு அரைலிட்டரு பாலும் பால்கோவா வர்க்கியும்தான் செலவு.”

பால்கோவாவும் வர்க்கியும் பங்கு வைக்கப்பட்டன.

சத்தமின்றி சமரசம் விளையாடிக்கொண்டிருந்தது அங்கே.

“பெரியார் ஸ்கூல்ல மேத்ஸ் டீச்சரா இருந்தேன். எனக்குத் தேவையானது இருக்கு.. போதும்” உள்ளொடுங்கப் பார்க்கிறது நத்தை.

“எங்கவலையெல்லாம்.. இவுங்களப் பத்திதான். இத்தனை தூரம் வளத்துட்டு அம்போன்னு தூங்கயிலேயே போயிட்டேன்னா பாவமில்லயா. தவிச்சுப் போயிருவானுங்களே. இதுங்களுக்கு ஒரு வழிகாட்டாம என்னை அழைச்சுக்கப்படாது அந்த பகவான்.”

“பேப்பர்ல படிச்சேன்... தமிழ்நாடுதான் யாரோரு பையன். வளத்துக் கைவிடப்பட்டுத் திரியறது.. தெருநாய்கள்னு இதுங்களையெல்லாம் கேர் பண்றாராம். இந்த ஃபிரீ சர்வீசுக்கு.. அவங்கப்பா ஃபாரின்லேர்ந்து அமவுண்ட் அனுப்பறாராம். எப்டி மனுசால்லாம் இருக்காப் பாரு. டெடெயில் விசாரிச்சுட்டு இருக்கேன். பகவான் வழி காட்டுவார்.”

“ஏன் பாட்டி... எதுக்கு...”

“இந்த வீட்டையும் இதுங்களையும்.. இப்டி சர்வீஸ் பண்றவா யார்ட்டயாச்சும் ஒப்படைச்சுட்டா எப்பக் கூப்புட்டாலும் நான் ரிலாக்ஸ்டா ரிலீவ் ஆயிக்குவேன். எந்தக் கடனும் பாக்கியிருக்காது பாரு. பாப்போம். பகவான் என்ன நினைச்சிருக்காரோ.”

கழியக் கொடுத்த நாட்களை விழிக்கக் கிடைத்த விடியலோடு சேர்த்திறுத்தித் தைத்தபடியே கழிந்திருந்தது.. அவரது இந்த இருபத்திரெண்டு வருட காலத் தனிமையும்.

ஈர்த்தது, பார்த்தது, படித்தது, பட்டது, பதிந்ததுயென்று.. பாட்டியிடம் கதை கதையாக வலிகளைச் சேகரித்திருந்தேன் நான். பாட்டியின் உள்முக அடுக்குகளை ஒவ்வொன்றாகத் தரிசிக்கத் தரிசிக்க.. என் புறச் சிதறல்களெல்லாம் மெல்ல மெல்லச் சுருங்கியிருந்ததில்.. உள்ளார்ந்த பயணமாக நான் தேரோட்டத் தொடங்கியிருந்தேன் இப்பொழுதெல்லாம்.

விழிக்குள் நிறுத்தி இருக்கையிலேயே பிடி நழுவிப்போயிருக்கும் பிள்ளையாய்.. என் கண்ணைக் கட்டிவிட்டு ஓடியடைந்திருந்தது காலம். இன்றைக்குத் தெருவழியே சாமியழைப்பு. சமயபுரம் பூயெடுப்பு. அலங்கார ஜோதியாக மகமாயி வீதியுலா வருகிறாள் ஆடியாடி. பக்தனைத் தேடி வீட்டு வாசலுக்கே வரும் சாமியின் கருணை. என் வாசலைத் தாண்டி பாட்டியின் வீட்டுக்கு நகர்ந்தது சாமி.

காலையிலிருந்து இன்னும் பாட்டியைப் பார்க்காதது நினைவிலாடியது. நின்று பார்க்கலாமென்றால்.. என்னை வீட்டுக்குள் விரட்டியடித்தது பங்குனி. மாலையில் காப்பியோடு பால்கனிக்கு வந்ததில்.. வேப்ப மரத்துத் தூரோடுச் சமைந்திருந்தபடி அசையாச் சிலையாக வெகு நேரமாகப் பாட்டியிடம் கண்டுவைத்த அந்தக் கோலம் மனதை எதுவோ பிசைய.. கீழிறங்கி ஓடினேன். தன் நாளின் பெரும்பொழுதும் அந்த வேம்போடுதான் அவர் கழித்திருப்பார்.

“கசப்பத் தின்னு பழகு. உப்புத்துவப்புக் காரமெல்லாம் புளிச்சுப் போயி எல்லாம் ஒன்னுதான்னு நாக்கடங்கிப்போகும்,” என்று அந்த மரத்தோடு தங்களைப் பழக்கி வைத்திருந்த தன் தந்தையாகவே அதை அவர் நினைத்திருந்ததில்.. அதன் குச்சியொடித்துப் பல்லுரசிய கையோடு நாலு கொழுந்தை உருவி

நீருக்குள் முக்காட்டித் தின்றுவிட்டுத்தான்.. எப்போதும் விடியலைத் தொடங்குவார் பாட்டி.

"என்னாச்சு பாட்டி. பெருசா ஏதோ யோசனை போல. சாமி பாத்திங்களா இன்னிக்கு. உங்களப் பாப்போம்னா நிக்க விடல வெய்யிலு."

"இன்னிக்கு சாமி வரத்துன்னு தெரியாமப் போச்சு எனக்கு."

முகத்தைக் கழுவிக் கொண்டே..

"நேத்து ஒரு கனவு. யாரோ என்னை ரொம்ப நேரமாத் தட்டி எழுப்புறாங்க. முழிச்சுப் பாக்குறேன்.. திருநீறுக் கைய எம்முன்னாடி நீட்டி எடுத்துக்கன்னு சொல்றாங்க. நிமுந்து பாத்தா.. எங்கப்பா. தூக்கிவாரிப் போட்ருச்சு. இது வரைக்கும் எங்கனவுல எங்கப்பா வந்ததேல்ல. என்னடாது.. எதுக்குத் திருநீறோட வந்து நிக்கிறாருன்னு யோசனையிலயே இருந்தேன். சத்தங்கேட்டு வெளில வாரேன்.. வாசல்ல திருநீறுத் தட்டோட நிக்கிறா மகமாயி. என்னவோ எனக்கு சரக்குன்னுச்சு உள்ளுக்குள்ள. வாசலுக்கு வந்தவள வெறுங்கையோட அனுப்பறதானு சுதாரிச்சு ஓடிப்போயி பர்சுக்குள்ள கைய விட்டேன். எரநூறு ரூவாத்தாளு வந்துச்சு கைக்கு. அவளுக்கு என்ன தேவையோ அதானே எடுத்துக்குவா அவ. குளிக்கக் கூட இல்ல நான். அவளுக்குத் தெரியாதா எங்கிட்ட அழுக்கேதும் இல்லன்னு. எங்கப்பா வந்த கததான் மட்டுப்படல எனக்கு." பேசப்பேச.. வேப்பம்பூக்கள் பூந்தூறலாகச் சொரிந்து இருவரையும் நனைத்துவைக்க.. எங்கள் தலையெல்லாம் பூக்கள். தரையெல்லாம் பூக்கள். ஒரே நேரத்தில் உச்சிக்குத் தாவுகின்றன.. இருவரின் சிலிர்ப்புகளும்.

உச்சிக் கிளையில் காக்கைக் குருவிகள் யாவும் கூடடைந்திருந்தன. மாலை ஓடியடைந்திருக்க.. இரவு வந்தடைந்திருந்தது. இரவுச் சோத்துக்கென நாய்களும்.. நீரருந்தி இளைப்பாறிய களைப்பில் ஒன்றிரண்டு மாடுகளுமாக.. எப்போதும் போல நிறைந்திருந்தது வாசல். சிக்குகிற கால்களின் பின்னோடிக் களைத்துத் திரும்புகிறதொரு நாய்க்குட்டியைப் போலத்தான்.. முன்னெடுத்ததொரு தேடலின் பின்னே ஓடியதெல்லாமும் அலுத்துத் திரும்பியிருந்தன.

பாட்டி இன்னமும் மேலேயே பார்த்திருக்க.. சில தவங்களைக் கலைத்தல் தர்மமாகாது என்றதன் நீதியில்.. அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன் நான். அவரின் புருவ மத்தியில் எப்போதும் நான் காணுகிற படிப்பறிவும் பட்டறிவும் சேர்ந்ததான அந்தப் பகுத்தறிவுச் சுடர்.. வழக்கத்தை விடவும் இப்போது நின்றெரிந்துகொண்டிருப்பதாகப் பட்டதெனக்கு.

எங்கிருந்தேனும் கூடடைந்துவிடுகிற இந்த எப்போதுகளைப் போலவே ஒருநாள் பாட்டியும்கூட.. தன் அப்பா அம்மா அண்ணன் அக்காக்களோடு கூடடைந்திருப்பார்.

ரோசி சடைச்சிகளின் தலைமுறைகள் யாவும் மண்ணின் மடியேறி.. பாட்டியின் எச்சங்களாக அவரின் பால்ச்சோறு.. குட்டி போட்டிருக்கும். இங்கிருக்கும் வேம்பும் புங்கையும் மருதாணியும் கூட காக்கைக் குருவிகளால் பாட்டியின் மிச்சங்களாகக் கால்முளைத்துப் பறந்திருக்க.. உலகெல்லாம் வனமாகியிருப்பார் பாட்டி. வனமெல்லாம் கூடாகி.. கூடெல்லாம் குருவியாகி.. குருவியெல்லாம் மீண்டும் வனமாக்கி வைக்கும் பாட்டியை.

"ஜனனமும் பூமியில் புதியது இல்லை.. மரணத்தைப் போலொரு பழையதும் இல்லை. இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை... இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை" யென்று இசையின் மீதசைகிற வைரமுத்துவின் இந்த எச்சங்களோடு.. என் கூடடைந்திருந்தேன் நானும்.

தொடர் 2

ஆதிரன்



# வானவில் வண்ண மின்னல்

## வரலாறு

எளிமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அளப்பரிய இப்பிரபஞ்சத்தில் 'மனிதகுல வரலாறு' போல வேறெந்த உயிருக்கும் குளறுபடியான வரலாறு இல்லை என்பதிலிருந்து 'வரலாறு என்றால் என்ன' என்பது பற்றி நாம் தொடங்க வேண்டும். இந்த வாக்கியத்தொடரைப் புரிந்துகொள்வது சிரமமாய் இருக்கிறதா? எனில் வரலாற்றைப் புரிந்துகொள்வதிலும் கடும் சிரமம் இருக்கும்.

வரலாறு என்பது ஒரு நிகழ்வுப்போக்கு. ஆற்று நீரின் ஒவ்வொரு துளியும் நூற்றுக்கணக்கான வரலாறு என்று சொல்லலாம். வரலாறு என்ற ஆற்றின் தடத்தில் நீர் இல்லாவிட்டாலும் அது ஓடிக்கொண்டிருக்கும். ஆற்றின் தடத்தில் நீர், நிலம், காற்று என அனைத்தும் ஓடிக்கொண்டிருக்கும். காலத்தின் பரிமாணத்திற்கு வரலாறுதான் மீச்சிறு அலகு. வரலாறு குறித்த லட்சக்கணக்கான விளக்கங்கள் இருக்கின்றன. என் பங்கிற்கும் இந்த விளக்க ஆய்வை நான் முன்வைக்கிறேன். எம்மனார் வரலாற்று ஆய்வாளர்கள் எனக்குத் துணை.

வெற்றியை அடைய முதலும் நிச்சயமுமான படி வரலாறு மட்டுமே. இது பரீச்சார்த்தமாக விளக்கப்பட்ட ஓர் உண்மை. எனவேதான் வரலாறு குறித்த முறையான பயிற்சி நமக்குத் தேவை என்று சொல்லுகிறேன். ஆக, வரலாற்றைப் புரிந்துகொள்ள நாம் புவியியலுக்குள் செல்ல வேண்டும். செல்வோம். அதற்கு முன்னதாக வரலாறு என்றால் என்ன என்பது பற்றிய பல்வேறு விளக்கங்களைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வது அவசியம்.

வரலாறு என்பது இல்லாமல் போனவை பற்றியதா அல்லது இருந்துகொண்டிருப்பவை பற்றியதா? பள்ளிகளில் வரலாறு என்பதை நாம் எவ்வாறு போதிக்கிறோம்? வரலாறு என்ற கருத்துரு (concept) நேர்மையான ஒன்றாய் இருக்க முடியுமா? அறிவியல் அடிப்படையில் வரலாற்றை அணுக முடியுமா? கேள்விகள் நீண்டுகொண்டே இருக்கின்றன.

விண்மீன் குழுமம் (constellation) பற்றி நாம் அறிவோம் அல்லவா.. வானின் விண்மீன்களின் அமைப்பைக் குறிப்பிட்டவகையில் ஒரு படமாக ஊகம் செய்து திசையையும் காலத்தையும் தெரிந்துகொள்ள ஆதிக்காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு செயல்பாடு. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட திசையில் விண்மீன்களின் அமைப்பை வைத்துக் கடல் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. போலவே வான சாஸ்திரர்களும் இவற்றை உபயோகப்படுத்திக்கொண்டனர். வேடன் (Orion) என்று அறியப்படும் விண்மீன் குழுமம் பிரசித்திபெற்ற ஒன்று. தற்சமயம் உலகளவில் 88 விண்மீன் குழுமங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வானின் விண்மீன்கள் உண்மையானவை. பண்டைய மனிதர்கள் அவற்றின் அமைப்பைக் கொண்டு ஊகத்தால் ஒரு படத்தை உருவாக்கித் திசையையும் காலத்தையும் அறிந்துகொண்டது போல வரலாற்றியலாளர்கள், 'காலத்தின் வானில்' விண்மீன்களெனச் சிதறிக் கிடக்கும் கடந்தகாலச் சம்பவங்களைத் தங்களின் ஊகங்கள் வாயிலாக ஒன்றுகோர்த்து ஒரு சித்திரத்தை உருவாக்குவதன் மூலம் வரலாறு என்ற ஒன்றைக் கட்டமைக்கிறார்கள்.

வரலாறு என்றாலே கதைதான். அது வெறும் கதையா அல்லது கட்டுக்கதையா அதுவுமல்லாது உண்மைக்கதையா என்பது குறித்த ஆய்வே வரலாற்றை நாம் அணுகும் முறையாகும். இளங்கோவன் எழுதிய சிலம்பு உண்மைக்கதையா புனைவுக்கதையா என்ற ஆய்வு கண்ணகி என்கிற ஒரு பெண்ணைப் பற்றிச் சமகாலத்தில் என்னவகையான சித்திரத்தை உருவாக்குகிறது என்பதுதான் வரலாற்றின் இயங்கியல்.

நிற்க, நமதின் சமகாலத்தில் வரலாறு குறித்தான நவீன அறிவியல் பார்வை என்ன என்பதிலிருந்து தொடங்கலாம்; வரலாற்றின் கூறுகளாக ஏழு கருத்துருக்கள் (தனிப்பட்ட முறையில் இது எனக்கு உடன்பாடில்லை நண்பர்களே) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. முதலாவது தரவுகள் (sources). நமக்குக் கிடைக்கும் தகவல்கள் பற்றிய அறிவு. நமக்கு எங்கு கிடைத்தது, எப்படிக் கிடைத்தது என்பது முக்கியம்தான் என்றாலும் எதற்காக நம்மிடம் அந்தத் தகவல் கிடைத்தது என்பது மிக முக்கியமான விசயம். இரண்டாவதாக, சாட்சிகள் (evidence). இதிலிருந்து நாம் ஒன்றுக்கு மேற்பட்ட முடிவுகளுக்கு வர வாய்ப்பிருக்கிறதா என்பது ஆதாரக் கேள்வியாக இருக்க வேண்டும். மூன்றாவதாக, தொடர்ச்சியும் மாற்றமும் (continuity and change). வரலாற்றின் போக்கில் இது எளிமையாகப் புரிந்துகொள்ளத் தக்கதுதான். நான்காவது, நமக்குக் கிடைக்கும் தரவுகள்/தகவல்கள் குறித்தான முக்கியத்துவம். ஐந்தாவது, பார்வைக்கோணம் (perspectives). ஒரு தனிமனிதர் ஒன்றுக்கு மேற்பட்ட பார்வைக்கோணத்தைக் கொள்ளமுடியுமா என்பது இதில் ஆதாரக் கேள்வி. வரலாற்றியலில் பார்வைக்கோணம் அவரவர் நோக்கத்தைத் தீர்மானிக்கிறது. எனவே பார்வைக்கோணம் (perspectives) குறிச்சொல் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வரலாறு பற்றிய ஆழமான சிந்தனைகளை எழுதிய வால்டர் பெஞ்சமின், கார் ( E. H. Carr) போன்ற மேதைகளின் சிந்தனைகளை அடுத்தடுத்து விரிவாகப் பார்க்கலாம். முன்னதாக, வரலாறு என்ற சொல்லிற்கு "வந்த வழி" எனப் பொருள் என்பதையும் கடந்தகால நிகழ்வுகளைக் குறிப்பது என்பதையும் மட்டுமே அர்த்தம் கொள்ளாமல் அதனினும் ஆழமாக மனிதகுலச் சிந்தனைத் தொகுப்பின் ஆய்வுக்களமாகப் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவுகொள்வதே வரலாறு என்றும் கொள்ளலாம்.

ஆனால், நினைவின் மீட்சி குறித்தான நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு நிகழ்ச்சியை இரண்டுக்கும் மேற்பட்டோர் விவரிக்க முயல்கையில் உண்டாகும் சித்திரம் நடந்த சம்பவத்தை அசலாக உருவாக்கிவிடும் என்று உறுதியாகச் சொல்லிவிட முடியாது. வரலாறு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் history என்ற சொல் இருக்கிறதல்லவா, அதன் மூலச் சொல் கிரேக்க மொழியிலிருக்கிறது. அதன் அர்த்தம் 'தெரிந்துகொள்வது' (to know). முக்கியமாக, 'விசாரணை செய்து தெரிந்துகொள்வது' (by inquiry) என்றே அர்த்தம். எனவே மனித நினைவுகளின் மீட்சியின் சாத்தியப்பாடு நூறு விழுக்காடு முழுமையானது என்று எடுத்துக்கொள்ள முடியாது.

## பொறுப்புணர்வு

உன் வாழ்க்கை உன் கையில் என்ற பரிதாபகரமான வாக்கியம் எவ்வளவு பெரிய பொய் என்று நிறுவ முயல்வதே இப்பத்தியின் பிரதான நோக்கம். கூடவே விருப்பத்தேர்வு (choice) என்பதன் கேலிக்குரிய நிலைமை குறித்து விரிவாக ஆராய்வதன் மூலம் நான் முன்னதாகச் சொன்னதுபோல ஒரு மண்ணாந்தைச் சமூகம் எப்படிக் கட்டமைக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முயல்வது அடுத்த நோக்கம். நம்மில் பெரும்பாலானோர் வாழ்க்கை என்பது நமது கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்று நம்பிக்கொண்டு இருக்கிறோம். உண்மை வேறுவிதமாக இருக்கிறது. அனைத்துப் பொதுநலன் கருத்துக்களுக்குள்ளும் லாப நோக்கில் ஒரு உள்ளரசியல் செயல்படுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் தனது குடிமக்களுக்குத் தனிமனிதச் சுதந்திரத்தையும் விருப்பத்தேர்வையும் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக உறுதியளிக்கிறது என்பதை முதலில் சொல்லிவிடுகிறேன். (இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறித்த சுவாரஸ்யமான விளக்கத்தை வேறொரு பத்தியில் சொல்கிறேன்). இதை ஏன் நான் முதலில் சொல்கிறேன் என்றால், நாம் எதன் மீது நின்றுகொண்டு களமாடுகிறோம் என்கிற அடிப்படை அறிவைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே.

நாம் நினைப்பது போலத் தனிமனித விருப்பத்தேர்வு என்பது நமது உண்மையான விருப்பத்தில் நடைபெறுவது இல்லை. குறைந்தபட்சம் அவை மூன்று விதமான பெரும் வளையங்களின் மூலமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. முதல் வளையம் அரசாங்கத்தின் அளவைகள். இரண்டாவது சமூகப் பண்பாட்டுச் சிந்தனைகள் (ஜாதி/மதம் உட்பட). மூன்றாவதாக சந்தை. நான்காவதாகவும் ஒன்று இருக்கிறது. அது நமது மூளைச் செயல்பாடு. இது நமது மூளையின் சிந்தனை அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதன் அறிவியல் பார்வை.

மூளையின் பாகங்கள் அதன் செயல்பாடுகள் அனைத்தும் மனிதர்களுக்குள் பொதுவாக இருப்பதால் மனித நடத்தைகள் (behaviour) எளிதாக யூகிக்கக்கூடிய வகையில் இருப்பதாக அறிவியல் சொல்கிறது. இது ஒரு சிக்கலான நிகழ்வு. மனித சிந்தனைப்போக்கைத் துல்லியமாக யூகிக்க அறிவியலால் முடியும் என்பது ஒரு மாய வளையத்தில் நம்மை இறுக்கிவிடும் அபாயத்தைக் கொண்டது. சமூகத்தில் நாம் ஆணைகளைப் பின்பற்றி வாழ்கிறோம் என்பதே யதார்த்தம் என்று வைத்துக்கொண்டு இவ்வளையங்கள் குறித்து ஒவ்வொன்றாக விரிவாகப் பார்க்கலாம்.

உயிரியல், பண்பாடு, வலுவம் (power) மற்றும் பொருளாதாரம் ஆகிய நான்கையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் நம்மிடம் விருப்பத்தேர்வு என்று எதுவுமில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம். மாறாக நடைமுறை வாழ்வில் மனிதர்களாகிய நாம் எண்ணிலடங்கா விருப்பத்தேர்வுகளைச் செய்துகொண்டே இருக்கிறோம். ஏன் நமக்கு 'விருப்பத்தேர்வுகள்' ஒரு பொருட்டாகிறது? ஏனெனில் தனிமனித விருப்பத்தேர்வு அடிப்படையில் தனிமனிதச் சுதந்திரத்தைப் பேணுவதிலும் நமது விருப்பத் தேர்விற்கு நாமே பொறுப்பு எடுத்துக்கொள்வதிலும்

உள்ளது. எனவே விருப்பத்தேர்வு என்றால் என்ன என்பதை மேற்சொன்ன நான்கு கூறுகளின் அடிப்படையில் தெரிந்துகொண்டால் மட்டுமே பொறுப்புணர்வு என்பதன் முழு வீச்சையும் புரிந்துகொள்ள முடியும்.

கூடவே சுதந்திரம் என்னும் மாய வார்த்தைக்கு வாழ்வில் என்ன அர்த்தம் என்பதையும் புரிந்துகொள்ள முடியும். சுதந்திரத்திற்கும் பொறுப்புணர்வுக்கும் இடையில் நடைமுறை யதார்த்தத்தில் 'விருப்பத்தேர்வு' எவ்வாறு பயணம் செய்கிறது என்பதைத் தெரிந்துகொண்டால் வெற்றி குறித்தான புரிதலுக்கு வந்துசேர முடியும்.

காலம் என்ற ஒன்று மனிதர்களின் புரிதலுக்காக மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்பது பருந்துப் பார்வையில் ஒரே நிலைதான். மகிழ்ச்சி குறித்து உலகில் எல்லா அறிவுரைகளும் ஒன்றை மட்டுமே சொல்கின்றன. அது 'நிகழ்காலத்தில்' வாழுங்கள் என்பதுதான். குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மனப்பிறழ்வு கொண்டவர்கள் வேண்டுமென்றால் நிகழ்காலத்தில் வாழலாம். மற்றபடி நிகழ்கால வாழ்வு யாருக்கும் சாத்தியமில்லை என்பதே எனது புரிதல். நிகழ்காலத்தில் வாழ்வது என்பது உண்மையில் மனமற்றுப் போனதொரு நிலை. அதாவது நிகழ்காலத்தில் வாழச் சிந்தனை தேவையில்லை. நடுஇரவின் தனிமையில் பெரிய நூலகம் ஒன்று எவ்வாறு மிக ஆழ்ந்த மற்றும் கனமான அமைதியைக் கொண்டிருக்குமோ அதுபோல ஒரு நிலையில் மனம் இருப்பதை யாரும் சகித்துக்கொள்ள மாட்டார்கள் அல்லவா? 'வெற்றியின் நிகழ்வுப்போக்கு' (success phenomena) என்பது நிகழ்காலத்தின் எதிர் திசையில் இருக்கும். மேலும், 'நடைமுறை' என்பதில் கடந்த காலத்தின் பங்கும் எதிர்காலத்தின் பங்கும் சம அளவில் இருக்கின்றன என்றும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே விருப்பத்தேர்வின் படிநிலைகளைப் பற்றி அடுத்தடுத்து நாம் பார்க்கலாம். ■

## விடுமுறையற்ற பசி

ஒட்டிய வயிறோடு
புதருக்குள்ளும் வேலிக்குள்ளும்
தேடுதலிலிருக்கும்
யாராலோ கைவிடப்பட்ட பூனைக்கு
எலி கிடைக்கட்டும்

வழக்கமான பரபரப்பற்ற சாலையில்
வழக்கமான கூட்டமற்ற
கோயிலின் முன் அமர்ந்திருக்கும்
அம்முதியவளின் தட்டில்
காசுகள் விழட்டும்

பூக்கள் முழுவதுமாய்ப் பறிக்கப்பட்ட
செடியைச் சுற்றிச் சுற்றிப் பறக்கும்
வண்ணத்துப்பூச்சிக்கு
தேன் கிடைக்கட்டும்

கூட்டமோ
வழக்கமான பயணிகளின் அளவோ இல்லாத
ரயிலில் பொம்மைகள் விற்குமவனுக்கு
நல்ல விற்பனை கிடைக்கட்டும்

எல்லோரும் ஊருக்குப் போய்விட்ட
அலுவலகக் குடியிருப்பில்
எப்போதுமலையுமந்த நாய்க்கு
பழைய சோறோ புதிய சோறோ
யாரேனுமொரு வழிப்போக்கனால் வாய்க்கட்டும்

பசிக்கு மட்டும் விடுமுறையில்லை
ஞாயிற்றுக்கிழமையன்று

– சௌவி

- உன் அத்தனைக் கோடுகளிலும்
  ஒளிந்துகொண்டிருக்கிறது
  என் புள்ளி.

- ஒரேயொரு கோடிழுத்தாய்
  குறுக்கும் நெடுக்குமாக
  தன்னைத்தானே
  நிறையப் புனைந்துகொண்டது
  அக்கோடு.

- அழுத்தி அழித்ததில்
  கோடுகளிலிருந்து
  பொடிப்பொடியாக உதிர்கின்றன
  நம் புள்ளிகள்.

- நமக்கிடையிலான புள்ளிகளை
  இணைக்காமலே இரு.
  அவை எங்கு எதை வெட்டுமென
  யார் கண்டது?

- யாரோ வைத்த புள்ளி
  இப்பூமி
  யாரோ இழுக்கும் கோடு
  இக்காலம்.

- புள்ளியாகத் தொடங்கிய
  காமம்
  புள்ளியாக முடிவதற்குள்
  போதும் போதுமென
  அத்தனைக் கோடுகள்.

- நமக்கான
  எல்லைக்கோடுகளை
  நாமே வரைவதற்குள்
  எல்லை மீறிவிடுகின்றன
  சில புள்ளிகள்.

- நம் கடைசிப்புள்ளியில்
  கண்ணுக்குத் தெரியாத
  அத்தனை கோடுகள்.

– மா.காளிதாஸ்

## மெட்டி

இடது கால் கட்டை விரலுக்கு
அடுத்த விரலில்
அணிவித்த மெட்டியை
திருமணம் முடிந்து
பல ஆண்டுகள் கழித்தும்
கழட்டாமலிருக்கிறார்
அந்தக் காவல்துறை நண்பர்
மிடுக்கான சீருடையுடன்
பூட்ஸ் அணியும்போது
மறைந்துவிடும் மெட்டி
மஃப்டி உடை அணிந்து
செல்லும் சமயங்களில்
பாதணிகளுக்கு வெளியே
சிற்றோவியம் போல் தெரிகிறது
“என்ன சார் அது??”
யாராவது ஆச்சரியமாகக் கேட்கும்போது
மிடுக்கையும் முறைப்பையும் மீறி
மேகங்களுக்குள்ளிருந்து
எட்டிப் பார்க்கும் நிலவாய்
வெளிப்படுகிறது
அழகியலான வெட்கமும்
மனைவியின் மீதான காதலும்.....

– பிரபுசங்கர் க

இந்தக்காலம்
உன்னை எனக்குச் சற்று முன்பே
அறிமுகப்படுத்தியிருக்கலாம்

கொஞ்சம் முன்னமே நாம் சந்தித்திருக்கலாம்
கொஞ்சம் முன்னமே நாம் நெருங்கி
வந்திருக்கலாம்
கொஞ்சம் முன்னமே நாம்
புரிந்துகொண்டிருக்கலாம்
கொஞ்சம் முன்னமே நாம் நேசித்திருக்கலாம்

இந்தக்காலம்
உன்னை எனக்குச் சற்று முன்பே
அறிமுகப்படுத்தியிருக்கலாம்

கொஞ்சம் முன்பே நாம்
இந்த உறவைத் தொடங்கியிருந்தால்
ஒருவேளை
இப்போது நிகழ்ந்த எதுவும்
நமக்குள்
அப்போது நிகழாதிருந்திருக்கலாம்

எத்தனை மனிதர்கள்
எத்தனைக் காதல்கள்
எத்தனை எத்தனைக் காயங்களைக்
கடந்து
உன்னை நான் அடைந்திருக்கிறேன்
பார்

பின்னும்
ஒருவேளை
இந்தக்காலம்
என் மேல் கருணைகூர்ந்து
உன்னை எனக்குச் சற்று முன்னமே
அறிமுகப்படுத்தியிருந்தால்
அப்போதைய
என் அசட்டுத்தனங்களால்
உன்னைக் கைநழுவ விட்டுவிட்டு
இப்போது
நான் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்திருப்பேனோ
என்னவோ

நல்லவேளை
இந்தக்காலம்
உன்னை எனக்குச் சற்றுத் தாமதமாகவே
அறிமுகப்படுத்தியிருக்கிறது

– ரிஸ்கா முக்தார்

● கவிஜி

# அதீத கலைஞனின் தவிப்புகள்



**வா**ன்கோவின் கால்கள் எதையோ தேடி அலைகின்றன. எதுவென்று தெரியாத தூரங்களினால் அந்தக் கால்களில் ஒரு தீராத யாத்திரை இருக்கிறது.

அவன் தொடர்ந்து காடுகளுக்குள் பயணப்படுகிறான். தீராத் தேடல்களில் அவன் தன்னையே தொலைக்கிறான். தொலைவது என்பதைத் தெரிந்துகொண்டே தொலைவதில் ஒரு துயர இன்பத்தைக் கண்டடைகிறான். அதன் மூலம் எதையோ தேடுவதாக நம்புகிறான். அவன் நம்பிக்கை தூரிகைகளால் ஆனது. ஒவ்வொரு நாளும் அவன் பூமி அவன் காலடியில் நழுவிக்கொண்டே இருக்கிறது. இனம் புரியாத புள்ளிகளில் அவன் நகர்ந்துகொண்டே இருக்கிறான். தனித்த தொலைதலில் அவன் வரைந்துகொண்டே இருக்கிறான். அதிகாலையை... அந்திமாலையை... மதியத்தை... பூக்களை... தொடுவானத்தை... மண்ணை... ஆகாயத்தை... மரங்களை... காடுகளை... காற்றுவெளியை... பரந்த நிலப்பரப்பை... இப்படி தொடர் வரைதலில் வரைந்து முடியவே முடியாத பக்கங்களில் அவன் தன்னையே நிறைத்துக்கொண்டிருக்கிறான்.

செவ்வகப் பெட்டியைப் போன்ற பலகையையும் வரைதலுக்கான உபகரணங்களையும் முதுகில் சுமந்துகொண்டு காடுகளில் அவன் நடக்கும் காட்சிகளில் அவன் கண்களில் நாமும் இவ்வுலகைக் காண்கிறோம். அத்தனை பிரகாசம் அது. அத்தனை சுவாசம் அங்கே. அற்புதக் கூடுகளின் நிகழ்கால வெளியில் கண்களுக்குத் தெரியாமல் சிறகடிக்கும் தன்னையே உணர முடியும். தனக்குள் இருக்கும் சிறகையும் உணர முடியும்.

புறக்கணிப்பின் வீதியில் கறுத்த காகத்தின் மனநிலைதான் அவனுக்கு. முதல் காட்சியிலேயே கிழிந்த காலணிகளைக் கழட்டி எடுத்து எடுத்துப் பார்க்கும் அவன் கைகள் வேறு வழியின்றி அதையும் ஓவியமாக்குகிறது. ஓவியங்களின் வழியேதான்

தன் துக்கங்களையும் தூக்கங்களையும் மறுபரிசீலனை செய்துகொள்கிறான். ஒருவகை சோர்வு மனம் கொண்ட மனிதனாகத்தான் வான்கோ எப்போதுமே இருக்கிறான். அந்தச் சோர்வு மனம்தான் அவனை ஓவியங்களுக்குள் அலைக்கழிக்கிறது. ஓரிடத்தில் அவன் சிந்தனையை நிறுத்த முடியாமல் வைத்திருக்கிறது. அவன் காணும் காட்சிகளில் எல்லாம் கனவும் சேர்ந்து இருப்பதை நம்பாதோருக்கு அவன் காடுகளில் காலடி இல்லை.

காட்சிப் பொருள் மாறும் என்பது அவன் காகத்தின் வானம் மாலை மயங்குகையில் புரிகிறது.

மஞ்சள் வண்ணத்தில் ஒருவித மயக்கம் காண்கிறான். மஞ்சள் பூக்களில்.. முயக்கம் தரும் அவன் சிந்தனைகளின் வழியே நாமும் ஒரு புள்ளியில் அவனோவியம் ஆகிறோம். இந்த மனிதர்களிடம் இருந்து அவன் விலகியே இருக்கிறான். சிலுவைகள் சுமக்க எல்லாராலும் முடியாது. எல்லாராலும் சுமக்க முடிந்தது சிலுவையும் ஆகாது. சில சிந்தனைகளையும் அப்படித்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவன் மரங்களோடும் காகங்களோடும் பறவைகளோடும் தூரிகையின் மொழியில் உரையாடுகிறான். அவன் தனது முப்பதாவது வயதில்தான் வரைய ஆரம்பிக்கிறான். அதன் பிறகு அடுத்த ஏழு ஆண்டுகள்தான் அவன் வரைந்தான். அந்தக் காலகட்டத்தில் வரைந்தவைதான் இன்றும் நம்மிடையே இருக்கும் அழியாப் புகழ் பெற்ற வான்கோவின் ஓவியங்கள். அவன் வாழும் காலத்தில் அவன் ஓவியங்கள் ஒன்று கூட விற்கப்படவில்லை என்பது எத்தனை வருத்தத்திற்குரிய விஷயம். ஆனாலும் அவன் வரைவதை விடவேயில்லை.

அவன் வரைந்துகொண்டிருப்பதற்காக வரைந்துகொண்டிருந்தான்.

வேறு வழியின்றித் தனது கடைசிக் கால கட்டத்தை அவன் வரைந்துதான் கடக்க வேண்டியிருந்தது. வரைவது வானத்துக்கும் பூமிக்கும் பயணிப்பது. அந்த ஓரிடப் பயணத்தை அழுகையோடும் வலியோடும் தனிமையோடும் மனச்சோர்வோடும் இயலாமையோடுமே தூரிகைக்குப் படையலிட்டான். ஒரு ஓவியனின் சொல் கொண்டு யோசிக்கையில் வண்ணங்களற்ற வெறுமை மனமெங்கும் படர்வதைத் தடுக்க முடியவில்லை.

பறந்து விரிந்து கிடக்கும் நிலப்பரப்பில் ஒரு பிரபுவைப் போல நடை போடும் அவன்... சிறுபிள்ளையின் மனநிலையோடு தன் சகோதரனைக் கட்டிக்கொண்டு அழுவதெல்லாம் கலைஞனின் தத்ரூப முயக்க நிலை.

ஆடு மேய்க்கும் பெண்ணிடம் உன்னை வரைகிறேன்.. என போஸ் கொடுக்கச் சொல்லும் காட்சியில் அப்பட்டமான ஓவியனின் ஆழ்மனத் தேடலின் நுட்பத்தை உணர முடியும். அவன் நடைபோடும் காடுகளுக்குள் வீசும் பிரத்யேகமான காற்றை உணர முடிந்த எனக்கு அதை எழுத்தில் கொண்டுவர வார்த்தைகள் போதவில்லை. அவரவர் கண்களில் உணரும் உச்சி வெயிலின் அரூபம் அது. அவன் காணும் வெளிகளில் வானத்தில் வெளிச்சத்தில் ஒருவகை முடிவிலி நிரம்பத் ததும்புகிறது. அவையோடு பேசும் நிலை வருகையில் அவன் மனதுக்குள் பிறழ்ந்த நிலை மெல்ல உருவாகிறது. பூக்களின் குரல் கேட்க ஆரம்பிக்கையில் அவன் நடுங்குகிறான். அவன் வரைய வரைய அதுவும் அவனை வரைகிறது. அதில் இடைவெளி நிரம்பி எது வரையும் எது என்று இடம்பெயரும் புள்ளிக்குள் நாமும் சற்றுத் தலைகீழாய் நடக்கத் தொடங்குகிறோம்.

காட்சியில் இல்லை என்றாலும் ஒரு கட்டத்துக்குப் பின் இடது காது இல்லாமல் மறைத்துக் கட்டுப் போட்டுக்கொண்டிருக்கிறான். இருவேறு காட்சிகள் சரித்திரத்தில் இருக்கின்றன. ஒன்று லோக்கல் விலைமகளுக்குத் தன் இடது காதை அறுத்துப் பரிசாகக் கொடுத்தது. இரண்டாவது தீவிர மனச்சோர்வில் செய்வதறியாது தன் காதைத் தானே அறுத்துக்கொண்டான் என்பது. அதனால் அதைப் பார்வையாளன் கணிப்புக்கே இயக்குனர் விட்டிருக்கிறார். காதலிக்கு அறுத்துக் கொடுத்ததாகவே இருக்கட்டும். காதலின் முக்தி நிலையில் எல்லாமே சாத்தியப்படும். அது கூட அறுத்துக்கொண்டு உயிர் விட்டுவிடும் அன்பின்

ஆழ்ந்த குறுக்கு வெட்டுத் தோற்றம். மானுட சாட்சி காதலாகவே இருக்கிறது. அவனுக்கும் அப்படியே இருக்கட்டும்.

அதன் பிறகு அவன் மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறான். ஒரு தலைசிறந்த உலக ஓவியன் அந்த மருத்துவமனை அறைக்குள் அமர்ந்திருக்கும் காட்சி கூட அவனே வரைந்த ஓவியமாகத்தான் தெரிகிறது. இந்த மனிதர்களுக்குக் கலைஞர்களைப் புறக்கணிப்பதில் அப்படி என்னதான் கிடைக்கும் என்று தெரியவில்லை. காலத்துக்கும் ஒதுக்கிவைத்துச் சாகடித்து வெறும் நினைவுகளாக மாற்றிவிடுவதில் மானுடக் குரூர மையம் எப்போதும் அதே முகத்தோடுதான்.

ஒரு காட்சியில் காட்டுக்குள் ஓவியம் வரைந்துகொண்டிருக்கிறான்... தவம் செய்வது போல. அவ்வழியே வரும் ஒரு பள்ளிச் சிறுமியர் சிறுவர்கள் அவன் அருகே ஆவலோடு வந்து ஓவியனை இதுவரை பார்த்ததில்லை என்று சொல்லி ஓவியத்தைத் தொட்டு இழுத்து விளையாடிக் கலாட்டா செய்கிறார்கள். ஓவியனின் உள்ளிருக்கும் கலை மிருகம் கோபமாக வெளிப்பட்டு எல்லாரையும் திட்டி.. அந்த ஆசிரியை லூசு என்று விரட்டிக்கொண்டு ஓடுவதை வேறு எப்படியும் பொருள்படுத்த முடியாது. லூசுகளால் ஆனது அதன் சார்புகளும்.

இறுதியில் ஒருவகை மென் நிலையில் வழக்கம் போல வரைந்துகொண்டிருக்கிறான் வான்கோ.

இரு சிறுவர்கள் துப்பாக்கி வைத்து விளையாடிக்கொண்டு அவன் அருகே வந்து தொந்தரவு செய்ய.. வழக்கம் போல ஓவிய மிருகம் வெளியே வர.. அங்கே நடக்கும் தெளிவில்லாத ஒருவகை தடுமாற்றத்தில் கைகலப்பில் அந்தத் துப்பாக்கி வான்கோவின் வயிற்றில் வெடித்துவிடுகிறது. காட்டிக்கொடுத்து விடாதீர்கள் என்று கெஞ்சும் சிறுவர்களைக் கடந்து தள்ளாடி நடந்து வரும் வான்கோவின் ஒவ்வொரு அசைவிலும் ஓவியம்தான் உணர முடிந்தது குரூர ரசிக மனதுக்கு. அதன் பிறகு ஓரிரு நாளில் வான்கோ என்ற மாபெரும் ஓவியன் தொடுவானம் தொடாமலே மரித்துப்போகிறான். எதிர்வினையற்ற ஒரு செயல் தன்னை நிறுத்திக்கொள்கிறது. அப்போது அவனுக்கு வயது 37. (தீவிர மன உளைச்சலில் தன்னைத் தானே சுட்டுக்கொண்டான் என்றும் நம்பப்படுகிறது).

வான்கோவின் வாழ்வில் அது சரியான முடிவல்ல. சரியான முடிவில்லாத ஒரு வாழ்க்கையின் பின் பாதியில் ஒரு காதற்ற சிந்தனையில் ஒரு பறவையின் சிறகடிப்பை மறந்துகொண்டே இருந்திருக்கிறான் வான்கோ.

அவன் ஆன்மா அதன் பிறகு தான் வரைந்த ஓவியங்களின் ஊடாக மீண்டும் மீண்டும் வினையாற்றிக்கொண்டேயிருக்கும் என்பதைப் படம் முடிந்ததும் நான் உணர்ந்தேன்.

உணர்வுகளால் ஆனவனை அறிவால் தேடாதீர்கள். அகப்படவே மாட்டான். அது ஆகச் சிறந்த அற்புத நொடிகளால் ஆனது. அது அவனுக்கு வாய்த்திருந்தது. ஓர் அதீத கலைஞனின் தவிப்பைப் படம் முழுக்கக் காண முடிந்ததை உயிர் அறுத்துச் செல்லும் அற்புதமான காட்சி ஒன்றாகச் சொல்லக்கூடும் இந்தக் காலம். தனது 37வது வயதில் பூமியை விட்டுப் போன இந்த மகாகலைஞனின் ஆன்மா ஒருபோதும் சாந்தி அடையாது. அடையாத சாந்தியில்தான் அவன் இன்னும் வரையப்பட்ட தானாக உலாத்திக்கொண்டிருக்கிறான்.

"வின்செண்ட் வான்கோ" என்ற ஓவியனின் வாழ்வு மிக மிக மெல்லிய கோடுகளால் தீட்டப்பட்டது. அதன் நீட்சி இன்னமும் தன்னை நீட்டித்துக்கொண்டுதான் இருக்கிறது.

ஒரு நூறு வருடங்களுக்குப் பின் கிடைத்த அவனின் இன்ன பிற ஓவியங்களைப் போல... கிடைக்காமல் போன இன்ன பிற ஓவியங்களுள் காதை ஏன் அறுத்துக்கொண்டான் என்ற பதில் ஒளிந்துகொண்டிருக்கலாம்.

**திரைப்படம் : At Eternity's Gate**

**இயக்குநர் : Julian Schnabel**

**ஆண்டு : 2018**

அம்மையார் ஹைறுநூன் பீவி
சிறுகதைப் போட்டி

சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை

ந.சிவநேசன்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# காக்காபொன்



வஞ்சிரத்தான் சாமியாக மாரியண்ணன் ஆடத்தொடங்கியபோது நிலவு கொடிமரத்துக்கு நேர் கிழக்கில் இருந்தது. ஒரு எழுபது எண்பது பேர் கூடியிருந்தார்கள். இன்னும் கூட்டம் சேர ஒரு மணி நேரமாவது ஆகும் போல இருந்தது. தோடயப் பாட்டு கேட்கத் தொடங்கியபிறகே அக்கம்பக்கத்து வீடுகளிலிருந்தவர்கள் கிளம்பி வந்தனர். வயதான தாத்தாக்கள் தங்கள் வேட்டிகளையும் கதர் துண்டையுமே விரித்து வசதி செய்துகொள்ள பொடிசுகள் முன்வரிசையில் ஜமுக்காளத்தைப் போர்த்திக் கோரைப்பாயின் மீதும் சணல் சாக்குகளின் மீதும் அமர்ந்திருந்தார்கள்.

'செந்துருக்கம் போலச் செய்திருந்தே மகிழ்ந்திடவம்... ம்ம்... கானகத்தி தலையும் மானிடத்திலொரு கண்ணாம் எஞ்சாதகத்திலொம்...... ம்ம்.....' மாரியண்ணனின் குரல் வெங்கலம் பூசியதென்பது ஊருக்கே தெரியும்.

வெற்றிலை குதப்பும் வாயிலிருந்து சிறு எச்சிலும் வெளியே தெறிக்காமல் கத்திப் பாடும் அவருக்கு மட்டுமேயான வாகு குழுவிலிருக்கும் வேறு யாருக்கும் வசப்பட்டதில்லை. அவருக்கும் வஞ்சிரத்தானாக அரிதாரம் பூசும்போது குரலில் ஒட்டிக்கொள்ளும் கம்பீரம் எவ்வாறு நிகழ்கிறதென இதுவரையிலும் புரிந்ததில்லை. கர்ணன் மோட்சமோ அர்ஜூனன் தபசோ

எல்லாவற்றையும் விட வஞ்சிரத்தானாக விஸ்வரூபம் எடுக்கையில்தான் அவரது ஆகிருதி இரவைக் கட்டியிழுத்துப் பகலிடம் போகாமல் தடுக்கிறதெனக் குழுவிலிருக்கும் எல்லோரும் பேசிக்கொண்டனர்.

மாரியண்ணன் தன் மகன் செந்திலுக்கும் அவனது பால்யத்திலிருந்தே ஆடக் கற்றுத்தந்துவிட்டபடியால் பாக்கு வேலைக்குப் போன நேரம் போக அவனும் இவரோடு ஆட வந்துவிடுவான். பெரும்பாலும் செந்திலுக்குப் பாகுக் குரலாதலால் பெண் வேடம்தான் பூணுவான்.

வஞ்சிரத்தான் மண்ணூர்வாசிகளில் பெரும்பாலான சமூகத்தாரின் குலசாமி. வருடாவருடம் சித்திரையில் வெகுவிமரிசையாகத் திருவிழா எடுத்துச் சாமியைக் குளிர்விப்பது வழக்கம். அதற்கு முந்தைய ஒவ்வொரு இரவிலும் வஞ்சிரத்தான் காண்டீபம் என்ற பெயரில் கூத்து நடத்திப் பொழுதைக் கழிப்பது இப்போதிருக்கும் இளவட்டங்களுக்கு அலுப்புத் தட்டிவிடுகிறது.

எல்லோரும் நடன நிகழ்ச்சிப் பக்கமும் சமூக நாடகங்களின் பக்கமும் தலைசாய்த்துப் போகத்தொடங்கிய பின்னும் ஊரின் பெரிய தலைகள்தான் இந்தச் சம்பிரதாயத்தை விடாமல் கொண்டுவருகின்றனர். முக்கியமாக வரதன்தான் விழா ஏற்பாடெல்லாம் செய்து மாரியண்ணன் குழுவை அழைத்துவந்து ஆடச் செய்துவிடுகிறார். மாரியண்ணன் குழுவும் சொந்த ஊர்த் திருவிழா என்பதாலும் மாற்றுச் சமூகத்தான் வேண்டுமென்றே தவறாக ஆடிச் சாமியைப் பங்கம் பண்ணிவிட்டார்களென யாரும் பழி சொல்லிவிடக் கூடாதெனவும் பயபக்தியோடு ஆடித்தருகின்றனர்.

வரதன் பூசாரியோடு சேர்ந்து கருவறைக்குள் அதிகாலைப் பூசைக்குத் தேவையானவற்றைத் தயார்படுத்திக்கொண்டிருந்தார். அவ்வப்போது வெளியே தலையை நீட்டிக் கூத்தையும் இரசித்துக்கொண்டிருந்தார்.

'என்னமாய் ஆடுகிறான் இந்த மாரிப்பயல்.. வருடாவருடம் ஆட்டத்தில் நேர்த்தி சேர்ந்துகொண்டு போகிறதே தவிர குறைந்த பாடே இல்லை' கட்டியங்காரனின் குரல் தெளிவாக உள்ளே எதிரொலித்தது.

"நகுல மகாராஜாவின் கைகளிலே.."

"ஆஹாம்.."

"ஏழு தலைமுறைக்குண்டான வரமொன்று கிடைத்தது....."

உடன் ஓடியாடிக்கொண்டிருந்த மூர்த்தி கேட்டான்.

"ஏன் பெரியப்பா.. அப்படின்னா நம்ம சாமி தருமனுக்குச் சேர்த்தி இல்லையா?"

"தருமனா.. கெட்டது போ. இத்தன வருசம் கூத்து பாத்து என்னத்த தெரிஞ்சிக்கிட்டயோ.."

மூர்த்தி எப்போது கூத்து பார்த்திருக்கிறான்.. கூத்து பார்க்க வரும் பெருசுகளோடு துணைக்கு வரும் ஓரிரண்டு வயசுப்பிள்ளைகளைப் பார்ப்பதோடு சரி. இதே சித்திரையில் பக்கத்து ஏழுபுளியில் நடன நிகழ்ச்சி களைகட்டும். எல்லா இளந்தாரிகளும் இவனைக் கிண்டலடிப்பார்கள்.

'வாடா அங்க போலாம்னா வருசாவருசம் இங்க கெடந்து பல்லு போனதுகள ரசிச்சிக்கிட்டு இருக்கான்யா மாப்புள..'

மூர்த்திக்கு வஞ்சிரத்தான் மீது அளவற்ற பக்தி என்பதையும் தாண்டி அவன்தான் திருவிழா சமயம் வரதனுக்கு வலது கை மாதிரி. எந்தப்பக்கமும் அசையாதபடிக்கு வேலையிருக்கும். எந்நேரமும் அவருடனே உழன்றுகிடப்பவனுக்கு மாரியண்ணனின் கூத்தும் குரலும் சலிப்புத் தட்டிவிடுகிறது. இப்போது அது வெறுப்பாக மாறிவிட்டிருந்தது.

'இத்தனை யுகமேறியும்... எந்தனைப் புகழிறக்க மடந்திறவாய் தணிக்கவே வஞ்சிரத்தானொடு செஞ்சிறுப்ப வந்திங்கொரு..' ஐந்தாவது அடவில் மாரியண்ணனுக்கு லேசாகத் தொண்டையடைத்தது.

இதுபோல் இதற்கு முன் தொண்டையடைத்து ஒருபோதும் குரல் கம்மியதேயில்லை. குழுவின் மூத்த உருப்படியான செங்கான் ஆர்மோனியத்தை

நிறுத்தியதைத் தொடர்ந்து கூட்டத்தில் திடீரென அசாதாரண அமைதி நிலவியது. என்னவென்று கோயிலுக்கு உள்ளிருந்தவர்கள் இறங்கி வந்து எட்டிப் பார்த்தார்கள்.

திரைச்சீலைக்கு உட்புறம் முகத்துக்குக் காக்காபொன் எடுத்து ஒப்பனை பூசிக்கொண்டிருந்த செந்தில் சத்தம் கேட்டு வெளியே ஓடிவந்தான். தந்தை சரிந்து கிடப்பதையும் சுற்றிலும் எழுந்த பதட்டக் கூக்குரலையும் கேட்டுப் பதறியபடி அருகில் ஓடினான். அவரிடம் மூச்சுப் பேச்சில்லை.

ஆனால் வஞ்சிரத்தான் சாமி ஓடியதை ஆடியதை வேட்டைக்குக் கிளம்பியதைப் பார்த்தவர்கள் உறங்கும் தோரணையை இதுவரை பார்த்ததில்லைதானே.. இதோ நல்லா பாத்துக்கோ என்பது போல் அவரது கிடப்பு இருந்தது.

திருவிழாக் கூட்டம் பரபரத்து அங்குமிங்கும் அலைய வரதன் செய்வதறியாது நின்றிருந்தார். ‘விடிந்தால் பூசை இரவில் என்றுமில்லாத துரதிர்ஷ்டமாய் என்ன இது’ ஊர்த் தலைவரை போன் போட்டு அவசர அவசரமாக யாரோ வரச்சொன்னார்கள்.

நடுநிசி நிலவு நெகிழ்ந்துகிடக்க வீடுகளில் விளக்குகள் எரியத் தொடங்கின. மாரியண்ணன் உடை கலையாமல் மரப்பலகையில் கிடத்தப்பட்டுக் கோயிலுக்குச் சற்றுத் தள்ளியிருந்த பாதை வளைவின் புளியமரத்தினடியில் அழுகைச் சத்தத்தோடும் கதறலோடும் வைக்கப்பட்டிருந்தார்.

செந்தில் குமுறலோடு செங்கானிடம் புலம்பிக்கொண்டிருந்தான்.

“அப்பாவ வூட்டுக்குக் கொண்டுகிட்டுப் போகாம நடுரோட்டுல எதுக்குண்ணே வச்சிருக்கணும்? அவங்க வந்து உத்தரவு தரணுமாக்கும்?”

“செத்த நேரம் சும்மா இருடா.. உங்கப்பன் என்னா சாதாரணமாவா செத்துருக்கான்? இந்த ஊருக்கே குலசாமி வஞ்சிரத்தானோட ரூபத்துலயே உசுர விடுற பாக்கியம் எத்தன பேருக்குக் கிடைக்கும்? ஏதோ கலந்து பேசுறாங்க.. வரட்டுமே” எனச் செங்கான் சமாதானம் செய்துகொண்டிருந்தபோதே வரதனும் விழாக் கோஷ்டியும் ஊர்த் தலைவரோடு வந்துவிட்டிருந்தனர்.

வரதன்தான் பேச்சை ஆரம்பித்தார்.

“யப்பா செங்கான்.. மறக்க முடியாத சாவுதான் இது.. ஒங்க பக்கமோ எங்க பக்கமோ எந்தப் பக்கம் குத்தம்னு தெரியல.. இப்படியாப்பட்ட விசயம் ஆயிடுச்சு. சீக்கிரம் எல்லாருக்கும் சொல்லியனுப்பிச் செங்காட்டு ஓட வழியா கொண்டுபோய்டுங்க. சரியா?”

அவர் சொல்வதற்கெல்லாம் மண்டையை மண்டையை ஆட்டிக்கொண்டிருந்தார் செங்கான். ஊர்த்தலைவர் மாணிக்கம் நான்கைந்து ரூபாய்த் தாள்களைச் செங்கான் கைகளில் திணித்துவிட்டுச் சொன்னார்.

“எல்லாஞ் சரி. அப்புறம் இந்த உடுப்போட உக்கார வைச்சிடாதீங்கப்போவ்.. இங்க சாமி கும்பிடணும்.”

இதுவரை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த செந்தில் இப்போது கோபக்குரலில் பேசத் தொடங்கினான்.

“அதெல்லாம் தெரியுதுண்ணே... ஆனா கூத்தாடும்போதே சாவுற கொடுப்பின எத்தன பேருக்குக் கெடைக்கும்.. அதும் வஞ்சிரத்தான் ரூபத்துலனா சும்மாவா? அதெல்லாம் பொதமேட்டுக்குப் போற வரைக்கும் இதே ரூபந்தான்..” எனச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே கூட்டத்தில் சலசலப்பு பரவத் தொடங்கியது.

“ஆமாம்டா எங்க சாமிய நீ பொணமா அமத்தி வச்சுக் காரியம் பண்ணுவ. நாங்கலாம் சும்மா வுடுவோம் பாரு. தலைவரு சொல்றாப்பல கலைச்சிட்டுப் போற வழியப் பாரு” என்றது ஒரு இளவட்டம்.

“ஆமாமா.. நாங்க பாக்குறம்.. நீங்களும் கலைய கலையாப் பாருங்கண்ணே.. எங்கண்ணன் இன்னிக்கு நேத்துல்ல.. அம்பத்தஞ்சு வருசமா வேசம் கட்டுறாரு.. இந்த ரூபத்துல உசுருப்போறது எம்புட்டுப் பெரிய வரம் தெரியுமா?” என இந்தப் பக்கம் யாரோ

குரலை உயர்த்த அந்தப் பக்கம் இரண்டொருவர் குதிக்கத் தொடங்க நிலைமை கைமீறி விடுமோ என இருதரப்புப் பெருசுகளும் கவலைப்பட்டார்கள்.

மாரியண்ணனின் மனைவியும் மகளும் எங்கிருந்தோ ஓடிவந்து சவத்தின் மீது விழுந்து புரள செங்கான் மெல்ல எல்லோரையும் நகர்த்திக்கொண்டு போக முயன்றார்.

மூர்த்தி போனில் அழைத்த இளந்தாரிகள் வேறு அதற்குள் பைக்கை நிறுத்தியும் நிறுத்தாமலும் எகிறிக்கொண்டு வந்தனர்.

"எவன்டா அவன் பொணத்துக்குச் சாமியலங்காரம் வேணும்னு மல்லுக்கட்டுறது?" என ஒருவன் அடிக்கப் பாய்ந்து வந்தான். இரண்டொருவர் பாய்ந்து அவனைத் தடுக்கத் திமிறியபடி இன்னும் வேகமெடுத்துக் கைகளை எதிர்தரப்பில் அலசுவது போல விசிறியதில் இடது கை செங்கானின் கன்னத்தில் பலமாக உரசிக் கடந்தது.

இப்படியொரு விபரீதத்தை எதிர்பார்த்திருந்தால் நிச்சயம் மாரியண்ணன் உடைகளைக் களைந்துவிட்டு இறந்திருப்பாரோ என்னவோ.... அந்தத் தரப்பில் கைகளுக்குக் கிடைத்தவற்றை ஆக்ரோஷமாக எடுத்து வீசினார்கள். இரு தரப்பிலும் தடித்த வார்த்தைகளோடும் கைகலப்போடும் பிரச்சினை விஸ்வரூபமெடுப்பதைப் பார்த்து வரதனுக்கு ஒன்றும் புரியவில்லை.

மூர்த்தி பின்னால் நின்றுகொண்டு "இனிமே இவனுங்கள வச்சிக் கோயில்ல கூத்தே நடத்தக்கூடாது. ..........பயலுங்களுக்கு இவ்வளவு திமிரா? அடிடா அவனை" என உசுப்பேற்றிவிட்டுக் கொண்டிருந்தான்.

யாரோ ஒருவன் அரிதாரத்தைக் கலைப்பதாகக் கூறி மாரியண்ணனின் மீது படுத்து விசும்பிக்கொண்டிருந்த அவர் மனைவியின் முடியைக் கொத்தாகப் பிடித்து இழுத்துத் தள்ளினான். பதிலுக்கு இத்தரப்பிலிருந்து வீசப்பட்ட நாதஸ்வரக் கட்டையால் யாரோ ஒருவனின் மண்டை உடைந்தது. இவ்வளவு நேரம் தேங்காய் உடைத்துக்கொண்டிருந்த கத்திகள்



ஆவேசத்தோடு உயர்ந்து கலகலத்தன. இரத்தத்தில் நனைந்த சட்டையோடு இரண்டு பேர் அவரவர் தரப்பு ஆட்களோடு கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஓடினார்கள்.

நடுவில் சிக்கிக்கொண்டு பிரச்சினையை நிறுத்த முடியாமல் வரதனும் செங்கானும் கையெடுத்துக் கும்பிட்டு மன்றாடிக்கொண்டிருந்தனர்.

'பொம்பள மேல எப்படி கை வைக்கலாம்' எனக் கொதித்துப் போய் முணுமுணுத்துக்கொண்டிருந்த கூத்துக்குழுவோடு தகவலறிந்து வந்த அவர்கள் தரப்பு ஆட்களும் சேர்ந்துகொண்டார்கள்.

போலீஸை அழைப்பதாக மாணிக்கம் போனைக் கையில் எடுத்துக்கொண்டு கத்திய பிறகுதான் ஓரளவு இருதரப்பையும் இழுத்துப் பிடித்து ஓரங்கட்ட முடிந்தது.

"தா பாருங்கைய்யா.. எதுவா இருந்தாலும் காலைல பேசிக்கலாம். முதல்ல தூக்கிட்டுப் போங்க. காலைல வர்றோம் போங்க போங்க" என விரட்டியபிறகு கூட்டம் மெல்லக் கறுவியபடி கலையத் தொடங்கியது.

"என்னண்ணே.. நீங்க? அவனுங்க கேக்குறானுங்கனு நம்ம சாமிய களங்கப்படுத்துறதா? இப்படி அங்க சாய்ஞ்சிட்டீங்களே?" என யாரோ கூட்டத்திலிருந்து கத்தினார்கள்.

உண்மையில் மாணிக்கத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. வரதனைத் தனியாகக் கூட்டிக்கொண்டு போனார்.

“யப்பா.. எனக்கு ஒண்ணும் புரியலை.. அவனுங்க சொல்றது நியாயம்தான். அவனோட அப்பன் கூத்தாடும்போதே விழுந்து மாண்டுருக்கான். அதுவும் சாமி ரூபத்துல.. இது என்னமோ தன்னைச் சாமிக்கே அர்ப்பணிச்ச மாதிரில்ல இருக்கு? அதே நேரம் நீங்க சொல்றதும் சரிதான். ஊர்ல திருவிழா நடக்குற நேரத்துல காரிய வீட்டுல சாமி ரூபத்த அனுமதிக்க முடியாது. எனக்கே கூசுது. என்ன பண்ணலாம்னு நீயே சொல்லு.”

“எனக்கும் ஒண்ணுமே புரியலண்ணே.. திருவிழாவே முதல்ல நடக்குமான்னு தெரியலையே. கோயில் வாசல்ல சாவு விழுந்திருக்கு. தீட்டாயிடாதா?”

“அதெல்லாம் ஒரு தீட்டும் இல்ல. ஐயர கொஞ்சம் நேரமா வரச் சொல்லிட்டா ஏதாவது பரிகாரம் பண்ணிடுவார். நீங்க ஐயருக்கு போனப் போடுங்க” எனச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே வாகனமொன்று அவர்களை நோக்கி வந்தது. கிட்டே வந்து நின்றபிறகுதான் அது போலீஸ் ஜீப்பெனப் புலனாகியது.

வரதனுக்குத் திக்கென இருந்தது. கெட்டது போ என அருகில் ஓடினார். உள்ளிருந்து இறங்கிய எஸ்.ஐ. பிரச்சினை குறித்த தகவலைத் தெரிவிக்காதது குறித்து மாணிக்கத்திடம் கடிந்துகொண்டிருந்தார். செந்திலையும் செங்கானையும் வரச்சொல்லி அமரவைத்துப் பேசினார்கள். இருதரப்பிலும் கடுஞ்சொற்களும் மிரட்டலும் எகிறிக்கொண்டே போகத் திருவிழாவை நிறுத்தச் சொன்னார் எஸ்.ஐ. மாரியண்ணன் உடுத்தியிருந்த சாமியலங்கார உடைகளும் கைப்பற்றப்பட்டுப் போலீஸ் ஜீப்பில் வைக்கப்பட்டன.

இவர்கள் தரப்பில் மாரியண்ணன் மனைவியை இழுத்துத் தள்ளியவனையும் அவர்கள் தரப்பில் மண்டையை உடைத்தவனையும் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு ஜீப் புறப்பட்டது. இரண்டு காவலர்கள் கோயிலைக் கண்காணிக்கத் தோதாகச் சேர் போட்டு அமர்ந்தார்கள். சீரியல் பல்புகளும் கூத்துமேடையும் கலைக்கப்பட்டுக் கூட்டம் விரட்டப்பட்டது.

எல்லோரும் உறங்கச் சென்றுவிட்ட பின்னிரவில் நாற்காலியில் சாய்த்து வைக்கப்பட்ட மாரியண்ணனையே செந்தில் பார்த்துக்கொண்டிருந்தான். திருவிழா நடைபெறாத விரக்தியில் வஞ்சிரத்தான் சாய்ந்து படுத்திருப்பதாகத் தோன்றியது. கொஞ்சம் யோசித்திருக்கலாமோ என யோசிக்கத் தொடங்கினான்.

கோயிலைப் பூட்டியபடி கடந்துசெல்லும் ஒவ்வொருவரிடமும் தலையசைத்தபடி நின்ற மாணிக்கம் சாமி உடுப்பைக் கழட்டச் சொன்னதை இன்னும் வேறு மாதிரி பக்குவமாகப் பேசியிருக்கலாமோ என வருந்திக்கொண்டிருந்தார்.

சற்றுத் தள்ளி நின்று அப்புறப்படுத்துதலைப் பார்த்துக்கொண்டிருந்த மூர்த்தியும் அவனது கூட்டாளிகளும் இருட்டில் கலந்து நடக்கத் தொடங்கினர். பேச்சுவாக்கில் தான்தான் போலீஸை அழைத்ததாகக் கூறிய கூட்டாளி ஒருவனை மூர்த்தி கன்னத்தில் அறைந்தான்.

“போலீஸுக்குச் சொல்லி நோம்பியவே நடக்காமப் பண்ணிட்டியேடா?” எனப் பிடித்து உலுக்கியவனை நிதானமாக நகர்த்தியவாறே “இந்த வருசம் நோம்பி நின்னா என்னடா? இனிமே எப்பவுமே அவனுங்க கூத்தாட முடியாதுல்ல. அடுத்த வருசம் நடன நிகழ்ச்சி நம்ம செலவுதான்.. ஜமாய்ச்சிடுவோம்” எனக் கூற அருகிலிருந்தவர்கள் கைதட்டிச் சிரித்தார்கள்.

வரதன் நீண்ட நேரமாகக் கோயில் வாசலில் அமர்ந்திருந்துவிட்டுத் தளர்ந்த நடையோடு வீட்டுக்குப் புறப்பட்டார். மின்சாரம் துண்டிக்கப்பட்ட கோயில் முகப்பில் கம்பிக்கதவுக்குள்ளிருந்து பார்த்துக்கொண்டிருந்த வஞ்சிரத்தான் சாமிக்கு நேரெதிரே மாரியண்ணன் கூத்தாடிய இடம் தெரிந்தது. அவரை அள்ளித் தூக்கியபோது காலிலிருந்து அறுந்து விழுந்த ஒற்றைச் சலங்கை மேற்கில் சரிந்துகொண்டிருந்த நிலவொளியில் லேசாக மிளிர்ந்தது.

■

**யோகேஷ். பு,**
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.






# அம்பலமாகும் கோர முகங்கள்

**நூல் : என் ஆடையென்பது யாருடைய குருதி?**
**ஆசிரியர் : சிவகுருநாதன்**

இது ஒரு ஆய்வு நூல். இயந்திரங்களின் வருகையால் நெசவுத்துறை அபார வளர்ச்சியடைந்தாலும் தறிகளின் முன்னேற்றம் மட்டுமே சொல்லிக்கொள்ளும்படியாக இருக்கிறது. இத்தொழிலில் காலங்காலமாக ஈடுபட்டுவரும் நெசவாளியின் வாழ்க்கையோ மேலும் மேலும் நலிவடைந்து கேள்விக் குறியாகிக்கொண்டிருக்கிறது. பாரம்பரிய முறையில் நெசவுத்தொழிலில் ஈடுபட்டுவரும் நெசவாளிகளின் வாழ்வு ஒருபுறம் இப்படி இருக்க, பெரு நிறுவனங்களால் நவீன இயந்திரங்களின் மூலம் நடந்துவருகிற ஆடை உற்பத்தி நிலையங்களில் கூலித்தொழிலாளியாகச் சென்று சேர்பவர்களின் நிலை மறுபுறம் கவலைக்கிடமாக இருந்துவருகிறது.

நாளுக்குநாள் இவர்கள் புதுப்புது பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக இத்தொழிலில் ஈடுபடும் பெண்களின் நிலை பரிதாபத்துக்குரியது. தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் அமைந்துள்ள ஆடை உற்பத்தி நிறுவனங்களில் நிகழ்த்தப்பட்ட நேரடி களஆய்வின் தொகுப்பாக இந்நூலை ஆசிரியர் வெளிக்கொண்டு வந்துள்ளார் என்பதாலோ என்னவோ வாசிக்கையில் பெரும் பதற்றத்தையும் பீதியையும் அடைகிறோம். இயந்திரங்களின் பேரிரைச்சலுக்கு நடுவே வெளியேறாத ஏழைக் கூலித்தொழிலாளர்களின் நசுக்கப்பட்ட குரல்வளையை அள்ளிவந்து நமக்குப் படையலிடுவதாய் அமையும் இந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் ஆதிக்க மனப்பான்மையின் கோர முகங்கள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு தொழிலாளி தானாக முன்வந்து தன் உழைப்பைக் கொடுக்காதவரை தண்டனை அல்லது அச்சுறுத்தல் மூலம் பெறப்படும் வேலை அல்லது சேவையைக் கட்டாய உழைப்பு என்றே குறிப்பிட வேண்டும் எனச் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு மாநாட்டில் (1930) வரையறை செய்திருக்கிறார்கள். இதற்கு இந்தியாவும் ஒப்புதல் அளித்துள்ளது. கட்டாய உழைப்பு என்பது இந்திய அரசியலமைப்பால்

அனைத்துக் குடிமக்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல் எனச் சுட்டப்பட்டுள்ளது. ஆனால், நூற்பாலைகள் அப்படியில்லை. அரசியலமைப்புபற்றியோ, சட்டங்கள்பற்றியோ அவர்களுக்குக் கவலையில்லை. பல ஏழைக் குடும்பங்களின் இயலாமையை, வறுமையைப் பயன்படுத்திக்கொண்டு மிகவும் கடுமையான முறையில் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தி வந்தன. கேட்பாரற்ற ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் குழந்தைகளுமே அவைகளின் முதன்மையான இலக்கு.

குறைவான வேலை நேரம், போதுமான ஊதியம் என ஆசைப்பட்டு ஆரம்பத்தில் பலரும் நூற்பாலைகளில் ஊழியர்களாய்ப் போய்ச் சேர்ந்தனர். ஆனால், அதன் பிறகு நேரம் அதிகமாக மாற்றப்படுகிறது. குறைவான ஊதியம், அதிக நேர வேலை என நிலை தலைகீழாக, ஊழியர்கள் உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

18 வயது பூர்த்தியடையாத குழந்தைகளைக் குறிவைத்து அவர்களின் கல்விக்குச் சம்பந்தப்பட்ட உதவிகள் செய்வதாக வாக்குறுதி கூறி அழைத்துச் சென்று நூற்பாலைகளில் வேலையாட்களாக நியமித்தனர். நல்ல ஊதியத்துடன் கூடிய வேலை, வசதியான தங்கும் இடம், மூன்று வேளைக்கும் சத்தான உணவு, பெண்கள் தங்களது திருமணத்தின்போது வரதட்சணைக்கான தொகை ஆகியவற்றை நாங்களே தருகிறோம் போன்ற பல்வேறு கவர்ச்சி விளம்பரங்களால் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களையும், பெண்களையும் அழைத்துப்போய்க் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தி அடிமைகளைப் போல நடத்தியிருக்கின்றனர்.

இப்படி, நூலின் வழியாகப் பல திடுக்கிடும் தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. பாலியல் ரீதியிலான தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன. வெளியூர்களிலிருந்து கூட்டி வரப்பட்ட பெண்களை அவர்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் தங்கும் விடுதிகளில் வைத்தும், நூற்பாலைகளில் வைத்தும் சீரழித்திருக்கிறார்கள். ஒழுக்கமற்ற அந்தத் தங்கும் விடுதிகளில் இருக்க முடியாமல் சில பெண்கள் தப்பித்து ஓடியிருக்கிறார்கள். பலர் வீட்டிற்குச் செல்லமுடியாமலும் தப்பிக்க முடியாமலும் இதனையெல்லாம் சகித்துக்கொண்டு வாழ வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மானம் காக்கும் ஆடையினை உருவாக்கும் இடத்தில் எந்த ஒரு பெண்ணின் மானமும் காப்பாற்றப்படவேயில்லை எனும்போது வெட்கித் தலைகுனிந்துதான் போகிறோம். இந்த நூலின் ஒவ்வொரு பக்கத்தையும் படிக்கப் படிக்கக் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கிறது.

நூற்பாலைகளில் உருவாகும் ஒவ்வொரு ஆடைக்குப் பின்னும் ஏதோ ஒரு குழந்தையின் கனவு சிதைந்துகொண்டிருப்பதை உணர்த்தி நம்மை மீண்டும் மீண்டும் குற்றவுணர்ச்சிக்கு உள்ளாக்குகிறார் ஆசிரியர்.

பெண்கள், சிறார் ஊழியர்கள் என உற்பத்திக் கூடங்களில் எல்லோரும் செக்குமாடுகள் போல நடத்தப்படும் அவலங்களை விளக்கிவரும்போது, யாவற்றையும் தகுந்த ஆதாரங்களுடனும் முன்வைக்கிறார்.

காலனி ஆதிக்கக் காலத்தில் கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட மக்களின் வாழ்க்கை, விடுதலைக்குப் பின்னரும் நூற்பாலைகளின் உதவியுடன் தொடர்ந்திருக்கிறது என்பதைத்தான் இந்நூலின் வாசிப்பு முடிவில் நான் உணர்ந்துகொண்டேன். நாம் விடுதலை அடையவேண்டியது மனிதர்களிடமிருந்து அல்ல; ஆதிக்கச் சிந்தனையிலிருந்தே என்பதை மீண்டும் மீண்டும் நினைவூட்டியபடியே இருக்கிறது இந்த நூலும்; இதில் வரும் மனிதர்களும்.

நம்மோடு ஏதோ ஒரு வகையில் இங்குள்ள எல்லாமும் தொடர்புபட்டுத்தான் இருக்கும். யாதொன்றும் இங்கு எவருக்கும் அந்நியப்பட்டதல்ல. எல்லோருக்கும் சமூகம் சார்ந்த பொறுப்பும் கடமைகளும் இருக்கின்றன. எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என நாம் கடந்து போகும் ஒரு நொடியில்தான் பெரும் வரலாற்றுப் பிழைகள் நிகழத் தொடங்குகின்றன. நம் வாழ்வில் நம்மைச் சுற்றி இப்படி இன்னமும் எத்தனையோ மனிதர்கள்; அவர்களையும் நாம் கண்டுகொள்ளத்தான் வேண்டும். இந்நூலாசிரியர் சிவகுருநாதன் நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, நெசவின் ஆன்மாவாக அமைந்திருக்கும் பாவடிகளுக்கு இந்நூல் ஒரு படையல். ■

கவிஞர் ஏகாதசி
ஓவியங்கள் : அன்பழகன்



# ‘வாக்கப்பட ஆச...’

நீங்கள் எப்போது மெட்டுக்கு எழுதப் பழகுனீர்கள் என்று பல நேர்காணல்களில் நண்பர்கள் கேட்பது வழக்கம்.

மழை பெய்கிற சத்தமும், மாடு கத்துகிற சத்தமும், குமரி சிரிக்கிற சத்தமும் கோழி கூவுகிற சத்தமும் ஒரு தாளத்தில்தான் இருக்கின்றன. குயிலின் சத்தமும், தூரத்தில் இருப்பவனைக் கூப்பிடுகிற சத்தமும்கூட அப்படித்தான். இதைத்தான் நான் அவர்களுக்குச் சொல்வது. நான் எழுதத் தொடங்கியபோதே எதுகையும் மோனையும் என்னுடன் வந்து அமர்ந்துகொண்டதற்கு இதுதான் காரணம். என்னோடு இணைந்து வாழ்கிற சீவராசிகளெல்லாம் ஒரு தாள சுகத்தில் வாழ்வை நகர்த்துகிறபோது நான் மட்டும் எப்படி விலகி நிற்க முடியும்.

வறுமைதான் என்னுடைய தகுதி என்பேன். என் பேனாவிற்குக் காதலைப் பொழியச் செய்யவும், போரை நிகழ்த்தச் செய்யவும் கற்றுத் தந்தது வறுமைதான். நான் வளர்ந்தது வறுமை நிறைந்த மண். வலி நிறைந்த மண். வறுமையும் வலியும் ஒருவனை இலக்கியவாதியாக மாற்றிவிடுகிறது. அவனின் காயம் நிறைந்த வாழ்வே அவனுக்கான பாடுபொருளாகிவிடுகிறது. அதனால்தான் வறட்சி மாவட்டமான ராமநாதபுரத்தில் எண்ணற்ற எழுத்தாளர்கள் தோன்றினார்கள்.

அப்பன் இறந்தால் அழும் மகள் ஒப்பாரியை எங்கு கற்றுக்கொண்டு வருகிறாள். அவள் பாடும் ஒப்பாரியைச் சீர் பிரித்துப் பாருங்கள், இலக்கணம் தப்பாது. அப்படித்தான் எனக்குள்ளும் இருந்திருக்கிறது. மெட்டோடு எழுதத் தெரிந்த எனக்குப் பிற்காலத்தில்

மெட்டுக்கு எழுதுவது சுலபமாகவே இருந்தது.

**"வாக்கப்பட ஆச - நா**

**வளவி தொட ஆச**

**அப்பன் வீட்டப் பிரிஞ்சு கொஞ்சம்**

**அழுதுபாக்க ஆச"**

எனும் பாடல் ஒசூரில் தமுஎகச நடத்திய பாடல் உருவாக்கப் பட்டறையில் நான் எழுதியது. அன்றைக்கு இந்தப் பட்டறையைப் பொறுப்பேற்று நடத்தியது இன்றைக்குத் தமுஎகசவின் மாநிலப் பொதுச்செயலாளராக இருக்கும் எழுத்தாளர் தோழர் ஆதவன் தீட்சண்யா அவர்கள். அப்போதுகூட சில தோழர்கள் இந்தப் பாடல் பெண்ணடிமைத்தனத்தை வழிமொழிகிறதென விமர்சனம் வைத்தார்கள். நான் இந்தப் பாடலில் கிராமத்தில் வாழ்கிற ஒரு சாதாரணப் பெண்ணின் வலி என்னவோ அதைச் சிதைக்காமல் பாடலாக்க நினைத்தேன்.

ஒட்டுமொத்தப் பெண்களுக்கும் இழைக்கப்படுகிற அநீதி மிக அபாயகரமானது. அதிலும் கிராமத்துப் பெண்களுக்குச் சொல்லவே வேண்டாம். நகரத்துப் பெண்களுக்காவது பெண் பார்க்க வரும் மாப்பிள்ளையைக் கொஞ்சம் நிராகரிக்கிற உரிமை இருக்கிறது. ஆனால் கிராமத்துப் பெண்களுக்கு அதுவும் இல்லை என்பதை,

"ரப்பர் வளவிக்கு

சத்தமிடத் தெரியாது"

என வைரமுத்து ஒரு கவிதையில் எழுதியிருப்பார். மண்ணோடு மல்லுக்கட்டி நகரும் பிழைப்பில் இரண்டு மூன்று பெண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் ஒருத்தியை எப்படியாவது தள்ளிவிட்டால் பாரம் கொஞ்சம் குறையுமே என்கிற எண்ணத்தில் பெண் கேட்டு வருகிறவன் நல்லவனா கெட்டவனா, குடிப்பழக்கம் உள்ளவனா இல்லாதவனா, நிரந்தர வேலை பார்க்கிறவனா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் எந்த ஒரு விசாரிப்பும் அற்றுப் பெண் கேட்டுவந்தாலே போதுமென்று திருமணம் முடித்துக் கொடுத்துவிடுவார்கள். பெண்ணை அந்தப் படலத்தில் சம்மதம் தெரிவிக்க மட்டுமே உட்காரவைத்திருப்பார்கள். திருமணம் முடித்துப்போன பெண் மூன்றாம் நாளே முகம் வீங்கிப்போய்ப் பிறந்த வீட்டிற்கு வருவாள். அல்லது புகுந்த வீட்டின் தொல்லை தாங்காமலும் பிறந்த வீட்டின் இயலாமையினாலும் தற்கொலை செய்துகொள்வாள். இது போன்ற விசயங்கள் பெண்களுக்கு நடப்பது ஏராளம். இதில் யாரையும் நாம் குற்றவாளியெனக் கொள்ளமுடியாது. சமூகத்தின் மொத்தக் கட்டமைப்பும் நாசமாய்ப் போனதுதான் முழுக் காரணம்.

இந்த மனித சமூகம் வெள்ளந்தியானது விபரமற்றது. அதிகாரத்தில் இருப்பவர் சொல்லை ஆண்டவனின் சொல்லாய்க் கேட்பார்கள். அதிலும் ஆண்டவன் சொன்னதாகச் சொன்னால் மறுப்பே கிடையாது, அதனால்தான் அன்றையிலிருந்து இன்றுவரை மக்களை மூடர்களாக்க அதிகாரம் படைத்தவர்களும் அதிகாரம் படைப்பதற்காக வருபவர்களும் மக்களிடம் கடவுளின் வழியாகவே வருகிறார்கள்.

எங்கள் ஊர்ப் பஞ்சாயத்தைச் சேர்ந்த கலுங்குப்பட்டி எனும் குக்கிராமத்தின் அருகில் எங்கள் தாத்தாவுக்குச் சொந்தமாகக் கல்குவாரி இருந்தது. என் மாமாக்களும் சித்திமார்களும் அங்குதான் கல் உடைப்பார்கள். தாத்தா இரண்டு மாடுகளைப் பிடித்துக்கொண்டும் பாட்டி இவர்களுக்குச் சாப்பாட்டைத் தயாரித்துக்கொண்டும் வருவார்கள். நான் சிறுவன் அப்போது. பள்ளி விடுமுறை காலங்களில் இவர்களோடு நானும் குவாரிக்குப் போவது வழக்கம்.

அங்கே பஞ்சு என்கிற அக்கா. அவர்களது தோட்டத்தில் ஒரு ஆண் செய்கிற அத்தனை வேலைகளையும் செய்கிறவளாக இருந்தாள். வயது முப்பது கடந்தும் திருமணம் ஆகாமல் இருந்தாள். ஒருநாள் மாலைப்பொழுது. பயிர்களுக்குக் கிணற்றில் கமலையால் நீர் இறைத்துக்கொண்டிருந்தாள் அக்கா. அப்போது வேலை முடித்துவிட்டு இறவை நீரில் அங்கே குளித்துக்கொண்டிருந்த என் மாமா ஒருவரிடம், அவள் பேசிக்கொண்டிருக்கும்போதே,

**"மதுர இட்டிலி**

**மானாமதுர சட்டினி**

**சாப்பிட்டவன் பட்டினி**

**அது என்ன?"**

என்று ஒரு விடுகதையைப் போட்டாள். அவருக்குப் பதில் தெரியவில்லை. எனக்கும் தெரியவில்லைதான். ஆனால் அந்த உரையாடல் முழுக்க முழுக்க அவர்கள் இருவருக்குள்ளானது. என் மாமா யோசித்துப் பார்த்துவிட்டு ஒன்றும் பிடிபடாமல் அதற்கான விடையை அவளிடமே கேட்டதற்கு அக்கா சொல்ல மறுத்துவிட்டாள். மாமா கெஞ்சினார். இரவெல்லாம் யோசித்து விடையைக் கண்டுபிடிக்குமாறும் அதன்பிறகும் தெரியாவிடில் நாளை சொல்வதாகவும் கடந்துவிட்டாள். விடை மாமாவுக்குத் தெரியாதது உண்மைதான். ஆனால் மாமாவை இரவெல்லாம் யோசிக்கச் சொன்னது அவரின் அறிவுக்குவிட்ட சவால் அல்ல. நான் குறுக்கே இருந்ததுதான் என்பது நான் பெரியவனான பிறகே தெரிந்தது. நான் அங்கே இல்லாமல் இருந்திருந்தால் என் மாமாவிடம் அந்த அக்கா விடையைச் சொல்லியிருப்பாள். அப்படி விடை சொல்லப்பட்டிருந்தால் ஒரு சகாப்தம் அழிந்திருக்காது.

ஒரு வேலையை முடிந்த அளவிற்கு உடனே செய்துவிட வேண்டும் ஒத்திவைக்கக் கூடாது என்பதை அந்த நிகழ்வே பிற்காலத்தில் எனக்குக் கற்றுத் தந்தது. காரணம் மறுநாளும் விடை தெரியாமல் போன மாமாவுக்குப் பஞ்சு அக்கா தன் தற்கொலையைத்தான் விடையாகத் தந்துவிட்டிருந்தாள்.

எங்கள் எல்லாருக்கும் பெரும் அதிர்ச்சி தந்த பொழுதது. அக்கா எதற்காக இறந்திருப்பாள் என்பதை நானறிவேன். பொய்த்துப்போன விவசாயம், கடன் துயர், சோற்றுக்கே பஞ்சம் இப்படியான சூழலே வீடு சூழ்ந்து நிற்கையில் தனக்குக் கல்யாணம் மட்டும் என்ன இனிமேல் நடந்துவிடவா போகிறது என்கிற பேரேக்கம் அவளின் மூளையைக் குடைந்து குடைந்து கொன்றிருக்கும்.

நான் அங்கே குறுக்கே இல்லாமல் இருந்திருந்தால் ஒரு சகாப்தம் அழிந்திருக்காதென நான் மேலே சொன்னதற்குக் காரணம், அந்த விடுகதைக்கு விடை அந்த மாலையே சொல்லப்பட்டிருந்தால் மாமாவுக்கும் அந்த அக்காவுக்கும் காதல் உண்டாகி அந்த மரணச் சூழல் மனதைவிட்டு அகன்றிருக்கலாம். என் மாமாவுக்கும் அந்த அக்காவிற்கும் அழகானதொரு உரையாடல் நிகழ்ந்திருக்கும். அன்றைய மாலைப் பொழுது இன்னும் சிவந்துபோயிருக்கும். ஆம் நண்பர்களே அந்த விடுகதையின் விடை ஓர் ஆணும் பெண்ணும் கலவி வைத்துக்கொள்ளுதல் ஆகும்.

பிறந்த வீடு புகுந்த வீடு என்பது ஒரு பெண்ணுக்கு மட்டுமல்ல ஒரு ஆணுக்கும்தான் இருக்க வேண்டும். அந்தச் சமத்துவம்தான் ஒரு பெண்ணின் வலிக்கு வழிசெய்யும். திருமணம் நடப்பதில் பொருளாதாரச் சிக்கல் இருக்கிற பெண்கள் பிறந்த வீட்டில் இருந்தபடியே வாழ்வைக் கடைசிவரை ஒப்பேத்தி விடலாம் என்றுகூட முடிவு எடுக்க முடியாமல் போகிற அவலம் திருமணம் நடக்காமல் போகிற அவலத்தை விட மோசமானது. இந்த நிலைமை ஒரு வீட்டில் பெண்ணுக்கு மட்டும்தான். ஆணுக்கு விதிவிலக்கு.

அதே சமயம் வரதட்சணை செய்ய இயலாத குடும்பங்களில் திருமணம் ஆகாத பெண்களுக்குச் சராசரி ஆசைகள் இருக்கத்தானே செய்யும். பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வு மாற்றமின்றி இருந்து விடுவது அத்தனை மோசமானது. பிறக்க வேண்டும், சுதந்திரமாக



விளையாட வேண்டும், படிக்க வேண்டும், பூப்பெய்திட வேண்டும், பணியில் சேர்ந்திட வேண்டும், காதலிக்க வேண்டும், திருமணம் ஆக வேண்டும், பின்னர் மகிழ்ச்சி நிரம்பி வாழ வேண்டும், குழந்தை பெற வேண்டும், மீண்டும் பணிக்குச் செல்ல வேண்டும் என்றுதானே இருந்திருக்கும்.

ஆணின் கனவுகள் இவ்வளவுதான் இருக்குமா. அது பிரமாண்டமானது. தடையிராதது. ஆனால் ஏழை வீட்டுப் பெண்ணின் சொற்பமான இதுபோன்ற கனவுகளும் பலித்திட வழியின்றி வாழ்வு, முதிர்கன்னியாய் இருந்து காலமெல்லாம் அழுதுகிடப்பதும் அல்லது பஞ்சு அக்கா போன்று தற்கொலை செய்துகொள்வதுமாகத்தான் இருக்கிறது.

என் பள்ளிப் பருவத்தில் எங்கள் ஊரில் தூக்கு மாட்டிக்கொண்ட 18 வயது ஜமுனா அக்காவுக்கும், எங்கள் ஊர் பால்வாடி கட்டிடத்தில் என் அம்மாவோடு வேலைசெய்த பதின்ம வயது மகமாயி அக்காவுக்கும், காலை நேரம் ஒரு சிறிய வீட்டிற்குள் தன் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீயைக் கொளுத்திக்கொண்ட தமயந்தி அக்காவுக்கும் கூட இதுபோன்ற ஏதோ ஒரு பிரச்சனையாகத்தான் இருக்குமோ என்று இன்று நினைத்துப் பார்க்கிறபோது நெஞ்சம் வெடித்துவிடும்போல் இருக்கிறது.

இப்படி திருமணமாகாமல் இறந்த பெண்களின் இதயம் பேசுவதாகவும் அல்லது இப்போதும் குடிசையில் வசித்துக்கொண்டு எளிய கனவுகளோடு வாழும் பெண்களின் மனசாட்சியாகவும்தான் இந்தப் பாடலை உருவாக்கினேன்.

*பல்லவி*

**வாக்கப்பட ஆச - நான்**

**வளவிதொட ஆச**

**அப்பன் வீட்டப் பிரிஞ்சு கொஞ்சம்**

**அழுது பாக்க ஆச**

**கோபுரமா நான் கேட்டேன் சாமி - குயிலு**

**உக்கார கூடு ஒண்ணு காமி**

*சரணம் - 1*

**வகிடெடுத்துப் பொட்டு வச்சுப் பாக்க ஆச**

**விதவிதமா சேல கட்டிப் பாக்க ஆச**

**வேல விட்டு வரும் வரக் காத்திருக்க ஆச**

**வீட்டுக்காரன் மல்லிகப் பூ வச்சுவிட ஆச**

**சித்திரத் திருவிழா தேரு பாக்க ஆச**

**செங்காட்டுப் பாதையில சேந்து போக ஆச**

**தூரத்துல வாக்கப்பட்ட தோழி கத பேச**

**தாலி கேட்டு நானழுத காளி கத பேச**

**எனக்கெப்போ வருமந்தத் திருநாளு**

**தெனந்தோறும் கிழியுதுங்க தேதித்தாளு**

**வாங்கி வந்த வரமா - நான்**

**கருவேல மரமா...**

*சரணம் - 2*

**செத்துப்போன அண்ணன்போல**
**பெத்துக்கொள்ள ஆச**

**சீமையிலே இல்லாத பேரு வைக்க ஆச**

**வீட்டுக்கொரு கடுதாசி போட்டுவிட ஆச**

**வெள்ளச்சாமி வாத்தியாரக் கேட்டுவிட ஆச**

**வச்சுவிட்டு வந்த செடி போயிப் பாக்க ஆச**

**தங்கச்சிக்கு மூக்குத்தி வாங்கிப் போக ஆச**

**ஜாதியால வெட்டிக்கிட்ட ஊரு கத பேச**

**சீர்வரிசை செய்ய வீட்ட வித்த கத பேச**

**எனக்கெப்போ வருமந்தத் திருநாளு**

**தெனந்தோறும் கிழியுதுங்க தேதித்தாளு**

**வாங்கி வந்த வரமா - நான்**

**கருவேல மரமா...**

இந்தப் பாடலுக்கு மெட்டமைத்த கரிசல் குயில் கிருஷ்ணசாமி அண்ணனை எப்படிப் பாராட்டுவது என்று தெரியவில்லை எனக்கு. ஒரு பெண்ணாய் மாறித் துயரம் உணராமல் இப்படி ஒரு உயிர் சுடும் மெட்டைப் போட்டிருக்க முடியாது. தோழர் காளத்தி தயாரித்த "பெண் அழகானவள்" எனும் தனியிசை ஆல்பத்தில் இந்தப் பாடல் இடம்பெற்றிருக்கிறது.

இந்தப் பாடலை உணர்ந்து உணர்ந்து பாடிய திரைப்பாடகி பத்மலதா அவர்களின் குரல்வழி என் அக்காக்களை வணங்குகிறேன். ■

## பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

சதுரங்கம் விளையாடுவாயா
என்றபடியே வெளியே வந்தான் அவன்

விளையாடுவேன் ஆனால் பெரிய ஈர்ப்பெல்லாம் இல்லை அதன்மேல்
அதனால் அதிகம் அதை விளையாடுவதில்லை என்றேன்

மூளையைப் பயன்படுத்தத் தெரியாதவருக்கு
ஈர்ப்பு இல்லாமல்தான் போகும் என்றான் சிரித்தபடியே

ஒரே இடத்தில் உட்கார்ந்துகொண்டு விளையாடுவதெல்லாம் ஒரு விளையாட்டா?
என்றேன் கோபமாக...

ஓடியாடி விளையாடுவது மட்டும்தான் விளையாட்டா? என்று மீண்டும் சிரித்தான்...

வியர்வை வராத விளையாட்டை விரும்புவதில்லை என்றேன்

உடற்தகுதியை விட
மூளைத்தகுதி முக்கியமில்லையா?
விளையாடக் கற்றுக்கொள்வதைவிட
ஒரு விளையாட்டிலிருந்து என்ன கற்றுக்கொள்கிறோம் என்பதே முக்கியம் என்றான்

சதுரங்க விளையாட்டு அப்படி என்ன சரித்திரத்தைக் கற்றுக் கொடுத்துவிடும் என்றேன்

உனக்கு வாழ்வைக் கற்றுக் கொடுக்கும்
சதுரங்க விளையாட்டை உற்றுக் கவனி..
கருப்பு வெள்ளை நிறம் மட்டுமல்ல அது இரவு பகல் என இயற்கையைக் குறிக்கும்.
எட்டு வரிசைகள் எட்டு திசைகளைக் குறிக்கும்
அறுபத்து நாலு கட்டங்கள் கலைகளைக் குறிக்கும்
சிப்பாய்களோ, யானைகளோ, குதிரைகளோ, மந்திரிகளோ இருந்தாலும் அதிக அதிகாரம் ராணியிடம்
இருப்பது பெண் சுதந்திரத்தைப் பிரதிபலிக்கும்
நீ ராஜாவாகவே இருந்தாலும் ஒரு அடிக்கு மேல் நகரமுடியாது என்பது எதார்த்தத்தைக் குறிக்கும்
என்றான்.
அவன் மேலும் சொன்னான்
கட்டங்களில் காய் நகர்த்துவது விளையாட்டு
காலகட்டங்களில் காய் நகர்த்துவது வாழ்க்கை என்று சொல்லிவிட்டு மறைந்தான்

– அவன் இன்னும் சொல்வான்

மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

பள்ளியில் படிக்கிற காலங்களில், சில மாதங்கள் வந்தாலே மனம் றெக்கை கட்டிக்கொள்ளும். அப்படியான மாதங்களுள் புரட்டாசியும் ஒன்று. அதற்கடுத்த ஐப்பசி மாதத்தில் வரும் தீபாவளிக்கான முன்கொண்டாட்டம் புரட்டாசி மாதத்திலேயே தொடங்கிவிடும்.

புரட்டாசி மாதத்தில் வருகிற அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி, 10 நாட்களுக்குத் தினமும் ஒரே கொண்டாட்டமாக இருக்கும். ஆமாம்... நவராத்திரி வந்தாலே உற்சாகம் தொற்றிக்கொள்ளும். நவராத்திரியையொட்டி வீடுகளில் வைக்கும் கொலுவைப் பார்க்கத் தினமும் தவறாமல் நண்பர்களைக் கூட்டிக்கொண்டு சென்றுவிடுவேன்.

எங்கள் வீடிருந்த திருக்கோகர்ணம் கோவில்பட்டி சாலையில் வசித்தவர்கள் எல்லாமே சாதாரண மக்கள்தான். பெரும்பாலும் ஓட்டு வீடுதான். இரண்டே இரண்டு வீடுகள் மட்டுமே மாடி வீடுகளாக இருந்தன. அவர்களுக்கு எல்லா நாளும் சாதாரண நாள்களே. ஆனால், எங்கள் வீட்டிலிருந்து சுமார் 200மீ தூரத்தில் பெரிய தெரு இருந்தது. அந்தத் தெருவில் அதிகமாகப் பார்ப்பனர்கள் வசித்துவந்தார்கள்.

அவர்களும் பெரிய வசதி படைத்தவர்களாக இல்லாவிட்டாலுங்கூட, அந்தத் தெருவில் இருக்கும் அறுபது எழுபது வீடுகளில் சுமார் 10 வீடுகளிலாவது நவராத்திரி கொலுவை வைப்பார்கள்.

வீட்டின் நடுக்கூடத்தில் கொலு மேடையொன்றினை அமைத்து, அதில் படிக்கட்டுகளை ஒன்றன்கீழ் ஒன்றாக வைப்பார்கள். அந்தப் படிக்கட்டுகளில் அழகழகான – விதவிதமான கொலு பொம்மைகளை வைப்பார்கள். பல வண்ணங்களில் மண்ணால் செய்யப்பட்ட கலைநயமிக்க பொம்மைகளை ஒரே இடத்தில் மொத்தமாகப் பார்ப்பது அவ்வளவு சந்தோசத்தைத் தரும். கொலு என்றால் இதுமட்டும்தானா..? இன்னொன்றும் இருக்கிறதே!

கொலுவில் இடம்பெற்றிருக்கும் கடவுள்களுக்குத் தினமும் ஏதாவது ஒரு பொருளைப் படைத்து வழிபடுவார்கள். சுண்டல், பொரி, அவல், பழங்கள், பொங்கல் என ஏதாவது ஒன்றைப் படைப்பார்கள். தினமும் கொலு பார்க்க வரும் குழந்தைகளின் கைகளில் அந்தப் படையலிட்ட பொருளில் கொஞ்சம் அள்ளித் தருவார்கள்.

சிறுவயதில் பெரிய தெருவில் இருந்த எனது வகுப்புத்தோழன் ரவியின் வீட்டில்தான் பெரும்பாலான எனது பொழுதுகள் கழியும். ரவியின் தந்தை கல்யாணசுந்தரம், கோவில் குருக்களாக இருந்தார். அவரை அய்யா என்றே அழைப்பேன். ரவியும் அப்படித்தான் அழைப்பான். கல்யாணி அம்மாவை மாமி என்பேன். ரவியின் அண்ணன் சுப்பிரமணியன் எனக்கும் அண்ணன். பொன்னியைத் தங்கை என்பேன். ரவிக்கு மூன்று அத்தைகள் இருந்தார்கள். அந்தக் குடும்பத்தைத் தாங்கிப் பிடித்த தூண்கள் அவர்கள். தனது தம்பியின் குடும்பத்தைத் தன் குடும்பமாக நினைத்து வாழ்ந்தவர்கள். மூவருமே ஆசிரியர்கள். வீட்டிற்கு வருபவர்களிடம் மிகுந்த அன்பைப் பொழிவார்கள். எனது நண்பர்கள் அனைவரையும் ரவி வீட்டிற்கும் நான் அழைத்துச் செல்வேன்.

ரவி வீட்டின் எந்தப் பகுதிக்கும் தயக்கமேதுமின்றி நான் செல்வேன். அவ்வளவு உரிமை உண்டு. எனக்கு மட்டுமல்ல; மணி, ரவியின் எல்லா நண்பர்களுக்கும் அந்த உரிமை அவர்கள் வீட்டில் கிடைக்கும். யாரையும் அவர்கள் ஒருபோதும் பிரித்துப் பார்ப்பதில்லை. ஆனால், அந்தத் தெருவிலுள்ள சில பார்ப்பனர் வீடுகளில் மற்றவர்களை வீட்டின் குறிப்பிட்ட பகுதி வரை மட்டுமே அனுமதிப்பார்கள்.

ஆனால், நவராத்திரிக்கு நடுவீட்டில் கொலு வைக்கையில், கொலுவைப் பார்க்க வரும் யாரையும் எதுவும் சொல்லாமல் நடுவீடு வரை அனுமதிப்பார்கள். இன்றைக்கு யாரார் வீட்டில் என்னென்ன கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்போடு நண்பர்கள் கூட்டத்தோடு கிளம்பிச் செல்வேன். ரவி வீட்டிலும் கொலு வைப்பார்கள். கொலு வைக்கும் வேலைகளை நானும் உடனிருந்து செய்வேன். என்னுடன் படித்த லதா, சீனிவாசன் போன்ற நண்பர்களின் வீடுகளில் வைக்கும் கொலுவிற்குக் கூடுதல் உற்சாகத்தோடு செல்வேன்.

என்னை விடச் சின்ன வயது பையன்கள் அவர்களது தம்பி, தங்கைகளைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு கொலு பார்க்க வருவார்கள். ஏனிப்படி சிரமப்பட்டு தூக்கிக்கொண்டு வருகிறார்கள் என்று நினைப்பேன். சிறுகுழந்தைகளை அவர்கள் தூக்கிவருவதன் காரணம் எனக்கு முதலில் புரிபடவில்லை. பிறகுதான் புரிந்தது, கொலு வீடுகளில் தரும் சுண்டலோ, பொரியோ தூக்கிவரும் தம்பி, தங்கைகளின் கைகளுக்கும் கூடுதலாக ஒரு பிடி கிடைக்கும். அதில் தூக்கி வருபவர்களுக்கும் பங்கிருக்குமல்லவா..!

மூன்று அண்ணன்கள், நான்கு அக்காக்களோடு பிறந்த கடைக்குட்டிப் பையனான எனக்கு மிகுந்த வருத்தமாக இருக்கும். ஆகா... நமக்கொரு தம்பி, தங்கை இல்லையே என்று. ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் வந்தாலே என்னை இந்தக் கவலை கவ்விப் பிடித்துக்கொள்ளும். பிறகு எண்பதுகளின் தொடக்கத்தில் கவிதைகள் வாசிக்கத் தொடங்கியபோது, ஒரு கவிதை என்னை அப்படியே இறுகப் பிடித்து, பத்தாண்டுகளுக்கு முன்னே அழைத்துச் சென்றது.

**‘கொலு வைக்கும் வீடுகளில்**<br>
**ஒரு குத்து சுண்டல்**<br>
***அதிகம் கிடைக்குமென்று***<br>
***தங்கச்சி பாப்பாக்களைத்***<br>
***தூக்க முடியாமல்***<br>
***தூக்கி வரும்***<br>
***அக்காக் குழந்தைகள்.’***

ஆகா... இது நான் எழுதியிருக்க வேண்டிய கவிதையல்லவா... என்று மனம் ஒரு கணம் குதித்தது. யாரிந்த கவிஞரெனத் தேடினேன். என் பார்வைக்குப் பிரசன்னமானார் கவிஞர் கலாப்ரியா.

எஸ்.கே.சோமசுந்தரம் என்ற இயற்பெயருக்குச் சொந்தக்காரர் கலாப்ரியா.

திருநெல்வேலி மாவட்டத்தில் 1950ஆம் ஆண்டு ஜூலை 30 அன்று கந்தசாமி – சண்முகவடிவு தம்பதியினரின் மகனாகப் பிறந்தார். தனது சிறுவயதில் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகனாக இருந்தவர், தி.மு.க.வில் தன்னைத் தொண்டராக இணைத்துக்கொண்டார்.

1960களின் பிற்பகுதியில் நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரியில் கணிதவியல் படிக்கையில் கவிதைகளை எழுதத் தொடங்கினார் கலாப்ரியா. 1969இல் பேரறிஞர் அண்ணா மறைந்ததையொட்டிக் கல்லூரி மாணவர்கள் நடத்திய கூட்டத்தில் இரங்கல் கவிதையொன்றினை வாசித்தார். பின்னர் கவிஞரும் எழுத்தாளருமான வண்ணநிலவன் நடத்திய 'பொருநை' எனும் கையெழுத்துப் பத்திரிகையில் கவிதை எழுதும்போது, 'கலாப்ரியா'வானார். 'கசடதபற' இதழில் கலாப்ரியா எழுதிய கவிதைகள் கவனம் பெறத் தொடங்கின. வானம்பாடி, தீபம், கணையாழி, அன்னம் விடு தூது, தெறிகள், கொல்லிப்பாவை, ழ, சதங்கை, பர்வானா இதழ்களிலும் தொடர்ந்து கவிதைகளை எழுதத் தொடங்கினார்.

எழுபதுகளில் எழுதத் தொடங்கிய கவிஞர்களுள் தமிழின் நவீனக் கவிதை முகமாகக் கலாப்ரியா அறியப்படலானார். சின்னச் சின்னச் சொற்களைக்கொண்டு கலாப்ரியா தீட்டும் கவிதை ஓவியங்கள், வாசகர்களின் மனப்பரப்பில் அலையெழுப்பிக்கொண்டே போயின.

1973இல் 'வெள்ளம்' எனும் கவிதை நூலினைக் கலாப்ரியா வெளியிட்டு இருந்தாலும், அதே ஆண்டில் வெளியான 'தீர்த்த யாத்திரை' கவிதை நூல்தான், நான் படித்த கலாப்ரியாவின் முதல் நூல். மற்றாங்கே (1980), எட்டயபுரம் (1982), சுயம்வரம் மற்றும் கவிதைகள் (1985), உலகெல்லாம் சூரியன் (1993), கலாப்ரியா கவிதைகள் (1994), அனிச்சம் (2000), வனம் புகுதல் (2003), எல்லாம் கலந்த காற்று (2008), கலாப்ரியா கவிதைகள் – முதல் தொகுதி (2010), கலாப்ரியா கவிதைகள் – இரண்டாம் தொகுதி (2020) உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கவிதை நூல்களையும், நினைவின் தாழ்வாரங்கள், ஓடும் நதி, பாடலென்றும் புதியது போன்ற பத்துக்கும் மேற்பட்ட கட்டுரை நூல்களையும், வேனல், பெயரிடப்படாத படம், பேரருவி, மாக்காளை ஆகிய நாவல்களையும், வானில் விழுந்த கோடுகள் எனும் சிறுகதை நூலொன்றையும் கலாப்ரியா தமிழிலக்கியத்திற்கு இதுவரை அளித்துள்ள கொடைகள் எனக் கொள்ளலாம்.

தொடர்ந்து கலாப்ரியாவின் கவிதைகளை வாசிக்கத்தொடங்கிய என்னைச் சற்றே அதிர வைத்தது அவரெழுதியிருந்த கவிதையொன்று;

கவிதையின் தலைப்பு: சலுகை.

**'அழகாயில்லாததால்**
**அவள் எனக்குத்**
**தங்கையாகி விட்டாள்.'**

கவிஞரது முதல் கவிதை நூலில் இடம்பெற்ற கவிதையெனினும், மிகத் தாமதமாகவே என் பார்வைக்கு வந்தது. 'என்னாச்சு... இந்தக் கவிஞருக்கு?' என்று மனம் வருந்தினேன்.

**'அந்திக் கருக்கலில்**
**இந்தத் திசை தவறிய**
**பெண் பறவை**
**தன் கூட்டுக்காய்**
**தன் குஞ்சுக்காய்**
**அலைமோதிக் கரைகிறது.**
**எனக்கதன்**
**கூடும் தெரியும்**
**குஞ்சும் தெரியும்**
**இருந்தும்**
**எனக்கதன்**
**பாஷை தெரியவில்லை.'**

- என்றெழுதிய கலாப்ரியாவா 'சலுகை' கவிதையை எழுதியது என்று முதலில் நம்ப மறுத்தது என் மனம். கலாப்ரியாவின் கவிதைகளைத் தொடர்ந்து படிக்கையில் பாலுணர்வு வெளிப்படும் சில கவிதைகளையும் அவரெழுதியிருப்பதை வாசிக்க முடிந்தது. பெரும்பாலும் எளிய மனிதர்களின்

வாழ்க்கைப்பாடுகளைப் பற்றியே எழுதும் கலாப்ரியாவின் கவிதைகளில் அவர்களது கலவி உறவும் பூடகமின்றி வெளிப்படையாகப் பேசப்பட்டது சிலரைச் சீற்றம் கொள்ளவும் வைத்தது.

'அழகாயில்லாததால் தங்கையாகிவிட்டாள் என்று எழுதும் கவிஞரே, அழகாயிருக்கும் தங்கையை என்ன சொல்வாய்?' என்று சிலர் பொங்கியெழுந்ததும் நிகழ்ந்தது.

கடையநல்லூரிலுள்ள வங்கியொன்றில் பணியாற்றிய கலாப்ரியாவுக்குக் கவிஞர்கள் வண்ணநிலவன் (ராமச்சந்திரன்), வண்ணதாசன் (கல்யாண்ஜி-கல்யாணசுந்தரம்), விக்ரமாதித்யன் (நம்பிராஜன்) எல்லாருமே நெருக்கமான நண்பர்கள்தான். அதிலும் கல்யாண்ஜியை அண்ணன் என்றே கலாப்ரியா பல இடங்களில் குறிப்பிடுகிறார்.


தமிழ்க் கவிதையின் இரண்டாம் அலையெழுந்த 1960களில் 'எழுத்து' இதழில் வெளியான புதுக்கவிதைகள் தந்த தாக்கமும், 'வானம்பாடி'களின் சமூகப் பார்வையுடன் கூடிய கவிதை மரபும் ஒன்றெனக் கலந்து கலாப்ரியாவின் கவிதைகளில் வெளிப்பட்டன. வாழ்வைச் சற்றே தள்ளி நின்று பார்க்கும் நடுத்தர வர்க்கப் பார்வையிலிருந்து விடுபட்டு, தெருவில் இறங்கிச் சற்றே உரத்த குரலில் தெளிவாகவும் உறுதியாகவும் பேசிய கவிதைக்குரல் கலாப்ரியாவினுடையது. வாசிக்க எளிமை என்றாலும் வாசக மனசோடு நெடுநேரம் நின்று உறவாடும் வலிமை வாய்ந்தவைகளாகக் கலாப்ரியாவின் கவிதைகள் வலம் வரத் தொடங்கின.

"எதையும் புதிதாகச் சொல்ல வேண்டும் எனும் ஆசை எல்லோருக்கும் உண்டு. சொல்லப்படாத விஷயங்களை ஏன் சொல்லக்கூடாது அல்லது இதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லையே என வெளிப்படையாகச் சில விஷயங்களைச் சொல்லலாம் என ஆரம்ப காலத்தில் தோன்றியது. விளிம்புநிலை மனிதர்களின் வாழ்க்கை சார்ந்த விஷயங்களில் என் அக்கறை இருந்தது. அதிலிருந்து கிடைத்த அனுபவங்கள், படிமங்களை எழுதினேன். ஜெயமோகன் சொன்னதுபோல வீட்டுக்குள் சாக்கடையைக் கொண்டுவருவது



போலத்தான் அது பார்க்கப்பட்டது. ஆனால், நிறையப் பேர் அந்த அதிர்ச்சியை, அதிலிருந்த உண்மையை ரசித்தார்கள். சில பேராசிரியர்கள், தீவிர இடதுசாரிகள், அரசியல் சார்ந்த இலக்கியம் படைத்தவர்கள் எதிர்த்தார்கள். பின்னாளில் உண்மையான விஷயத்தைத்தான் ஒளிவுமறைவின்றி வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் என அவர்களிடமிருந்த எதிர்ப்பும் மங்கிவிட்டது" என்று தனது நேர்காணல் ஒன்றில் நேர்ப்படச் சொல்லியிருக்கும் கலாப்ரியா, தனது அரசியல் நிலைப்பாடு குறித்துக் கூறுகையில்,

"எனக்குத் திராவிட அரசியல் மீது சாய்வு உண்டு. இடதுசாரி அபிமானியும்கூட. எனது 'எட்டயபுரம்' தொகுப்பு முழுவதுமே அரசியல்தான். பூமிக்கடியில் பதுங்கிக் கொண்டிருப்பவர்களை மேலே கொண்டுவர எத்தனித்த முயற்சிதான் அந்தத் தொகுப்பு. நானாக எதுவும் முன்னெடுத்ததில்லையே



தவிர, அரசியல் செயல்பாடுகளில் தயக்கம் காட்டியதில்லை. எல்லோருடனும் எனக்கு நல்ல உறவு இருக்கிறது. அரசியல் எனக்கு அந்நியம் அல்ல" எனும் தெளிவுடையவராகக் கலாப்ரியா இருப்பதை அவரது உரையாடல்கள் வழியே கண்டுகொள்ள முடிகிறது.

நெல்லை மாவட்டத்திலுள்ள இடைகால் எனும் தனிமையும் அழகும் நிரம்பிய கிராமத்தில் தற்போது வசித்துவரும் கலாப்ரியா, தனது படைப்புகளுக்காகத் திருப்பூர் தமிழ்ச் சங்கப் பரிசு, தமிழக அரசின் கலைமாமணி விருது, கவிஞர் சிற்பி இலக்கிய விருது, பபாசி வழங்கிய கலைஞர் மு.கருணாநிதி பொற்கிழி விருது (2017), திருச்சி எஸ்.ஆர்.வி பள்ளி வழங்கிய 'அறிஞர் போற்றுதும்' விருது (2017), திருநெல்வேலி ம.சு. பல்கலைக்கழகத்தின் மனோன்மணியம் சுந்தரனார் விருது, கோவை விஜயா பதிப்பக வாசகர் வட்டத்தின் 'ஜெயகாந்தன் விருது', அமெரிக்க வாழ் தமிழர்களின் 'விளக்கு' அமைப்பு வழங்கிய 'புதுமைப்பித்தன் நினைவு விருது', ஜீரோ டிகிரி பதிப்பகம் வழங்கிய 'வாழ்நாள் சாதனையாளர் விருது' உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

கலாப்ரியாவின் பல கவிதைகள் ஏதேனுமொரு காட்சியின் பகிர்வாகவும், நிகழும் சம்பவமொன்றின் கவிப்பதிவுகளாகவும் இருக்கின்றன. காட்சியும் சம்பவமும் கைகுலுக்கிக் கொள்ளும் கதைக் கவிதைகள் பலவற்றையும் கலாப்ரியா எழுதியுள்ளார்.

1985 ஜூலையில் வெளியான 'சுயம்வரம் மற்றும் கவிதைகள்' நூலில் 'குறுங்காவியங்களும் கவிதைகளும்' உள்ளன. தமிழினி வெளியீடாக டிசம்பர் இரண்டாயிரத்தில் வெளியான 'அனிச்சம்' நூலிலுள்ள 'பெண்கள் பந்தி' (பக்கம்: 57-62) எனும் கதைக் கவிதை ரொம்பவே தனித்துவமான கதைக்கவிதை என்பேன். எங்களூரில் நடக்கும் கல்யாண வீடுகளில் நான் கண்ட- கேட்ட உரையாடல்களே இக்கதைக் கவிதை என்றாலும், கலாப்ரியாவின் பாசாங்கற்ற வார்த்தைகளில் வாசிக்கையில் புதுசுவை கிட்டுகிறது.

'அண்ணாச்சி
சாப்டாச்சா
நான் முதல் பந்தியிலேயே
முடிச்சாச்சு
வீட்ல, அதான்டே
உங்க மதினி சாப்ட்டதும்
புறப்பட வேண்டியதுதான்.
இன்னும்
பொம்பள பந்தியே
ஆரம்பிக்கலை
போலிருக்கே.'

இப்படியான உரையாடலோடு தொடங்குகிறது கவிதை.

'மணவறைப் பூக்களை
பிய்த்தெறிந்தபடி-
கலைந்து கிடக்கும்
நாற்காலிகள்
சுருண்டு கிடக்கும்
ஜமுக்காளங்கள்
எங்கே காலைத்தட்டி விடுமோ
என்ற பயம் ஏதுமின்றி,
ஓடிப்பிடித்து விளையாடும்
குழந்தைகள்...'

- என ஒரு கல்யாண வீட்டின் காட்சிகள் அப்படியே கவிதையாக விரிகின்றன. இடையிடையே பெண்களின் இயல்பான உரையாடலும் தொடர்கிறது. பெண்கள் பரஸ்பரம் தங்களுக்குள் நிகழ்த்திக்கொள்ளும் உரையாடலில் வெளிப்படும் பல ரசமான விஷயங்களும் வந்துபோகின்றன. இதோ... இப்படி முடிகிறது கவிதை;

'சரி சரி
சீக்கிரம் போ
பொம்பளை பந்தி
ஆரம்பிச்சாச்சு
ஏற்கெனவே
பாதிக் கறிவகை
தட்டிப்போச்சு
பாயாசம் இருக்காதுன்னு
நெனக்கேன்
என்று சொல்லி
நாக்கைக் கடித்துக்
கொள்வான்
இருவருமே
இனிப்பு சாப்பிடுவதை
விட்டுவிட்டதை
மறந்து.'

'ஆறாம்திணை' இணைய இதழில் வெளியான இந்தக் கவிதை, கல்யாண வீடுகளைப் பற்றியும், விழாக்களில் கூட பெண்கள் சரியான நேரத்திற்குப் பசியாற முடியாமல் கடைசிப்பந்திக்குத் தள்ளப்படும் பெண்களின் நிலை குறித்தும் பதிவாகியுள்ள சிறந்த கவிதைக் கதையாகிறது.

'புதுக்கவிதை வரலாற்றில் மட்டுமல்ல, நவீனத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பக்கங்களிலும் கலாப்ரியா ஒரு தவிர்க்க முடியாத அத்தியாயம். ஒரு வகையில் தீரா நதி. ஒரு வகையில் நகல் செய்ய முடியாத ஒரு வெளிச்சம். பின்தொடர மட்டுமே முடியும். எல்லாத் தீவிரமான படைப்புக்களும் கோருகின்ற தீவிரமான பின்தொடரல் அது.' ஓர் ஆய்வு மாணவரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கலாப்ரியா பற்றி வண்ணதாசன் கூறிய வரிகளிவை. ஜூலை 30ஆம் தேதியன்று தனது 73ஆவது அகவைக்குள் நுழையும் கலாப்ரியாவை என்றென்றும் தமிழ்க் கவிதையும் சரி, கவிஞர்களும் சரி பின்தொடரவே செய்வார்கள்.

- இன்னும் சொல்வேன் ■

அம்மையார் ஹைறநூன் பீவி
சிறுகதைப் போட்டி

சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை

அருள் வடிவேல்

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# பாளை

புழுதி நிலம். பார்வைப்புலன் பாயும் தொலைவெங்கும் பனங்காடு. அதனூடாகத் தீவுத் திட்டுகளாய் ஆங்காங்கே ஓலைக்குடிசைகள். ஏரிக்கரையில் பட்டாளத்து வீரர்கள் போல வரிசைகட்டி மிடுக்காய் நிற்கும் கருத்த பனைகள். முறுக்கிய கயிறாய் உடல் கருத்த பனையேறிகள். புழுதிக்காட்டில் ஆடிக்களித்த குழந்தைகள். பள்ளியில் பாடவேளை போக, அந்தப் பிள்ளைகளிடம் நான் தெரிந்துகொண்டவைகள் ஏராளம்.

அந்தப் பிள்ளைகளில் ஒருத்திதான் பொன்னனின் சின்ன மகள். 8ஆம் வகுப்பிலிருந்த அவள், பாதிநாட்கள் பள்ளிக்கே வரமாட்டாள். கேட்டால், பாய் முடையப்போனேன்.... பதனி காய்ச்சப்போனேன் என்று பதில் சொல்லுவாள். வயிற்றுக்கு உணவில்லாதபோது, செவிக்குணவு எதற்கு என்கிற நிலை. அவளுக்கு மட்டுமல்ல, தாழஏற எல்லாக் குழந்தைகளுக்கும் அப்படித்தான்.

அந்த ஊர்க் குழந்தைகளின் கள்ளமற்ற அன்பை எப்படி எழுதுவது என்று தெரியவில்லை. காய்ச்சிய பதனியில் உடைச்ச கடலையை ஊறவைத்துக் கொண்டுவந்து தருவார்கள். சில நாட்களில் அவர்களிடமிருந்து பனம்பழம் சுவைக்கக் கிடைக்கும். அந்தச் சுவையெல்லாம் இன்னும் நாவில் எங்கோ ஒளிந்துகிடக்கிறது.

•

ஓலைப்படலைத் திறந்துகொண்டு உள்ளே நுழையும்போதே, பதனி கொதிக்கும் வாசனை நாசியைத் தழுவியது. குடிசைக்கு முன் யாருமில்லை. எல்லோரும் மேற்கில் வேயப்பட்டிருந்த ஓலைக்கொட்டகைக்குள் இருந்தார்கள். பெரிய மண் அடுப்பில் வாயகன்ற கொப்பரையில் கொதிவிட்டுக்கொண்டிருந்த பதனியை வியர்க்க விறுவிறுக்க கிளறிக்கொண்டிருந்தவள், என்னைக் கண்டதும் தன் அம்மாவிடம் அந்த வேலையைக் கைமாற்றிவிட்டு, அழுக்குப் பாவாடையில் கையைத் துடைத்துக்கொண்டு, `வணக்கம் அய்யா` என்று சிரித்துக்கொண்டே வரவேற்றாள்.

ஓலைகள் அடுப்பில் மொடமொடத்து எரிந்துகொண்டிருந்தன. சுடர்ந்த தீப்பிழம்பின் லேசான புகைச்சலினூடேயிருந்து அவள் முழுவதுவமாக வெளியே வந்தபோது, அந்தச் சின்னப்பெண்ணின் சிரிப்பில் ஓர் அயர்ச்சி தெரிந்தது.

காய்ச்சி இறக்கியதும் கருப்பட்டியாய் வார்ப்பதற்கான கொட்டாங்குச்சிகளை வாளித்தண்ணீரில் அலசியெடுத்து விரித்துப்போட்ட துணியின் மீது வரிசைப்படுத்திக்கொண்டிருந்த பொன்னன், லேசாக நிமிர்ந்து என் குரல் வந்த திசையைப் பார்த்து, `வாங்க தம்பி.. நல்லாருக்கீங்களா... செத்த உட்காருங்க தம்பி. இதோ இப்ப வந்திடறேன்` என்றார். அவள் அம்மாவும் சிரித்துக்கொண்டே, `ஏய் ! இங்க வா. இந்தா இதப் போட்டு ஐயாவுக்குக் காப்பி கலந்து குடுடீ` என்று அவளிடம் ஒரு சிரட்டையில் கொதிவிட்டுக்கொண்டிருந்த கருப்பட்டிப் பாகை முகந்து கொடுத்தாள்.

வாசல் மரத்தடியில் இருக்கையிட்டு என்னை அமர்த்திவிட்டு, காப்பி போட குடிசைக்குள்ளே ஓடினாள் அந்தச் சின்னப்பெண். கண் ஆடிய பக்கமெல்லாம் பனங்காட்டு வாசனை. ஓலையால் வேலியிடப்பட்ட கால் காணியளவு நிலத்தில், மண்பாதையை ஒட்டிய குடிசை. குடிசைக்குப் பின்னால் பொன்னன் வளர்த்திருந்த ஆறேழு பனைகள். அவைகளில் தூக்கணாங்குருவிக்கூடுகள் தோரணம் போல் காற்றில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்தன. குருவிகளின் கீச்சொலி இசையாய் முற்பகல் காற்றில் மிதந்துகொண்டிருந்தது. வேலிக்குள் ஓரமாய்க் காய்ந்த பனையோலைகள் குவியலாய்க் கிடந்தன.

இளம் கருப்பட்டியின் வாசனையுடன் கடுங்காப்பி ஒரு தனிச் சுவையுடன் இருந்தது. இளகிய சாக்லேட்டைப் போல, முதல் மிடறில் மிதமாய்க் கசப்பதாய்ப் பட்டது. பிறகு காப்பியை அருந்தி முடிக்கும்போது நாவோடு சேர்ந்து உள்ளமும் தித்தித்தது.

காய்ச்சிய பதனியை அடுப்பிலிருந்து இறக்கிவைத்துவிட்டு, ஒருவித கவனத்துடன் நடந்து வந்து, `கருப்பட்டிக்கின்னு பதனி இறக்குனா உடனே காய்ச்சிடணும் தம்பி. இல்லன்னா, வெயில்ல பதனி சலிச்சிடும்` என்று சொல்லிக்கொண்டே அருகில் அமர்ந்தார் பொன்னன்.

இறக்கிய பதனியை ஒருபக்கமாய் வழித்து, இன்னும் அதீதமாய்க் கிளறிவிட்டுக்கொண்டிருந்தார் அவரின் மனைவி. குடிசைக்குள்ளே பொன்னனின் மூத்த மகள் நிறைமாதமாய்ப் படுத்துக்கிடந்தாள்.

`பாப்பாவை ஒழுங்கா பள்ளிக்கூடம் அனுப்பக்கூடாதுங்களா` என்று ஆரம்பித்து, எங்கள் பேச்சு எங்கெங்கோ சிதறியது. அவரோடு அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்ததில் நெஞ்சம் பெரிதாய்க் கனத்துவிட்டது. விடைபெற்றுக்கொண்டு வெளியேறி நடந்தேன்.

•

பெரியவளுக்குப் பேறு வலி தொடங்கிவிட்டபோது, வெளியே காலம் சாய்ந்துகொண்டிருந்தது. வேலைக்குச் சென்றிருந்த பொன்னன் இன்னும் வந்துசேரவில்லை. அம்மாக்காரி துடித்துப்போனாள். தண்ணீரில் துணியை நனைத்து வியர்த்து வழிந்த அக்காவின் முகத்தைத் துடைத்துக்கொண்டிருந்தாள் சின்னப்பெண். அம்மாக்காரி ஓடிச்சென்று செல்லம்மா கிழவியைக் கூட்டிவந்தாள். இருளானது, மெதுவாகப் பொழுதின் அனிம

வெளிச்சத்தை விரட்டிக்கொண்டிருந்தது.

கிழவியின் கைவைத்தியத்திற்கு இடுப்பு வலி போக்கு காட்டியது. கட்டிக்கொடுத்த ஆறு மாதத்திலேயே வாகன விபத்தில் கணவனை இழந்துவிட்டுச் சூலியாய் வந்து சேர்ந்த மகளின் கலங்கிய முகத்தைப் பார்க்கும்போது அம்மாக்காரிக்கு அழுகை வெடித்துக்கொண்டு வந்தது.

"இந்தப் பாழாப்போன மனுசன், இந்நேரத்துல எங்க போயித் தொலைஞ்சாரு."

•

பருத்த அடிமரத்தை ஒரு பிள்ளையைத் தழுவுவது போலக் கட்டிப்பிடித்தார் பொன்னன். 10 வயதில் பனையேறப் பழகத் தொடங்கிய நாளில், முதன்முதலில் மரத்தைக் கட்டிப்பிடித்தது அவருக்கு நினைவுக்கு வந்தது. பனையின் கருக்கு, வயிற்றிலும் நெஞ்சிலும் உறுத்தியது. தலையை நிமிர்த்திச் செவிகளைக் கூர்மையாக்கினார். காற்றிலசையும் ஓலைகளின் ஓசையிலிருந்தே மரத்தின் உயரத்தை அனுமானித்த பொன்னன், நுனிப்பாதங்களை உந்தி வைத்து, மிகச் சரியாகப் பதினேழே உக்கில் மரத்தின் உச்சியை அடைந்தார்.

ஓலையை இடது கையால் பற்றிக்கொண்டு, சேமங்காலு போட்டமர்ந்தார். இடுப்பில் செருகியிருந்த அரிவாளைப் பொன்னன் உருவிய சில நொடிகளில், நுங்குக் குலைகள் மரத்தடியில் நிரலாக விழத்தொடங்கின. வரப்புக்கரையில் இருக்கும் வரிசைப் பனையில் குலை வெட்டுவது என்றால் பொன்னனுக்குக் கரும்பு சாப்பிடுவது போல. கீழே இறங்காமலேயே, அப்படியே முதல் மரத்திலிருந்து அடுத்த மரத்திற்குத் தாவிவிடுவார்.

மரத்திற்கு மரம் ஓலையைப் பற்றிக்கொண்டு தாவுவது பொன்னனுக்குக் கால் வந்த கலை. இத்தனை வயதில் ஒருமுறை கூட தவறிக் கீழே விழுந்தது கிடையாது. அவர் அடிக்கடி சிரித்துக்கொண்டே தன் சின்ன மகளிடம் சொல்வார்;

"பனைமரம் தாய் மாதிரிம்மா. அது ஒருபோதும் யாரையும் கைவிடாது."

நுங்கு வெட்டிற்குப் பொன்னனை அரைமனதாகக் கூலிக்கு அமர்த்திய அந்த நடுத்தர வயதுக்காரன், பொன்னனின் திறமையைக் கண்டு வியந்துபோனான். கண்பார்வை இல்லாத பொன்னன், கை நிதானத்திலேயே குலைகளை விரைவாய் வீழ்த்தியது, சங்கப் பாடல்களில் பனம்பூச்சூடி வாள் வீசிய பெயர் தெரியாத ஒரு போர்வீரனை நினைவுபடுத்தியது. பேசிய கூலியை விடச் சற்று அதிகமாகவே பணம் கொடுத்தான். கூடுதலை மறுத்துவிட்டுக் குலையொன்றைச் சின்ன மகளுக்காக எடுத்துக்கொண்டார் பொன்னன்.

•

பேருந்திலிருந்து இறங்கிய பொன்னன், வீட்டையும் முன்பே செய்தியறிந்து மருத்துவமனைக்கு விரைந்தார். பொன்னனுக்கு எல்லாமே கால் நிதானம், கை நிதானம்தான். அவர் நடந்துபோவதைப் பார்க்கும் யாரும், அவர் பார்வையற்றவர் என்று சொல்லிவிடமுடியாது. பழகிய ஊர்ப்பாதைகளின் பள்ளமும் மேடும் பொன்னனுக்கு அத்துப்படி. ரேசன் கடைக்கு டீக்கடைக்கெல்லாம் கூட எல்லோரையும் போலவே போய்வந்துவிடுவார்.

ஒரு தனியார் மருத்துவமனையில்தான் பெரியவள் சேர்க்கப்பட்டிருந்தாள். குழந்தை புரண்டு கிடக்கிறதென்று சொல்லி, சில மணிநேரப் போராட்டங்களுக்குப் பிறகு, நள்ளிரவில் அவள் ஒரு சூம்பிய ஆண் குழந்தையை அறுவை சிகிச்சையின் உதவியால் பெற்றெடுத்தாள்.

அந்த மகப்பேறு மருத்துவமனையில் அரசுக்குத் தெரியாமல் கருவிலிருக்கும் குழந்தையின் பால் வகைமையை அறிவிக்கும் தொழில்நுட்பம் கள்ளத்தனமாய்ச் செயல்பட்டுக்கொண்டிருந்தது.

பாளை விட்டாதான் பனை மரம் ஆணா பெண்ணான்னுத் தெரியும். ஆனால் நவீன மருத்துவம் வயிற்றிலிருக்கும்போதே, பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா என்று சொல்லிவிடுகிறதே என்பது அந்தப் பனங்காட்டுப் பாமர மனிதர்களுக்குப்

பெருவியப்புதான்.

ஆறு நாள் மருத்துவமனை ஓய்வுக்குப் பின், தாயும் சேயும் வீடடைந்தார்கள். அவர்களின் வீடு என்பது வெறும் ஓலைக்குடிசைதான். எல்லாப் பனையேறிகளுக்கும் ஓலைக்குடிசைகள்தான் போக்கு. செங்கல் வீடுகளெல்லாம் எப்போதும் கனவுதான். மீன் குஞ்சு கடலில் நீந்திக் கிடப்பதைப்போல நாளெல்லாம் பனங்காட்டில் நீந்திக் கிடந்தார்கள்.

ஓலைக்குடிசையில் ஒண்டிக்கொண்டிருக்கும் பொன்னனுக்கு, மகளின் பேறுக்கான மருத்துவமனைச் செலவு, பேரன் பிறந்த பெருமகிழ்வைத் துய்க்கவிடாமல், பணத்திற்காக அலையவைத்துக்கொண்டிருந்தது. கடன் வாங்கி ரூபாயைக் கட்டி முடிப்பதற்குள் பொன்னனுக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது.

போதாதற்குச் சூம்பிய குழந்தையைத் தேற்ற, நிறைய செலவழிக்க வேண்டியதாயிற்று. தலைப்பேறு தாய் வீட்டில்தான் பார்க்கவேண்டும் என்று என்றோ யாரோ ஏன் சொல்லிவைத்துவிட்டுப் போனார்கள் என்று நொந்துபோகுமளவிற்குப் பொருளாதார முடை, பொன்னனின் ஓலைக்குடிசையை முடைந்துகொண்டிருந்தது.

மகளின் திருமணத்திற்கு வாங்கிய கடனே இன்னும் அடைந்தபாடில்லை. பனையேறும் தொழில் பட்டுப்போன பிறகு பெரும் சம்பாத்தியத்திற்குப் பொன்னன் எங்கே போவார். விவசாயக்கூலியாய்ப் பொன்னனின் காலம் திணறிக்கொண்டிருந்தது. அரிதாக ஓலை வெட்டப் போவார்.

அந்த வேலியோரக் கால் காணி நிலம் மட்டுமே பொன்னனின் முன்னோர் சொத்து. பனை மரம் ஏறி ஏறி நெஞ்சு காய்த்து, அந்த நிலத்தில் வாழ்வாடிக்கிடந்தவருக்குப் பனையை விட்டால் வேறெந்த வேலையும் தெரியாது. பதனி பருவமாயிருக்கும் நாட்களில், வீட்டில் கொட்டாங்குச்சியில் கருப்பட்டி வார்த்துக் காலமோட்டிக்கொண்டிருந்தார். `கண்ணும் தெரியல. கையில தொழிலும் இல்ல. உன்ன நம்பி எப்படிப்பா கடன் கொடுக்கறது` என்று சிலர் சொன்னபோது, கண்ணில்லாத



பொன்னன் கண்ணுடைந்துபோனார்.

•

இதெல்லாம் நடந்தது ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு. நானே தெளித்து, நானே சமைத்து, நானே துவைத்து, ஒரு ஓட்டுவீட்டில் தங்கியபடி, அந்த ஊரில் ஒரு நடுநிலைப்பள்ளி ஆசிரியனாய்ப் பணிபுரிந்த ரொம்பவும் அலுப்பான நாட்கள் அவை. ஆனால், பனங்காட்டில் வாழ்வாடிக்கொண்டிருந்த அந்த வெள்ளந்தி மக்களுக்கு நடுவே, சில ஆண்டுகள் துய்த்தது, என் வாழ்நாளில் மறக்கமுடியாதது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நம் மொழியின் நம் இனத்தின் வரலாற்றைப் பனையோலைச் சுவடிகளில்தான் நம் முன்னோர்கள் எழுதித் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆரியர்கள்கூட நம்மிடமிருந்துதான் பனையோலையில் எழுதுவதைக் கற்றுக்கொண்டார்களாம்.

பனையோலையில் தொகுத்தவர்களில் பெருவாரியான பேர்கள், கல்வி கற்ற பனையேறிகளாய்க் கூட இருந்திருக்கலாம். இத்தகு சிறப்பு வாய்ந்த பனையை ஆளும் பனையேறிகளின் வாழ்வை எழுதிச் செல்லத்தான் இன்று நம்மிடையே ஆட்களில்லை.



உழுகுடிகள் வாழ்ந்த ஆற்றங்கரை மற்றும் சமவெளி நிலங்களைத் தாண்டி, தமிழ்நிலத்தின் மற்ற நிலப்பகுதிகள் பெரும்பாலும் பனங்காடுகளாய்த்தான் ஆரம்பத்தில் இருந்திருக்கின்றன. பல நூற்றாண்டுகளாகப் பல ஆட்சியாளர்கள், பல்வேறு காரணங்களுக்காகப் பனையை அழிக்கத் தொடங்கி, கடைசியில் இன்று ஊருக்குச் சில மரங்களே எஞ்சி நிற்கின்றன. பனையின் வரலாற்றையும், பனையோலையில் தாலி செய்த வரலாற்றையும், காதலில் தோற்றவன் பனையோலையில் குதிரை செய்து மடலேறிய வரலாற்றையும் சொல்லத் தயங்குகிற பள்ளிப்பாடங்கள், நம்மீது அரை நூற்றாண்டாகத் தேவையற்ற வெட்டி வரலாறுகளைத் திணித்து வைத்திருக்கின்றன.

•

தீபத் திருநாளில் கரித்தூளோடு பனம்பூவைக் கருக்கித் தூளாக்கிச் சின்னப்பெண்ணுக்குக் கார்த்தி செய்து தருவார் பொன்னன். மங்கிய அந்தியில் தீப்பொறி பறக்க, கார்த்தி சுற்றி மகிழும் அக்குழந்தையின் முகம், ஓர் அணங்கைப் போல அழகாய் ஒளிர்வதைக் காணக் கண்ணில்லை என்றாலும் நெருப்பிலிட்ட பனம்பூவின் மெல்லிய வாசனை, பொன்னனின் நாசியைத் தழுவும்போது, அவரின் மணக்கண்கள் திறந்துகொள்ளும். மகள்களை மனைவியை மட்டுமல்ல, மனிதர்களையும் மரங்களையும் கூட, அவர் மனக்கண்ணில்தான் பார்த்துக்கொண்டிருந்தார். அவரைப் பொறுத்தவரை எல்லாமே வாசனைதான். மனைவிக்கு ஒரு வாசனை. மரத்திற்கு ஒரு வாசனை. மண்ணிற்கு ஒரு வாசனை.

•

குருத்துக் கட்டிய பனைகளில் பதனிக்காகப் பாளை சீவி, பானைகளைக் கட்டித் தொங்கவிடுவார்கள். பானைக்குப் பதிலாக முன்பெல்லாம் சுரைக் குடுக்கைகள் கட்டுவார்கள். ஆனால் அந்த வழக்கமெல்லாம் என்றோ மலையேறிவிட்டது. தை - மாசியில் தொடங்கும் பனையின் பருவம், ஆடி பிறக்கும்போது ஓய்ந்துவிடும். அந்தச்

சமயங்களில் பெரும்பாலான பனையேறிகள் தேங்காய் வெட்டப் போய்விடுவார்கள். ஆனால் பொன்னன் தென்னை ஏறுவதில்லை என்றொரு புலனடக்கம் கொண்டிருந்தார்.

புலனடக்கம் இல்லாத சில பனையேறிகள், சுண்ணாம்பு தடவாத பாளைகளில் கள் இறக்கிக் குடிப்பார்கள். ஆனால் பொன்னன் அவர் வாழ்நாளில் கள் இறக்கியதுமில்லை. பருகியதுமில்லை. மிதமான மயக்கத்தில் வீழும் கள்ளாடிகள், போதையில் தங்கள் வாழ்வே நிமிர்ந்துவிட்டதாக எண்ணிக்கொள்வார்கள். உக்கி போட்டு உக்கி போட்டு வீங்கிப்போயிருக்கும் தங்கள் முழங்கால் மூட்டுகளிலிருந்து, எல்லா வலியும் பறந்துவிட்டதாக உணர்வார்கள்.

கொஞ்சம் துணிச்சல் உள்ள பனையேறிகள், கள் இறக்கி வியாபாரம் செய்வார்கள். 90களில் இளவட்டங்களாய் இருந்தவர்களில் நீங்களும் ஒருவர் என்றால், எந்த ஊரில் அருமையான கள் கிடைக்கும் என்று நீங்கள் தேடியலைந்த நாட்கள், இந்நேரம் உங்கள் நினைவுக்கு வந்திருக்கும். ஊரின் ஏரிக்கரை முழுக்க நூற்றுக்கணக்கான பனைகள், கரையை உடையவிடாமல் கவனமாய் இருத்தி வைத்திருந்த காலமெல்லாம் மறைந்து, இன்று பனைமரங்கள் இல்லாத ஏரிக்கரைகள், தண்ணீரைத் தக்கவைக்க இயலாமல் சரிந்து கிடக்கின்றன.

•

தனது குடிசைக்குப் பின்னாலிருந்த பனைமரங்களுக்குக் கீழே கயிற்றுக்கட்டிலைப் போட்டு, கைகளைத் தலைக்கு வைத்தபடி படுத்துக்கிடந்தார் பொன்னன். பனையில் கூடு கட்டியிருந்த குருவிகளின் கீச்சுக்குரல்கள் அடங்கிவிட்டிருந்தன. ஓலைகள் மட்டும் ஒன்றோடொன்று உரசிச் சலசலத்துக்கொண்டிருந்தன.

கண்மூடிக் கிடந்த பொன்னனுக்குள் காட்சிகள் வடிவமில்லாமல் நகர்ந்துகொண்டிருந்தன. வாங்கி வைத்திருக்கும் கடன், மகளின் எதிர்காலம், பேரனின் நிலைமை, சின்ன மகளையாவது படிக்கவைத்துவிடவேண்டும் என்பது குறித்தெல்லாம் எண்ணி விசனப்பட்டுக்கொண்டிருந்தார்.

பனைத்தொழிலும் செத்துவிட்டது. பருவமழையும் போக்கு காட்டிக்கொண்டிருக்கிறது. விவசாய வேலைகளும் குறைந்துவிட்டன. அரிதாகக் கிடைக்கும் வேலைகளுக்கும் யாரும் கூப்பிடுவதில்லை. வயதான கண் தெரியாத தன்னை அவர்கள் மறுப்பதிலும் ஒரு நியதி இருக்கிறது. `பிறந்தது ரெண்டும் பொட்டப்புள்ளயாப் போச்சு. இனி என்ன செய்து என் குடும்பத்தைக் காப்பாற்றப் போகிறேன். ஆயா... பத்ரகாளி! நீதாம்மா எனக்குத் துணையா இருக்கணும்` என்று தன் குலசாமியை வேண்டியபடி கட்டிலில் கண்ணற்றுத் திக்கற்றுப் புரண்டுகொண்டிருந்தார் பொன்னன்.

மட்டை அரிசியைத் தின்று தின்று உடம்பு மரத்துவிட்டது. பனையேறும்போதும் பாளை சீவும்போதும் உண்டான காயங்களும் சிராய்ப்புகளும் நெஞ்சையும் மரத்துப்போகச் செய்துவிட்டன. மொத்தத்தில் பொன்னனுக்கு வாழ்க்கையே மரத்துப்போய்விட்டது போலிருந்தது. ஆறேழு பனைகளின் ஓலைகளுக்கு ஊடாக நிலவு, துண்டுதுண்டாய் ஒளிவீசிக்கொண்டிருந்தது. வாழ்வில் முதன்முறையாக, தனக்குக் கண் இல்லையே என்று கண் கலங்கினார். அப்போது பொன்னனுக்குச் சட்டென்று பெருமதியானதொரு ஆவேசம் எங்கிருந்தோ நெஞ்சில் மூண்டது.

•

அலைந்து திரிந்து அந்த வாரத்தின் நடுநாளில், வெளியூர் தோப்பொன்றில் பாளை சீவும் வேலையைப் பிடித்திருந்தார். ஆவேசத்துடன் கொஞ்சம் தெம்பும் வந்தது. 100 மரங்களுக்குப் பாளை சீவிவிட வேண்டும். 2 நாள் வேலை. ஒரு மரத்துக்கு 2 முறை பாளை சீவ வேண்டும். மரத்திற்கு 60 ரூபாய் கணக்கில், எப்படியும் 6000 ரூபாய் சம்பாதித்துவிடலாம்.

புதிய ஊரில் இறங்கியவரை, அவரது மனைவி கைப்பிடித்து அழைத்துப்போனாள். இதுபோல எத்தனையோ ஊருக்கு

எத்தனையோ முறை கைப்பிடித்து அழைத்துச் சென்றிருக்கிறாள். ஆனால் பதனி காய்ச்சி, பாய் முடைந்து உழைத்துக் களைத்த அந்தக் கைகளில், தாய்மையின் பிடிமானம் பற்றிக்கொண்டிருந்ததை அன்றுதான் பொன்னன் உணர்ந்தார்.

பொன்னனைப் பொறுத்தவரை பனை என்பது கற்பக மரம்தான். `தென்னை வேரு ரெண்டடிக்கு மேலே உள்ளே போவாது தம்பி. பனை வேரு அப்படியில்ல. நெட்டாங்குத்தா நெலத்துக்குள்ள ரொம்பத் தொலவு போயி, தண்ணிய அப்படியே நிறுத்தி வைக்கும். இந்த மண்ணுக்கேத்த மரம்னா அது பனை மரம்தான்` என்று அடிக்கடி சொல்லுவார்.

`மழையை வரவைக்கிற பச்சயம் பனை மரத்துக்கு நெறைய இருக்கு. நொங்கு, பதனி, கள்ளு, கருப்பட்டி, பழம், கொட்டை, கிழங்குன்னு... சொல்லிக்கிட்டே போகலாம். ஓலையை வெட்டிக் கூரை மேயுறது, பாய் முடையுறது, பொட்டி முடையுறது, வேலியடைக்கறது, சாய்ஞ்சாலும் வீட்டுக்கு உத்திரமா நிக்கிறதுன்னு எத்தனையோ இருக்கு. ஆனா இப்ப பனங்காடெல்லாம் பாதிக்கு மேல அழிஞ்சிடுச்சி.

இதுக்கு மேல இந்தத் தொழிலுக்கு, அடுத்த தலமுறைய கொடுக்க மனசில்ல. அவுங்களைப் படிக்க வைக்கப்போறோம். எனக்கெல்லாம் பள்ளிக்கூடம் போகுணுமின்னு எம்புட்டு ஆசை இருந்தது தெரியுமா! தினை இத்தினி உதவி செஞ்சாலும் பனை இத்தினிக்கு நெனைக்கணும்னு பனை மரத்தப் பத்தி அய்யன் பெருமையா சொன்னதையெல்லாம் இப்ப யாரு மதிக்கிறாங்க. பத்தாக்குறைக்கு, அரசாங்கமும் எங்கமேல அனுசரணை காட்டல..... இந்தப் பாடெல்லாம் எங்களோடயே முடிஞ்சு போகட்டும்` என்று மூச்சுவிடாமல் சொல்வார்.

அவர் சொல்வதைக் கேட்கும்போது, ஒரு தாவர இனம், இந்த நிலத்தில் தன் இனத்தைச் சுருக்கிக்கொள்ளும் அபாயகாலத்தின் சாட்சிகளாக நாமும் இருந்துகொண்டிருக்கிறோமோ என்கிற குற்றவுணர்ச்சி உண்டாகும். தோப்பின் முதல் பனையை ஒரு குழந்தையைக் கட்டியணைப்பது போலக் கட்டிப்பிடித்து, தலையை நிமிர்த்திச் செவிகளைக் கூர்மையாக்கினார்.

காற்றிலசையும் ஓலைகளின் ஓசையிலிருந்தே மரத்தின் உயரத்தை அனுமானித்த பொன்னன், நுனிப்பாதங்களை உந்தி வைத்து, மிகச் சரியாக இருபது உக்கில் உச்சியை அடைந்தார். இடுப்பில் செருகியிருந்த பாளைக்கத்தியை உருவி சீவத்தொடங்கினார். கருங்குளவிகள் காதோரம் விர்ரென்று பறந்தன. பிற்பகலுக்குள் 30 மரங்களுக்குத்தான் அவரால் பாளை சீவ முடிந்தது. நெஞ்சு நெருப்பாய் எரிந்தது.

இளவட்டமாய் இருந்த நாட்களில் நாளொன்றுக்கு 50 மரங்களுக்குமேல் பாளை சீவிய பொன்னன், இன்று ஓய்ந்துபோய்விட்டார். உடலை விட அவரின் மனது ஓய்ந்துவிட்டது. இதற்குமேல் இன்று தன்னால் பனையேற முடியாது என்று தெரிந்திருந்தும், அவர் மனதில் அந்த 6000 ரூபாய் மின்னலாய் வெட்டி மறைந்தது. கடன்காரர்களின் கறார் பேச்சுக்கள் காதுக்குள் ஒலித்தன. மீண்டும் அடுத்த பனையில் முன்பைவிட ஆவேசமாய் கால் உந்தினார். மூப்பும் களைப்பும் மேவிய உடம்பில் எக்கச்சக்கமாய் வியர்த்து வழிந்தது. அவர் அனுமானித்ததை விட, மரம் உயரமாகச் சென்றுகொண்டிருந்ததாகப் பட்டது. உக்கியைப் பலமாய்ப் போட்டு ஏறினார். தலைக்குள் கிறுகிறுத்தது. ஆனாலும் சிலிர்த்துக்கொண்டு ஏறினார்.

வரப்பில் அமர்ந்திருந்த அவரின் மனைவி, அவரையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் மனதில் அப்போது என்னவெல்லாம் ஓடியிருக்கும் என்பதை உங்கள் அனுமானத்திற்கே விட்டுவிடுகிறேன்.

உச்சிக்கருகில் கையை மரத்தில் ஊன்றி உந்தியபோது, எதிர்பாராதவிதமாய்ப் பொன்னனுக்குத் தன் பனையேறி வாழ்க்கையில் முதன்முறையாக வழுக்கியது. சுதாரிக்கமுடியாமல் அப்படியே சரிந்து, தரையை நோக்கி மல்லாக்க விழுந்துகொண்டிருந்த பொன்னனை நோக்கி அவர் மனைவி அலறியபடியே ஓடிவந்துகொண்டிருந்தாள். ■

தொடர் - 5

பச்சைய பாத்திரம்

● கோ.லீலா



# காட்டுத்தீயைக் கட்டுப்படுத்துவோம்

**காட்டுத் தீயை**

**வீட்டு விளக்காய்**

**கட்டுப்படுத்திக் கொடுத்தவர் எவரோ**

**அவரே விஞ்ஞானி**

**அவரைப் போற்றுகிறேன்**

*- கவிஞர் பிருந்தா சாரதி (இருளும் ஒளியும் நூலிலிருந்து).*

*காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தித் தரும் எவரும் இயற்கையை வணங்கும் பெருமைக்குரியவர்கள் அல்லவா?*

*மார்ச் 11, 2018 குரங்கனி காட்டுத் தீயால் 23 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர், இந்தக் காட்டுத் தீ விபத்து ஒன்றே பலரும் அறிந்த காட்டுத் தீ விபத்தாக இருக்கிறது.*

*ஆனால் முதுமலை, சேலம் என நீளும் வரிசையில் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஆங்காங்கே ஏற்படும் காட்டுத் தீ விபத்துகள் பலரும் அறியாத ஒன்று.*

*இக்காட்டுத் தீயினால் எண்ணற்ற மரங்களும், அரிய வகைச் செடி கொடிகளும், கானுறை உயிர்களும் அழிந்துவருகின்றன.*

கோடைக்காலத்தில் காய்ந்த மரங்கள், செடிகள், புற்கள், உதிரும் சருகுகள் மூலமே எளிதில் தீ பரவுகின்றது.

மின்னல், இடியால் ஏற்படும் தீ விபத்து, மரங்கள் உரசி ஏற்படும் தீ விபத்து ஆகியவை இந்தியக் காடுகளில் மிகவும் குறைவே.

எனில், இந்தத் தீயை யார் மூட்டுகிறார்கள்?

மனிதர்களாகிய நாம்தான் காட்டுத்தீ உருவாக மூலக்காரணம்.

காடுகள் தொடங்கும் இடத்தில் உள்ள குடியிருப்புகள் மற்றும் சுற்றுலா வருவோர்களால்தான் பெரும்பாலும் காட்டில் தீ விபத்து ஏற்படுகிறது.

அணையாத சிகரெட் துண்டுகள், தீக்குச்சிகள், எளிதில் தீ பற்றக்கூடிய எரிபொருள் கொண்ட குப்பிகளை எஞ்சிய எரிபொருளுடன் வீசுதல்;

கால்நடை மேய்ப்பவர்கள் அடுத்த பருவத்திற்குப் புது புற்கள் வளர்க்க காய்ந்த புற்களுக்குத் தீ வைத்தல், புது கட்டிடங்கள் கட்டுவதற்காக எனக் காட்டிற்குத் தீ வைத்தல்;

காப்புக் காடுகளை ஒட்டியுள்ள வருவாய்த் துறையின் நிலத்தைப் பட்டா போட்டுக்கொள்வதற்காகத் தீ வைத்தல்;

காடுகளில் மரங்களை வெட்டும் கொள்ளையர்கள், மரத்தின் சுவடு தெரியாதிருக்க தீ வைத்தல்;

தீ பற்றிய ஆவணப்படம் தயாரிப்பிற்காகத் தீ வைத்தல்;

சிலர், குரூர மனதுடன் பெருங்காடு பற்றி எரியும் காட்சியினைக் கண்டு குதூகலிக்க தீ வைத்தல்;

என மனிதர்களால் பரவும் தீயை எப்படி கட்டுப்படுத்துவது?

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் முறைகள்:

1. தீக்கோடு - Forest Fire line
2. கட்டுப்பாட்டுடன் எரித்தல் - Control Burning.
3. காட்டுத் தீ வரைபடம் - Fire map
4. தொழில் நுட்ப முறை
5. தீத் தடுப்புப் பாதைகள்
6. எதிர்த் தீ
7. பொதுவான முறை

## தீக்கோடு

காட்டின் உட்பகுதிக்கும் (Core forest) வெளிப் பகுதிக்கும் (Buffer zone) இடையில், ஊர் எல்லைக்கும் காடு தொடங்கும் பகுதிக்கும் இடையில், ஒரு காடும் இன்னொரு காடும் இணையும் பகுதியில் நீளவாக்கில், ஆழமான பள்ளம் வெட்டிவிட்டு, இருபுறமும் உள்ள காய்ந்த புற்கள், செடி, கொடிகளை அகற்றுவதன் மூலம் தீ பரவுவதைத் தடுக்கும் முன்னேற்பாடு செய்யப்படுகிறது.

## கட்டுப்பாட்டுடன் எரித்தல்

காய்ந்த சருகுகள், செடி கொடிகள், மரங்கள் ஆகியவற்றை உரிய நபரின் மேற்பார்வையில், தேவையான முதலுதவி உபகரணங்களுடன் எரித்தலையே கட்டுப்பாட்டுடன் எரித்தல் என்கிறோம்.

## காட்டுத் தீ வரைப்படம்

ஒவ்வொரு வருடமும், தீ பரவும் இடங்களைக் கண்காணித்து வரைபடமாக்கி வைத்துக்கொண்டு, அடுத்தடுத்த வருடங்களில்

அவ்விடங்களைக் கண்காணிப்புக்குள் வைத்து, தீ பரவாமல் தடுக்க முன்னேற்பாடுகளைச் செய்தல்.

## தொழில் நுட்ப முறை

காட்டுத்தீயைக் கண்டுபிடிக்க நாஸாவின் *MODIS (Moderate Resolution imaging spectro radio meter)* மற்றும் *VIIRS ( Visible Infra red imaging radiometer suite)* ஆகிய செயற்கைக்கோள்களால் கண்டறிய முடியும்.

இத்தகவல்கள் FSI - Forest Survey of Indiaவிற்குச் செல்லும், இத்தரவினை ஆய்வு செய்து காட்டுத் தீயைக் கட்டுக்குள் கொண்டுவருகின்றனர்.

முன்னர் பூமியை ஒரு நாளைக்கு இரண்டு முறை சுற்றி வந்த செயற்கைக்கோள் மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை சுற்றி வருகின்றது. Rotation per minute (RPM) அதிகமானால், துல்லியமும் கூடுதலாகக் கிடைக்கும்.

மேலும் முன்பு, தொடர்புடைய வன அதிகாரிகளுக்கு இந்தத் தகவல் சென்று அடைய 5-6 மணி நேரம் ஆகும். தற்போது இரண்டு மணி நேரத்தில் சென்றடைந்துவிடுகிறது.

## மனிதர்கள் மூலம் அறிதல்

கண்காணிப்புக் கோபுரங்களில் இருக்கும் வனத்துறையினர் தீயைக் கண்டறிந்து உயரதிகாரிகளுக்குத் தெரிவித்துத் தீயைக் கட்டுக்குள் கொண்டுவருதல்.

ஹெலிகாப்டர் மூலம் தண்ணீர், தீயணைக்கும் இரசாயனங்கள், மணல் போன்றவற்றைத் தீயின்மீது பீய்ச்சுவதன் மூலம் தீயை அணைத்தல்.

## தீ தடுப்புப் பாதைகள்

காட்டில் தீ தடுப்புப் பாதைகள் மூலம் பிரித்தல். நீரோடை, சிறு குன்றுகள், சாலைகள் போன்றவற்றால் காட்டுப்பகுதியைப் பிரிப்பதன் மூலம் தீ பரவாமல் தடுக்கப்படும். ஒரு கட்டத்தில், தீ பற்றிய பகுதியில் உள்ள தாவரங்கள் எரிந்து முடிந்தபின் தீ அணைந்து அடுத்த பகுதிக்குப் பரவாமல் தடுக்கப்படும்.

## எதிர்த் தீ

எதிர்த் தீயை உருவாக்குவது. காட்டுத் தீ மனிதர்கள் நெருங்க முடியாத அளவில் இருக்கும்போது, ஒரு பகுதியில் உள்ள தாவரங்கள் அகற்றப்படும். இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள், காட்டுத் தீ ஆக்ஸிஜனை இழுத்துக்கொள்ளும் அளவுக்கு நெருங்கி வரும் வரை காத்திருப்பார்கள். பின்னர், பக்கவாட்டில் வரிசையாக ஒவ்வொருவரும் நெருப்பைப் பற்றவைப்பார்கள். அந்த நெருப்பும் காட்டுத் தீயும் ஒன்றுக்கொன்று எதிர்ப்படும்போது, காட்டுத் தீ அணைந்துவிடும்.

## பொதுவான முறை

பலர் கூடிப் பசுந்தழைகள், செடிகள் மற்றும் தாவரங்களைப் போட்டுத் தீயை அணைத்தல் பொதுவான முறையாகச் சிறு தீ பரவுவதைத் தடுக்கப் பயன்படுகிறது.

போதிய அளவு வன ஊழியர்கள் மற்றும் நிதி இல்லாமையும், தொழில்நுட்பப் போதாமையும், இது என் காடு என்ற பற்றுதலில்லாப் பொது மக்களாலும் ஏற்படும் இச்சீர்கேட்டைச் சரி செய்ய வன ஊழியர்களுடன் பொதுமக்களும் இணைந்து பணியாற்ற வேண்டும்...

## தீ தீ தித்திக்கும் தீ

தீண்டத் தீண்ட இனிக்கும் என்று பாட இது காதல் தீ இல்லைங்க.. காட்டுத் தீ. தீண்டத் தீண்ட எரிக்கும் என்பதை நினைவில் கொள்வோம்.

காட்டின் வளம் காப்போம் நாட்டில் நலம் காண்போம். ■

● அரும்பாவூர் இ. தாஹிர் பாட்சா



# மானுடம் பேணும் மனிதநேயக் கவிதைகள்

இயற்கையின் தோண்டப்படாத எண்ணற்ற ரகசியங்களாலும் மனிதனின் கண்டுபிடிப்புகளாலும் சம்பவிக்கும் நிகழ்வுகள், விடைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள் ஆகியவற்றின் போதாமையை உணர்த்தி மனிதனின் போதாமையையும் புதிர் தன்மையையும் உணர்த்தும் வெளிப்பாட்டு வடிவம்தான் கவிதை.

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் என்பது கவிஞர்களின் படைப்பு அளவுகோலாகக் கருதலாம். கவிஞர் நிஷா மன்சூர் எழுதிய "பின் தங்கிய படையணியிலிருந்து ஓர் அபயக்குரல்" கவிதைத் தொகுப்பு நெஞ்சுக்கு அருகில் சம்மணம் இட்டு அமர்ந்துகொள்கிறது. முன் தகுதிகளும் முன் அதிகாரங்களும் தரப்பட்ட நவீனத் தமிழ்க் கவிதை வெளியில் அதிநவீனக் கவிதை என்பது அகத்தையும் புறத்தையும் இணைக்கும் தொடர்புபடுத்தும் முரண்படுத்தும் புதிய வடிவம் என அதன் செறிவைக் கண்டு உணர முடியும். அப்படியான விழிகள் தேடிய பயணத்தில் இத்தொகுப்பு அகமும் புறமும் ஒன்று மற்றொன்றில் கண்ணாடியாக மாறிப் பிம்பங்களாக முன் நிற்கின்றன. இந்த நூலில் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட கவிதைகள் விளைந்து இருக்கின்றன. சூஃபிஸக் கவிதைகளும் வாழ்வியல் குறித்தான கவிதைகளும் சம விகிதத்தில் இட ஒதுக்கீடு பெற்றுள்ளன.

உண்மையில் ஆன்மீக வெளிப்பாடும் மெய்தேடலும் எல்லாக்காலத்திற்கும் உரியதே. அடையும் வழிகளும் வெளிப்படுத்தும் முறைகளும் மட்டுமே மாறிக்கொண்டிருக்கின்றன.

ஞானம், ஆன்மா, மெய்யுணர்வு, தன்னை அறிவது, தானற்றுப் போவது போன்ற சொற்கள் கவிதையைப் பின்னோக்கி இழுத்துப் போவதாக இன்றைய கவிதை வாசகர்கள் நினைக்கிறார்கள். ஒரு துளி அத்தரை உங்கள் உடலில் பூசிக்கொள்வதன் மூலம் நீங்களும் மணக்கத்துவங்குவீர்கள். உங்கள் அருகில் வருபவர்கள் ரோஜா மணத்தை உணருவார்கள். ஒருவகையில் நீங்கள் நடமாடும் ஒரு ரோஜாமலர்.

சூஃபிக்கவிதைகளும் அத்தர் போன்றனவே. கவிதை தரும் வாசனை புறத்தில் மட்டுமில்லாமல் அகத்திலும் புத்துணர்வு ஏற்படுத்தும். சூஃபிக்கவிதைகளை வாசிப்பது என்பது நறுமணத் தைலத்தை நுகர்வதைப் போன்றது. பூசிக்கொள்வதைப் போன்றது. ஒன்று கலத்தலே அக்கவிதைகளின் நோக்கம்.

"கார்ப்பரேட் விலங்கிடப்பட்ட கைகளை
ஒருக்காலும் பிரார்த்தனைக்குக் கூட
ஏந்தவியலாது என்பதால்
யூனுஸ் நபியின்
இறைஞ்சுதலைக் கொண்டு
விடுதலையின் அற்புத கனவு
காண்கிறோம்"

என்கிறார் நிஷா மன்சூர். இறை இயலோடு சமூகவியலைப் பொருத்திப் பார்க்கும் அரசியல் இவரது எழுத்துக்களில் மிளிர்கிறது. குணங்குடி மஸ்தான் சாகிபு, உமறுப்புலவர், இறைத்தூதர்களின் வாழ்வுக் குறிப்புகள், திருமறை வசனங்கள் போன்றவை அடிக்குறிப்புகளாய்க் கவிதையின் கருப்பொருள்களாய்ப் புனையப்பட்டிருப்பது சிறப்புக்குரியது.

"நிலமதிர நீரதிர அண்ட புவனங்கள்
திடுக்கிட்டதிர
எழுகிறது ஓங்கார முழக்கம்

இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இறைவனிடமிருந்து வந்தோம்

அந்த இறைவன் வசமே மீள்பவர்களாக இருக்கிறோம்"

இஸ்லாமிய நெறியின் மிக முக்கியமான தத்துவம் மட்டுமல்ல உலக மதங்கள் அனைத்திற்குமான தத்துவம் பிறப்பு என்று ஒன்று இருக்குமானால் இறப்பு என்பது நிச்சயம். ஓவியத்தின் தனிமை எனும் கவிதையில் இஸ்லாத்தின் வழிபாட்டுக் கூறுகளை எடுத்தியம்புகிறார்.

"விரைந்து முன்னேறும் சூபியின்

கடைக்கண் பார்வையை யாசித்தபடி

பீற்றற் துருத்திதனைத்

தூக்கிச் சுமந்துகொண்டிருக்கிறேன்"

என்று சூபியின் தத்துவவியலைப் பயிற்றுவிக்கிறார்.

"ஸகருக்கும் இப்தருக்கும் இடையிலான

சூட்சுமப் பெருவெளியில்

பேரருளாளனின் கருணைச் சுடர் ஒளிர ஒளிர

உலர்ந்த நாவில் ருசிக்கத் தொடங்கியது

நோன்பின் அருஞ்சுவை"

ரமலான் நோன்பு குறித்து எண்ணற்ற கவிதைகள் இதுவரை எழுதப்பட்டிருந்தாலும் இறைக்காதலின் உணர்வை ஒரு நோன்பாளியின்வழி நின்று பீறிட்டுணரும் ஞானத்தை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தி இருக்கிறார் நிஷா மன்சூர்.

போதாமைகளின் பெருநகரம் எனும் கவிதை வரிகள் முக்கியமானவை.

"போதாமைகளுடன் உள்நுழைபவர்களின்

கோரப் பசிக்கு இரையாகிச் சிதையும்

பசித்த வயிறுகளைப் போதாமைகளுடனே

கடந்து செல்கிறேன்"

நகர்ப்புற நவீனமயச் சூழலில் விளிம்பு நிலை மக்களின் வறுமையை இதனைவிட எளிய சொற்களால் சொல்லிவிட முடியாது.

"பள்ளிகளில் வன்புணர்வு செய்யப்படும்

சிறுமிகளின் கூக்குரல்கள்

விண்ணைப் பிளக்கும்

வளர்ச்சிக் கோஷங்களில்

அமுங்கி மறைகின்றன அடையாளமற்று"

சமகால நிகழ்வுகளில் இந்தக் கவிதை மிகுந்த பொருத்தப்பாட்டோடு நிலைபெறுகிறது. நகர்ப்புறமயமாதலின் கோர விளைவுகளை இவ்வளவு பகடியுடன் புனைந்து இருப்பது கவிஞரின் கவித்திறனுக்குத் தக்க சான்று.

"எதுவாகிலும் பரம்பொருளே

நயன்தாராவை உவந்து அளித்த உனக்கு

எம் இதய நன்றியைத்

தெரிவித்துக் கொள்கிறோம்"

எங்களிடம் ஸ்ரீதேவி இருந்தார் எனும் கவிதை தமிழ்த் திரையுலகில் தொடக்க காலம் தொட்டு தற்போது வரை மின்னிய திரைநட்சத்திரங்களை வரிசைப்படுத்தித் தமிழர்கள் கொண்டாடிய விதத்தைத் தீட்டி இருக்கிறது. இந்தக் கவிதை முடிந்தவுடன் நம்மை அறியாமல் சிரிப்பை உதிர்க்காமல் இருக்க முடியாது.

அற்புதங்களை நிகழ்த்தும் மாமன்னர் எனும் கவிதையில்,

"மரண ஓலங்கள் ஓய்ந்து முடிந்த பின்னர்

எங்கள் மன்னர்

புத்தம் புதிய நவநாகரிக

பணமும் பந்தமும் தேவைப்படாத

அதிநவீன சமுதாயத்தைப்

படைத்து அருள்வார்"

என்று முடித்து இருப்பார். நிகழ்கால அரசியலை இதனைவிடச் சிறப்பாகக் குறிப்பிட்டுவிட முடியாது. அரசியல் அவலங்களின் மீதான கோபங்களை மடைமாற்றம் செய்யாமல் படைப்பின்வழி புரியவைக்கும் கவிஞரின் முயற்சி போற்றுதலுக்குரியது.

ஒரு மலர் மலர்வது போல ஒரு செடி வளர்வது போல கவிதை என்பது இயல்பாக நிகழ வேண்டும் என்பார்கள். நிஷா மன்சூரின் கவிதைகள் மிக இயல்பாக உதித்தவையாகத்தான் வாசகனுக்குப் படும். குறிப்பாக மொழிநடை அதிசிறப்பாக வாய்க்கப் பெற்றிருக்கிறது நிஷா மன்சூருக்கு. இவரின் கவிதைத் தொகுப்பு முழுக்க அத்தர் வாசனை நிரம்பியது போல் இறையியலையும் மானுடப் பற்றையும் உசுப்புகின்றன. நமது நினைவுகளில் உறைந்துபோயிருக்கும் சுயத்தின் குரலைத் தட்டி எழுப்பும் வல்லமை இவரின் எழுத்துக்கு இருக்கிறது. ■

கலிங்கப்பட்டி க.கருப்பசாமி



# எளிய உரையாக்கத்தின் நோக்கம்கூட மக்களுக்கு இலக்கியங்கள் சென்றுசேர வேண்டும் என்பதே..

• கவிஞர் கலைச்செல்வி புலியூர்க்கேசிகன் அவர்களுடனான சந்திப்பு

அரை நூற்றாண்டுக் காலத்தை மக்களின் பெருவழக்கத்திற்குச் சங்க இலக்கியங்களைக் கொண்டு வருவதற்காக மட்டுமே செலவிட்டு அத்தோடு நில்லாமல், மேலைநாட்டு உளவியல் கோட்பாடுகளை மக்களின் நம்பிக்கைகளினூடாய் விளக்கும் வகையில் நூல்களை வெளியிட்டும் ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி இலக்கியத்தை எல்லோருக்குமாக்கிவிட்டும் சென்ற உரையாசிரியர் புலியூர்க்கேசிகனின் நூற்றாண்டு விழா அண்மையில் சென்னை அடையாறு முத்தமிழ்ப் பேரவை அரங்கத்தில் நடைபெற்றது. அதையொட்டி அவரின் மகள் கவிஞர் கலைச்செல்வி புலியூர்க்கேசிகன் அவர்களைச் சந்தித்த ஒரு மாலைப்பொழுதில்...

**குடும்பத்தில் புலியூர்க்கேசிகன் பற்றிச் சொல்லுங்கள்..**

குடும்பத்தில் அப்பா தாயுமானவர். அம்மா உடல்நலம் குன்றியவர் என்பதால் குளிக்க வைப்பது முதல் எங்களுக்கான எல்லாப் பணிவிடைகளையும் அவரே செய்வார். தலைவாரிப் பூச்சூட்டி மகிழ்வார். பிறந்து தொட்டிலாட்டியது முதல் மாத்திரையை வாய்க்குள் போட்டுத் தண்ணீர் ஊற்றுவது வரையிலும் எல்லாமே அப்பாதான். அம்மாவை அப்படிப் பார்த்துக்கொள்வார். ஒரு பூவைப் போல, ஒரு குழந்தையைப் போல அம்மாவைப் பார்த்துக்கொள்வார். குடும்பத்தில் அப்பாவின் இடத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்றால் நாள் போதாது.

**எப்போதும் எழுதிக்கொண்டிருப்பவர் எப்படி உங்களோடு நேரம் செலவிடுவார்.. உங்களது தேவைகளை எந்தளவுக்குப் பூர்த்தி செய்ய முடிந்தது?**

எழுத்தாளர்கள் என்றாலே அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி இருக்கும். தந்தைக்கும் அப்படித்தான். அவருக்குத் தொழில் எழுத்து மட்டுமே. கையில் பணம் இல்லை என்றால் எங்களோடு அதிகம் பேசமாட்டார். கையில் பணம் இருந்தால் அப்போது நாங்கள் கேட்டவையும் கேட்காதவையும் வாங்கிவந்து தருவார். அதிகமாக அன்பைப் பொழிவார். வசதியாக இருந்த காலங்களில் அகலக்கரை வைத்த பட்டுப்புடவைகளைத்தான் எங்களுக்குப் பண்டிகை நாட்களில் வாங்கி வருவார்.

தீபாவளி, பொங்கல் போன்ற நிகழ்வுகளின்போது, உடைகளைக் கேட்டு அடம்பிடிக்கும்போது அவரின் கையில் பணமிருக்காது. ஆசையோடு நாங்கள் காத்திருப்போம்! வெறுங்கையோடு வருவார். அப்படியே எங்கள் யாரோடும் பேசாமல் அமைதியாக வீட்டிற்குள் சென்று படுத்துக்கொள்வார். எங்களுக்கு வருத்தமாக இருக்கும். அப்போது எங்களுக்குத் தெரியாது அல்லவா.. அப்பாவால் முடியாதென்று. இன்று அவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்தால் கண்களில் நீர் பெருக்கெடுக்கிறது.

அப்பாவுக்குத் தமிழும் குடும்பமும் ஒன்றுதான். இரண்டுக்கும் சம மரியாதை முக்கியத்துவம் அவரிடம் கிடைக்கும்.

**அவரது தமிழ்ப்பணி, தமிழ்ப்பற்று குறித்து..**

அவரின் இலக்கியப் பணியைக் கூற வேண்டுமென்றால் சொற்களால்

விவரிக்க முடியாதது. உணவைக் கூடப் புறக்கணித்துவிட்டு 24 மணிநேரமும் நூல் பணிகளிலேயே மூழ்கியிருப்பார். சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு ஏதேனும் பிழை திருத்துவது, எழுதுவது என்று எப்போதும் ஏதோ ஒரு பணியைச் செய்துகொண்டே இருப்பார். அரிதாக எப்போதாவது நாற்காலியில் அமர்ந்தபடியே தூங்கிக்கொண்டிருப்பார். எப்போதும் நூல்கள், தமிழ், எழுத்து என்று மட்டுமே வாழ்ந்தவர். அவருடைய தமிழ்ப்பற்றுக்கு அவரது வாழ்வே சான்று.

**கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தன்னுடைய முதல் நூலை அச்சிடுவதற்காக மாருதி பதிப்பகத்திற்கு வருகிறபோதெல்லாம் புலியூர்க்கேசிகனைப் பார்த்திருப்பதாகவும் அவரின் மீசை பற்றியும் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். மேலும் பல்வேறு ஆளுமைகள் குறிப்பிட்ட பொதுவான செய்தி அந்த மீசை. அப்படியிருக்க, சிலை திறப்பில் மீசை இல்லாத தோற்றத்தைத் தேர்வு செய்யக் காரணமென்ன..**

அப்பாவின் மீசை எனக்கும் மிகவும் பிடித்தமான ஒன்று. அவரது கம்பீரம் பற்றிப் பேசும்போதெல்லாம் இந்த மீசையைக் குறிப்பிட்டுப் பேசுவார்கள். வாழ்கிற காலத்திலேயே கட்டபொம்மன் போல மீசை வைத்திருப்பார் என்று பலரும் கூறக் கேட்டிருக்கிறேன்.

ஆரம்ப காலங்களில் அப்பா மீசை வைத்ததில்லை. அப்போதெல்லாம் மீசை வைப்பது என்பதே அவருக்குப் பிடிக்காத ஒன்று. பாரதிதாசனின் அணுக்கத் தொண்டராக இருந்த அப்பாவின் தம்பி, பிச்சையப்பன் சித்தப்பா மறைவிற்குப் பிறகு அவரின் நினைவாகவே மீசை வைத்துக்கொண்டார். நூற்றாண்டு விழாவில் திறக்கப்பட்ட சிலை அவரின் இளமைக்காலத் தோற்றம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் மேலாளராகப் பணிபுரிந்த காலகட்டத்தில் எடுக்கப்பட்டது. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. எங்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது, எனக்கு வயதாகிவிடுமா? பற்கள் விழுந்துவிடுமா? கொம்பை ஊன்றுவேனா? என்றெல்லாம் கேட்பார்கள். அப்பாவுக்கு வயதான தோற்றம் மீது விருப்பம் கிடையாது. எப்போதும் இளமையாக இருக்க வேண்டும் என நினைப்பார்கள். அப்படித்தான் 69 வயதிலும் இருந்தார்கள். அவர்களின் விருப்பப்படியே அமைய வேண்டும் என்பதற்காகத்தான் இளமைக்காலத் தோற்றத்தில் சிலையை அமைத்திருந்தேன்.

**புலியூர்க்கேசிகனின் நூல்கள் நூற்றுக்கும் மேற்பட்டவை எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் 85 வரையிலான நூல்களின் பட்டியல்தான் கிடைக்கிறது...**

அப்பாவின் நூல்களை ஒருமுறை திரட்டும் பணிகளில் ஈடுபட்டேன். அதுவரை வெளிவந்த அனைத்தையும் பட்டியலிட்டேன். பதிப்பு ஆண்டு முதலாக அந்த நூற்பட்டியலில் இடம்பெற்றிருந்தது. இதனைக் கண்ட அப்பா கேட்டார், இவ்வளவு நூல்கள் எழுதியிருக்கிறேனா? கண்பட்டுவிடப் போகிறதடா! என்று. அன்று தொகுத்த பட்டியல்தான் கௌரா பதிப்பகத்திற்கு வழங்கப்பட்டது. அன்றே அப்பாவின் நூல்களின் எண்ணிக்கை நூறைத் தாண்டியது. ஆனால், இன்று விக்கிப்பீடியா போன்றவற்றில் 80, 90 நூல்களே கிடைக்கின்றன. விரைவில் மற்ற நூல்களின் பெயர்களையும் பட்டியலில் இணைப்பதற்கான பணியில் ஈடுபட்டுள்ளேன். அந்தப் பட்டியல் அப்பா இருக்கிறபோது அவரது அறையில் அவர் முன்னிலையில் நான் தொகுத்தது. அதன்பிறகு, அவரது நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தாரும், நண்பர்கள் சிலரும் நூல்களையும் நூல்பட்டியல்களையும் தந்துதவினர். மொத்த நூல்களின் பெயர்களும் அடங்கிய என் பழைய அந்தப் பட்டியலை விரைவில் தேடி எடுத்து முழுப் பட்டியலையும் புதுப்பிப்பேன்.

**உளவியல் சார்ந்த சில நூல்களில் சிக்மண்ட் பிராய்ட் பற்றிய செய்திகளும் அவரின் கோட்பாடுகள் குறித்தும் புலியூர்க்கேசிகன் நிறையப் பேசியுள்ளாரே! அன்று சிக்மண்ட் பிராய்ட் பற்றியெல்லாம் எப்படி அறிந்திருந்தார்?**

அப்பாவிற்கு ஆங்கில நூல்கள் வாசிக்கப் பிடிக்கும். வீட்டில் ஆயிரக்கணக்கான நூல்கள் இருக்கும். அவர் இயற்றிய நூல்களே நூற்றுக்கு மேற்பட்டவை. ஆங்கில நூல்கள், ஆங்கில நாளிதழ், ஆங்கிலத் திரைப்படங்கள் என ஆங்கிலத்தின் மீதும் ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

எனவே, பிராய்டு போன்றோரின் நூல்களையும் தத்துவங்களையும் அறிந்திருந்தார். எதுவானாலும் அவை

மக்களுக்கும் பயன்பட வேண்டும், படிக்கத்தெரிந்த எவரும் அவற்றைக் கற்று இன்பமெய்த வேண்டும் என்பதே அவரது நோக்கம். எளிய உரையாக்கத்தின் நோக்கம் கூட மக்களுக்கு இலக்கியங்கள் சென்றுசேர வேண்டும் என்பதே. உளவியல் நூல்களில் சிக்மண்ட் பிராய்டின் கோட்பாடுகள் எளிய முறையில் விளக்கப்பட்டிருப்பதற்கும் ஆங்கில அறிவும் வாசிப்புமே காரணமாக இருந்திருக்கும்.

**நூற்றாண்டு விழா குறித்து..**

அப்பாவின் நூற்றாண்டு விழா! என் வாழ்நாளில் நான் கொண்டாட வேண்டும் என விரும்பிய என் நீண்டகாலப் பேரவா. அப்பாவின் நூற்றாண்டு தொடங்கியதும் என் விருப்பத்தை வெளிப்படுத்தினேன். நான் மகனாகக் கருதும் தமிழாய்வு அறக்கட்டளை சூலூர் சிவா என்னோடு இணைந்தார். அவர்தான் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்தார். அதோடு கனடாவில் நான் பணியாற்றும் ஆப்லெர் எச்டி கனடா நிறுவனரும் எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அப்படித்தான் இந்த விழா திட்டமிடப்பட்டது. எனது புலியூர்க்கேசிகன் இலக்கியப் பேரவையின் துணைத்தலைவர் திவாகரன், இயக்குநர் கே. பாலச்சந்தரிடம் பணிபுரிந்த ராபின் போன்றவர்களும் ஆப்லெர் எச்டி கனடா நிறுவனத்தின் பணியாளர்கள் எடிட்டர் கண்ணன், செல்வி சௌமியா, சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளர் வே. செவ்வந்தி ஆகியோருடன் விழாப் பணிகள் நடைபெற்றது. திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் அவர்களும் பல்வேறு வகைகளில் துணை நின்றார். சென்னை அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் விழா நடைபெற்றது. சிலை திறப்பு மட்டுமின்றிப் படைப்பாக்கங்கள் பற்றிய ஆய்வு நூலொன்றும் நூற்றாண்டு விழா மலரும் வெளியிடப்பட்டது. மூத்த தமிழ் அறிஞர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது. அவரது பெயரால் தமிழ்ப்பணி செய்துவரும் ஆளுமைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. தவிர, புதிதாக உரையெழுதிக்கொண்டிருக்கும் உரையாசிரியர்கள், நூலாசிரியர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது.

நூற்றாண்டு விழாக் கனவு பல்வேறு ஆளுமைகளின் நடுவில் மிகப்பெரிய அளவில் நடைபெற்றது பெரும் மனநிறைவைத் தந்திருக்கிறது.

**நீங்களும் ஒரு படைப்பாளியாக உருவாகியிருக்கிறீர்கள். உங்களை எப்படி உருவாக்கிக்கொண்டீர்கள்?**

ஒருமுறை அப்பாவிடம் சென்று கவிதை எழுத வேண்டுமென்றேன். கம்பராமாயணப் பாடல்களைப் படிக்கச் சொன்னார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சங்க இலக்கியங்கள் என யாவற்றையும் கற்று நெட்டுருச் செய்ய வேண்டும்; நிறைய்ய சொற்களை முதலில் அறிந்துகொள் என்றார். அதுதான் என்னை நானே உருவாக்கிக்கொள்ளக் காரணமாக இருந்தது. முதன்முதலாக ஒரு கவிதை எழுதி அப்பாவிடம் காட்டினேன். பாராட்டினார். அவரிடம் பாராட்டுப் பெறுவது என்பது அவ்வளவு எளிதல்ல.

**தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? உங்களது தமிழ்ப் பணிகள் பற்றிக் கூறுங்கள்...**

தற்போது நிறைய எழுதிக்கொண்டிருக்கிறேன். அப்பாவின் பெயரில் இலக்கியப் பேரவையை நிறுவி 28 ஆண்டுகளாகத் தமிழ்ப்பணிகளை மேற்கொண்டு வருகிறேன். என்னுடைய கவிதை நூல்களும், சங்க இலக்கியக் கட்டுரை நூல்களும், பிற தொகுப்புகளுமாக இதுவரையிலும் 25 நூல்களை வெளியிட்டிருக்கிறேன். குழந்தைகளுக்குத் தூய தமிழ்ப் பயிற்சி அளித்து வருகிறேன். ஆப்லெர் எச்டி கனடா சேனலில் செய்தியாளராகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றி வருகிறேன்.

**இனிவரும் நாட்களில் உங்களது எதிர்காலத்திட்டம் என்னவாக இருக்கும்?**

வரும் காலங்களில் அப்பாவுக்காக மணிமண்டபம் அமைப்பது, அவரது வரலாற்றை எழுதி வெளியிடுவது என்பன அப்பா குறித்தான எனது எதிர்காலத்திட்டங்களாக இருக்கின்றன.

அவரது பணிகள் மக்களுக்கானவை. அதை மக்கள் சரியாக உணர்ந்திருக்கிறார்கள். அதனால்தான் ஆண்டுதோறும் அவரது உரைகள் அதிகளவில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. மக்கள் உணர்ந்ததைப் படித்த பேராசிரியர்களும் உணர வேண்டும். அதுவே என் வேண்டுகோள். ■

கரிகாலன்






# தேநீர் சாலை

## பூக்களை மலர்த்துவது!

~

சில நாட்களாகவே கவிதைகள் அதிகம் எழுத முடியவில்லை. ஆறு என்பது பொங்கிப் பிரவகிப்பது மட்டும் அல்ல. வெள்ளை மணற்பரப்பில் நிரப்பிவைத்திருக்கும் நிலவொளியின் மௌனமும்தான்.

'உங்களை உயிருள்ள கவிதையாக மாற்றிக்கொள்ளுங்கள்' என்ற மௌலானா ரூமியின் வாசகத்தைப் படித்தபின் அவரது சீடர்களுள் நானும் ஒருவனாகிப்போனேன்.

என்னில் ரூமி பல பாத்திரங்களை வகிக்கிறார். கவிஞனாக, ஆன்மீக குருவாக, வாழ்வின் பொருள் கூறும் ஞானியாக, பிரபஞ்ச ரகசியங்களை விளக்கும் தத்துவவாதியாக ஆற்றுப்படுத்துபவர் ரூமி.

மெவ்லானா, மெவ்லேவி அல்லது மவ்லவி என்றால் 'எங்கள் எசமானர்' என்று பொருள். மௌலானா அடிமைத்தனம் ஒழிக்க வந்த எசமானர். ஆஃப்கானின் பால்க்கிலிருந்து *(Balkh)* துருக்கியின் கொன்யாவரை நீண்டது அவரது ஞானத்தேடல். மரபுவழி மத ஆசிரியராகத் தன் 35 வயதுவரை இருந்த ரூமியிடம் மிகப்பெரும் தாக்கத்தை உருவாக்கியவர் ஷம்ஸ் தப்ரிஸி. ரூமியின் ஞானகுரு. அவர் ஒரு நாடோடி டெர்விஷ். ஏழ்மையின் மூலம் கடவுளை நெருங்க முயற்சி செய்த ஒரு முஸ்லீம். ஷம்ஸுடனான தொடர்பு ரூமியின் உலகம் மற்றும் வாழ்வு குறித்த பார்வையை மாற்றியிருந்தது.

திடீரென ஏன் ரூமி குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறேன்? தோன்றலாம்.

ரூமி போன்றவர்கள், தாங்கள் இந்த உலகுக்குக் கொண்டு வந்த ஸ்தூல உடலை எடுத்துக்கொண்டு எங்கும் சென்றுவிடவில்லை. எல்லாவற்றையும் எப்படி பார்ப்பது? எனத் தம் விழிகளை மானுடகுலத்துக்கு விட்டுச் செல்கிறார்கள். உலகம் முழுமையையும் எப்படி நேசிப்பது? என மனிதர் பயில அவர்களுக்குத் தம் இதயத்தை விட்டுச் செல்கிறார்கள். எந்தப் பாதையில் நாம் நடப்பது? என்பதற்கு நல்வழியில் தோய்ந்த தம் பாதங்களை நம் பொருட்டு விட்டுச் செல்கிறார்கள்.

அப்படி ரூமியில் தோய்ந்த ஒரு நண்பர் ரமீஸ் பிலாலி. திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

*What you seek is seeking you* என்பார் ரூமி. நான் எதைத் தேடிக்கொண்டிருந்தேனோ அது பேரா. ரமீஸ்வழி என்னைத் தேடி வந்தது. ஆம், நண்பர் ரமீஸ் பிலாலி தான் மொழிபெயர்த்திருந்த ரூமியின் 'ரகசிய ரோஜா' மற்றும் அவரது படைப்பான '..என்றார் ஸூஃபி' இரண்டு நூல்களையும் அனுப்பியிருந்தார்.

மாலை தோட்டத்தில், என் காஃபி மேசையில் சூஃபிகளோடு ஒரு சூஃபியாக ரூமி அமர்ந்திருந்தார். உன் இதயத்தில் ஒரு மெழுகுவர்த்தி உள்ளது. அது எரியத் தயாராக உள்ளது. உன் ஆன்மாவில் ஒரு வெற்றிடம் உள்ளது. அது நிரம்பத் தயாராக உள்ளது. நீ அதை உணர்கிறாயா? இல்லையா? ரூமிக்கு அருகில் அமர்ந்திருக்கும் ரமீஸ் பிலாலி கேட்டார்.

உலகம் ஒரு தோட்டம். அந்தத் தோட்டத்திற்கு நம் மனதைத் தவிர்த்து எல்லை இல்லை! என் மாலைத் தோட்டத்தில் ஞானத்தின் ரோஜாக்கள். ரகசிய ரோஜா நூல் என்னை இன்னும் ரூமியை நோக்கி நெருக்கியது. ரூமியின் கவிதைகளோடு அவரது வாழ்வின் சிறு சிறு துளிகளையும் என் கோப்பையில் நிரப்பியது.

குறிப்பாக ரூமியின் குருவான ஷம்ஸ் குறித்து அறிந்துகொள்ள இந்நூலில் உள்ள கட்டுரை எனக்கு வழி செய்தது. ரூமியின் கவிதைகள் ஒவ்வொன்றுக்கும் கீழ் பிலாலி கொடுத்திருக்கும் குறிப்புகள் இந்த நூலைக் கனம் செய்கின்றன. ஒரு கவிதைக்குக் கீழ் இப்படி ஒரு குறிப்பு. 'காதல் என்பது இறைவன் இல்லாத அனைத்தையும் எரிக்கும் நெருப்பு' எனும் கபீருர் ரிஃபாயி கூற்றை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

திகைத்துப்போனேன்.

உங்கள் புத்திசாலித்தனத்தை விற்றுத் திகைப்பை வாங்குங்கள்! என்றவர் ரூமி. புத்திசாலித்தனம் என்பது அதிகாரம் கட்டமைத்த அறிவின் நிலை. திகைப்புதான் இந்த அறிவில் உடைப்பை நிகழ்த்துகிறது. விடுதலை ஒளியை ஏற்றுகிறது.

..என்றார் ஸூஃபி நூல் ரமீஸூம் ஒரு ஸூஃபிதான் என்பதைக் கட்டியம் கூறுவது.

நல்ல மழை. தெருவில் சிறுவன் ஓடுகிறான். ஏன் பையன் ஓடுகிறான்? சூஃபி கேட்கிறார். நனைந்துவிடக் கூடாதே! என்கிறார்கள். ஆனால் நனைந்துகொண்டுதானே ஓடுகிறான். புன்னகைத்தார் சூஃபி.

'மரத்தை ஏன் வெட்டுகிறாய்?'

சித்தன் கேட்டான்.

'வீடு கட்ட'

பதில் சொன்னான் குடியானவன்.

'மரமே வீடுதானே!'

என்றான் சித்தன்.

இது நான் புலன் வேட்டையில் எழுதியது. சித்தன், சூஃபி மரபு எல்லாம் ஒரே சிந்தனை மரபின் இரண்டு பக்கங்கள்.

கலை ஒரு புனிதமான பொய். அல்லாமா இக்பால் கூற்று. அதன் புனிதம் உன்னைச் சத்தியத்திடம் இட்டுச் செல்லும்! என்கிறார் நம் பிலால் சூஃபி.

ஒருவர் எப்போது சூஃபியாகிறார்? அவர் தூக்கம் விழிப்பாகவும் விழிப்பு தூக்கமாகவும் மாற வேண்டும். தூக்கத்திலும் பிரக்ஞை, தூக்கத்தைப்போல விழிப்பிலும் நிம்மதி. இந்நிலையை எட்டும்போது சூஃபி நிலை எய்தலாம் என்கிறார் நம் பிலால் சூஃபி.

பிலால் எழுதுகிறார். கையால் அல்ல. ஆன்மாவால். ஏனென்றால் அவர் புத்தகப் பூச்சி அல்ல. பட்டாம்பூச்சி. நீங்களும் பட்டாம்பூச்சியாக மாறினால் ரூமியில், சூஃபியில் தேனருந்தலாம். பிறகு நீங்கள் ரூமி கூறுகிறபடி குரலை உயர்த்த மாட்டீர்கள், வார்த்தையை உயர்த்துவீர்கள்.

ஆம், மழைதான் பூக்களை வளர்க்கிறது. இடி அல்ல!

•

## தேசிய விருதுகள் - ஒரு பார்வை!

~

சிறந்த நடிகருக்கான தேசிய விருதை அஜய் தேவ்கானோடு சூர்யா பகிர்ந்துகொண்டுள்ளார். போலவே ஜீ.வி.பிரகாஷ் (கையிலே ஆகாசம்.. மறக்க முடியாத பாட்டு) சிறந்த பின்னணி இசைக்கான விருதைப் பெற்றுள்ளார். திறமையான இரு தமிழ்க் கலைஞர்கள் தேசிய விருது பெறுவது மகிழ்வளிக்கிறது. இருவருக்கும் வாழ்த்துக்கள்.

சூரரைப் போற்று திரைப்படம் வெளியானபோது அப்படத்தைச் சற்று கடுமையாக விமர்சித்திருந்தேன். கோபிநாத் அய்யங்காருக்குக் கருப்புச் சட்டை மாட்டி, தமிழ்த் தேசியம் பேசும் நெடுமாறனாக வடிவமைக்கப்பட்ட கதை சூ.போ!

அழுக்கையும், ஊழலையும், பேராசையையும், வன்முறையையும் கொண்டது கார்ப்ரேட் சமூக அமைப்பு. இவ்வமைப்பை லட்சிய தாகம், நேர்மை, உண்மை, உழைப்பு கொண்ட தனி மனிதன் மாற்றிவிட முடியும்! என்கிற வழக்கமான எம்ஜிஆர் ஃபார்முலா படம் சூரரைப் போற்று.

Anyway சூர்யாவுக்கு விருது கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி!

அதேவேளை சிறந்த மலையாளப் படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திங்களாழ்ச்ச நிஷ்ச்சயம் (திங்கள் கிழமை நிச்சயம்) நல்ல படம். பிள்ளைகளின் காதலுக்கு ஆதரவான இப்படத்தில், ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தின் ஒருநாள் காட்சிகளை, நம் முன் வைத்திருப்பார் இயக்குநர் சென்னா ஹெக்டே. குடும்பம் ஒரு கதம்பம். அதில் வெவ்வேறு வண்ணங்கள், வாசனைகள். ஒவ்வொரு மலரையும் அதனதன் அடையாளத்தோடு அங்கீகரித்தால் மட்டுமே கதம்பத்தை உருவாக்க முடியும்.

அப்பாக்களின் பழமைவாத மனநிலையிலிருந்து ஒதுங்கிப் புதிய வெளிச்சத்தைத் தேடும் பிள்ளைகளை வாழ்த்தி வழியனுப்பத் தந்தைகளை அறிவுறுத்தும் படம் திங்களாழ்ச்ச நிஷ்ச்சயம்.

அய்யப்பனும் கோஷியும் படத்துக்காக சிறந்த இயக்குநர் விருது மறைந்த மலையாள இயக்குநர் சச்சிக்குக் கிடைத்திருப்பது நிறைவு.

இவரது சினிமாவில் நாயகன், வில்லன் பாத்திரங்கள் இல்லை. மனிதர்களே இருந்தார்கள். அவர்களிடம் நாயக குணமும் மூர்க்க குணமும் நிரம்பியிருந்தன. தங்களது மூர்க்க குணத்தை நின்று அவதானிக்க காலம் அவர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்கவில்லை.

இழப்புகளையும் வலிகளையும் தாங்கி நைந்துபோன நிலையில் அவர்கள் மற்றமையைச் *(others)* சிந்தித்தார்கள். *ego, self respect, self esteem* பற்றி மிக நுணுக்கமான வகையில் பேசியிருந்த படங்கள், அவரது அய்யப்பனும் கோஷியும், டிரைவிங் லைசென்ஸ். இவை நம்மை நாம் சிறிது கழுவிக்கொள்ள உதவி செய்த கலைப்படைப்புகள்.

ஒரு பாடல் என்பது வெறும் பாட்டு மட்டுமில்லை. அது ஒரு பண்பாடு. அதுவும் இந்தப் பாடல், நாட்டுப்புறப் பாடல். இத்தகைய நா.பு. பாடல்கள், தாம் எழுந்த நிலத்தின் உணர்ச்சிகளைப் பிழிந்து கொடுக்கக்கூடியவை.

அய்யப்பனும் கோஷியும் படத்தின் டைட்டில் திரையில் விரியும். அப்போது ஒரு மாபெரும் துக்கத்தைச் சொல்வதுபோல 'கலக்காத்தா சந்தனமேரம் வெகுவோகப் பூத்திருக்கும்' பாடல் பின்னணியில் ஒலிக்கும். படம் எந்தத் திசையில் பயணிக்கும் என்பதற்கேற்ப நம் மனதை டியூன் செய்துவிடுகிற பாடல்.

அட்டப்பாடி, கேரள - தமிழக எல்லைப்புறத்தில் அமைந்திருக்கும் கிராமம். அ.கோஷியும் கதைக் களன். மலைவாழ் மக்கள் அடங்கிய நிலம்.

வழக்கமான சினிமா பாடகர்களைப் பாட வைத்திருந்தால் இந்தப் பாடல் இவ்வளவு தூரம் எடுபட்டிருக்காது. சினிமாவில் நாம் எந்த நிலத்தைக் காட்டப்போகிறோமோ, அங்கிருக்கும் வளங்களைப் பயன்படுத்த வேண்டும். சச்சியின் நஞ்சம்மா தேர்வு அத்தனைப் பொருத்தம். தான் ஒரு பாடகியா? என்பதெல்லாம் நஞ்சம்மாவுக்குத் தெரியாது. ஆனாலும் சச்சியின் தேடல் நஞ்சம்மாவை ஒரு பாடகியாக்கி உலகத்தின் முன் நிறுத்தியிருந்தது. அவருக்கும் வாழ்த்துக்கள்.

சினிமா என்பது சமகாலத் தொழில்நுட்பத்தில் அமைந்தால் மட்டும் போதாது. அது சமகால அரசியலை, பண்பாட்டைப் பேசவேண்டும். அப்படி பேசிய படங்கள் காலா, அசுரன், ஜெய்பீம் போன்றவை. இதைக் கருத்தில் கொண்டு நம் தமிழ்த் திரைக் கலைஞர்கள் இயங்கும்போது தமிழர் வாழ்வு மேம்படும்! ■

படைப்பு
சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..